REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 16+16 விலை - 40 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :36 கதிர் : 03 | கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை | 29 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொழும்பிலிருந்து தப்பி வந்தவரே காரைநகர் தொற்றாளர்

15 ›

## வேலணையிலும் ஒருவருக்கு கொரோனா

15 ›

## 17 கடைகள், 3 தவறணைகள் 3 மருத்துவமனைகள் முடக்கம்

15 ›

## காரைநகரில் ஆசிரியரும் தனிமைப்படுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் தொற்றாளருடன் நெருங்கிப் பழகிய ஆசிரியர் ஒருவரும் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளார். இந்த 15 ›

## கொரோனா காவு 109 மேலும் இருவர் சாவு

தொற்று 487

கொழும்பு, நவ. 29

கொரோனா தொற்றால் மேலும் 2 பேர் உயிரிழந்துள்ள னர் என்று சுகாதார 15 ›

## மாணவர்களின் தண்டனையை உறுதிப்படுத்திய பேரவை!!!

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கிடையில் கடந்த மாதம் 8 ஆம் திகதி 15 ›

### தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரின் பி.சி.ஆர். முடிவுகளைப் பொறுத்து

# குடாநாட்டை முடக்குவது தொடர்பில் தீர்மானம்!!!

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 29

காரைநகரில் கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுள்ளார். பெருந்தொகையான மக்கள் வந்து செல்லும் இடங்களுக்கும் சென்றுள்ளார். பொது நிகழ்வுகளிலும் பங்கேற்றுள்ளார். அவருடன் தொடர்புகளைப் பேணியவர்களை இனம் கண்டு தனிமைப்படுத்தியுள்ளோம். அவர்களுக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனை முடிவுகளைப் பொறுத்தே யாழ்ப்பாணத்தை முடக்குவதா இல்லையா என்பதைப் பற்றி தீர்மானிக்கப்படும்.

15 ›

*முச்சந்தி முரளி*

"முந்தி உந்தச் சோதினை முடிவுகளுக்கு வெயிட் பண்ற மாதிரி இப்ப இந்த பி.சி.ஆர். முடிவுக்காகவும் வெயிட் பண்ண வைச்சிட்டாங்களே"



## 228 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் மற்றும் வேலணையில் கண்டறியப் பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணிய 228 குடும்பங் 13 ›

## தனிமனிதனின் பொறுப்பற்ற செயல் சமூகத்துக்குப் பெரும் பாதிப்பு!!!

*விசனிக்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்*



யாழ்ப்பாணம், நவ. 29

ஒரு தனிமனிதனின் சமூகப் பொறுப்பற்ற தவறான நடவடிக் கையால் ஏராளமானோர் பாதிக் கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிக ழாது தவிர்ப்பதற்கு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய 04 ›

### ஒரு லட்சம் காணித் துண்டுகள்

## வடக்கு, கிழக்கிலிருந்தே அதிக விண்ணப்பங்கள்

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

ஒரு இலட்சம் பேருக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலிருந்தே அதிக விண்ணப்பங்கள் 15 ›

உள்ளே...

### பலஸ்தீன இறைமைக்காக

## பிரதமர் மகிந்த வாழ்த்து!

கொழும்பு, நவ. 29

பலஸ்தீனம் என்ற இறையாண்மை கொண்ட நாடு எதிர்காலத்தில் உலக வரைப்படத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று பலஸ் தீன ஒற்றுமைப்பாடு 04 ›

## வங்காள விரிகுடாவில் மற்றொரு தாழமுக்கம்

### வடக்கை ஊடறுத்துச் செல்லும் 1ஆம் திகதியிலிருந்து கனமழை

யாழ்ப்பாணம், நவ. 29

வங்காள விரிகுடாவில் நேற்றுக் காலை மற்றொரு தாழமுக்கம் உருவாகியுள்ளது. 16 ›




## பிணையில் அருட்தந்தை விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29


மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் 15 ›

## இன்று கார்த்திகை விளக்கீடு அதையும் தடுத்து விடாதீர்கள்!

### இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 29

இந்துக்கள் பாரம்பரியமாக கடைப் பிடித்து வரும் திருக்கார்த்திகை 16 ›



உலகின் எப்பகுதியில் இருந்தும் பணத்தைப் பெற்றுக் கொள்ள

WesternUnion WU

தற்போது செலான் வங்கியில்

மேலதிக விபரங்களுக்கு

011 200 88 88

www.seylan.lk

செலான் வங்கி

# புலிகளின் சர்வதேச வலையமைப்பில் கைவைக்கின்றது கோத்தாபய அரசு!

கொழும்பு, நவ. 29

விடுதலைப் புலிகள் அமைப்புக்காக சர்வதேச மட்டத்தில் நிதி திரட்டுதல் உட்பட உதவிகளை வழங்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் சர்வதேச பொலிஸார் ஆகியோரின் ஒத்து ழைப்புடன் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.



சிங்கள வார இதழ் ஒன்றுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'புலிகள் அமைப்புக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் உதவிகள் வழங்கும் நபர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பொன்றுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றமை சட்டவிரோத நடவடிக்கையாகும். எனவே, இந்தவிவகாரம் தொடர்பில் சர்வதேச பொலிஸார் மற்றும் அந்தந்த நாடுகளின் அரசுகளுடனும் பேச்சு நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன், வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்கு உதவிகள் வழங்கும் நபர்கள், அவர்களுடன் இங்கிருந்து தொடர்புகளைப் பேணுபவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்களைப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் குற்ற விசாரணைப் பிரிவினர் ஆகியோர் திரட்டிவருகின்றனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி தகவல்கள் அத்தியாவசியமாகும்.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவோர் குறித்து, பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. அதேபோல மாவீரர் தினத்தை இணைய வழியின் ஊடாக கடைப்பிடித்த சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நல்லாட்சியின்போது புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்பட்டது.

குறித்த காலப் பகுதியில் சர்வதேச பொலிஸாருடன் உரிய வகையில் இணைந்து செயற்படவில்லை. இதனால் விடுதலைப் புலிகள் அமைப்பு சர்வதேச ரீதியில் சுதந்திரமாகச் செயற்பட ஆரம்பித்தது.

அவ்வாறான நபர்களுக்கு எதிராகத்தான் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம்.' என்றார். (கு-44,22)

## அடுத்த பிரதமர் பஸில் ராஜபக்ச

### அரச மட்டத்தில் பேச்சு

கொழும்பு, நவ. 29

பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அடுத்து, பிரதமர் பதவியை பஸில் ராஜபக்சவுக்கு வழங்க வேண்டும் என்கின்ற பேச்சு அரச மட்டத்தில் உலா வருகின்றது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச, தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச்செய்த பின்னரே நாடாளுமன்றுக்குப் பிரவேசிப்பார் என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றுக்கு வருவாரா இல்லையா என்கிற சந்தேகம் இன்னும் இருந்துகொண்டுதானிருக்கின்றது. இந்த நிலையில் அரச தரப்பிலுள்ள ஓரிரு அமைச்சர்கள் இணைந்து, ராஜபக்ச குடும்பத்துடன் நெருக்கமான ஓர் அமைச்சரிடம் இதுபற்றி வினவியுள்ளனர்.

அதற்கு பதிலளித்துள்ள அந்த அமைச்சர், பஸில் ராஜபக்ச இப்போதைக்கு நாடாளுமன்றுக்குப் பிரவேசிக்க மாட்டார் என்று கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு-22,44)

## சஜித் கட்சியின் கன்னி மாநாடு!

கொழும்பு, நவ. 29

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது சம்மேளனம் நாளை அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சிகளின் பிரதிநிதிகளும் மட்டுமே மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்திக்கான புதிய யாப்பும் வெளியிடப்படவுள்ளது. (கு-44)

## பி.பி.சியின் சிங்கள ஒளிபரப்பு நிறுத்தம்

கொழும்பு, நவ. 29

பிரிட்டனிலிருந்து ஒளிபரப்பாகின்ற பி.பி.சி உலக சேவையின் சிங்கள சேவை நிறுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதியுடன் சிங்கள சேவை நிறுத்தப்படவுள்ளது என ஐக்கிய இராஜ்ஜிய அனைத்து ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் டொலர்கள் மீதமாகின்றது எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பி.பி.சியின் சிங்கள ஒளிபரப்பு மூடப்பட்டாலும், சமூக வலைத்தளங்களில் அதன் சேவை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## புதுக்குடியிருப்பில் இருவர் வெடிமருந்துடன் கைது!

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இரு இளைஞர்கள் 200 கிராம் சி4 வெடிமருந்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாவீரர் தினமான நேற்றுமுன்தினம் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனப் பகுதியில் இருந்து பொலிஸார் இந்த வெடிமருந்தை மீட்டுள்ளதோடு, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு இளைஞர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-19)



## சங்கானையில் முதியோருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 29

சங்கானை தேவாலய வீதியில், வெளிநாட்டில் உள்ள ஒருவரின் வீட்டை பராமரிக்கும் வயோதிப ஆணும் பெண்ணும் இனந்தெரியாதோரால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளனர். சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மார்க்கண்டு வேலாயுதம் (வயது 64), தங்கராஜா புவனேஸ்வரி (வயது 56) ஆகியோரே தாக்குதலுக்கு இலக்காகி வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் வாள் ஒன்றும் மீட் கப்பட்டுள்ளது. அவர்கள் தாக்கப்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. கொள்ளை தொடர்பிலும் தகவல்கள் இல்லை என்றும் பொலிஸார் கூறினர். (கு-26,111)

## கரம்பகத்தில் களவாடப்பட்டன மடிக்கணினிகள்

கொடிகாமம், நவ.29

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து இரண்டு மடிக்கணனிகளும் தொலைபேசி யொன்றும் திருடப்பட்டுள்ளன. நில அளவையாளர் ஒருவரின் வீட்டிலிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

அந்த நபர் தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்ப்பதற்காக தன்னுடைய வீட்டோடிருந்த அலுவலக அறையைப் பூட்டாமல் வீட்டுக்குள் சென்றுள்ளார். நிகழ்ச்சி முடித்து மீண்டும் சென்றபோது அலுவலக அறையிலிருந்த இரண்டு லட்சம் பெறுமதியான இரண்டு மடிக்கணனிகளும் தொலைபேசியும் திருட்டு போயிருந்தமையை அவதானித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-159)

## நல்லை மண்ணில் புதியதோர் ஆதீனம்

யாழ்ப்பாணம், நவ. 29

திருக்கார்த்திகைத் திருநாளான இன்று காலை 10 மணிக்கு நல்லைக் கந்தனின் மணி ஒலிக்கும் நேரத்தில் யாழ் நல்லை மண்ணில் புதியதோர் ஆதீனம் உதயமாகும் என்று தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.



ஞானத்தைப் போதிக்கும் மடமாகவும், தமிழே அறிவாகவும் அரனே வடிவாகவும் உதயமாகவிருக்கும் ஆதீனமானது, அண்ணாமலையான் சோதி வடிவமாக காட்சி தரும் நன்நாளில் எங்கள் நிலமெங்கும் ஆன்மீக ஒளித்திரளாய் அமைய வேண்டும் என பலரும் வேண்டி விரும்பி நிற்கின்றனர். (ம)




Illustrated by
Shumaila Musafer

UNDP



# இன்றைய நாள்

**மேடம்:** புதிய திட்டம் சற்று தாமதமானாலும் வெற்றிகரமாக நிறைவேறும். பணியாளர்கள் முன்னேற்றமான சூழ்நிலையை காண்பீர்கள். பயம் நீங்கும். குடும்பத்தில் சுபச்செலவுகள் ஏற்படும். மன நிறைவு கிடைக்கும்.

**இடபம்:** உற்ற நண்பர்களிடம் அதிக உதவிகளை எதிர்பார்க்க இயலாது. வெளியில் சொல்ல முடியாமல் இருந்த பிரச்சினைகள் தீரும்.விரயங்கள் குறையும். பணியிடத்தில் நன்மை உண்டு.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை நிர்வாகம் புரிந்துகொள்ளும். திருமணத்துக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**கடகம்:** எதிரிகள் என்று நினைத்தவர்கள் உங்களுக்கு நன்மை செய்வார்கள்.உங்களின் குடும்ப விஷயங்களை அடுத்தவரிடம் பகிர வேண்டாம். நெருக்கமான நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** பணியாளர்கள் எடுத்த வேலையை முடிக்க சற்றுத் திண்டாடுவீர்கள். பெண்களின் திட்டங்கள் நினைத்ததை விட வேகமாக நிறைவடையும்.குழந்தைகள் உடல் நலனில் கூடுதல் கவனம் வேண்டும்.

**கன்னி:** குடும்ப அமைதி ஓரளவு திருப்தி தரும். பணிச்சுமை கூடும். குடும்பத்தின் கவலைகள் தீரும். பணியாளர்கள் நன்மை அடைவர்.பேச்சில் விழிப்பு தேவை. பணியில் அலட்சியம் வேண்டாம்.

**துலாம்:** பயம் வரும். தவறு செய்யும் நபர்களுடன் நட்பு வேண்டாம்.போட்டி, பந்தயங்களில் பங்கேற்பவர்களுக்கு நற்செய்தி கிடைக்கும்.உங்கள் மனதில் உற்சாகம் கூடும்.

**விருச்சிகம்:** மருத்துவ சிகிச்சையை அலட்சியமின்றி மேற்கொள்ளுங்கள் தன்னம்பிக்கையும், தைரியமும் குறைய அனுமதிக்காதீர்கள்.நம்பிய நபர்கள் நேர்மையாளராக இருப்பார்கள்.

**தனுசு:**எதிரி என்று நினைத்த நபர்களால் நன்மை அடைவீர்கள். புகழ் கூடும்.வழக்கமான பாணியை விட்டுப்புதிய செயல் செய்து மகிழ்வீர்கள்.காதலில் ஈடுபட்டவர்கள் கட்டுப்பாடாய் இருப்பது நல்லது.

**மகரம்:** வாகன பிரச்சினை தீரும். கவலை முடிவுக்கு வரும்.நிலம் பற்றி புதிய முதலீடுகளைத் தள்ளிப்போடுங்கள்.கலைத்துறையில் உள்ளோரின் அறிமுகம் கிடைக்கும்.

**கும்பம்:** செல்வாக்கு மேலோங்கும். தனவரவு நன்றாக இருக்கும்.உங்களின் கடின உழைப்பை நிர்வாகம் புரிந்துகொள்ளத் தாமதமாகும்.

**மீனம்:** அதிகாரிகளுடன் ஏற்பட்ட வாக்குவாதங்கள் முடிவடையும்.வாழ்க்கைத் துணையின் உறவினர் மூலம் உதவி கிடைக்கும்.வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து சுபச்செய்தி வரும்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் அமைச்சர் வீரசேகர

**கொழும்பு, நவ. 29**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியுள்ளார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.**



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பொறுப்பேற்க முன்னர் சரத் வீரசேகர மத்துகம பிரதேசத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் பாடசாலை ஒன்றிலும், பிரதேச சபை கூட்டத்திலும் அமைச்சர் முகக்கவசம் இன்றி பங்கேற்றுள்ளார் என்று கூறப்படுகிறது. முகக்கவசம் இன்றி வெளியே நடமாடிய நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அமைச்சரின் இந்த செயற்பாடு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ம-இ)

# ஹெக்ரேயருக்கு 1,000 கிலோ நெல் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு

கொழும்பு, நவ. 29

உரமானியத்தைப் பெறும் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் அடுத்த பருவத்திலிருந்து ஒரு ஹெக்ரேயருக்கு ஆயிரம் கிலோ நெல் தலா 50 ரூபா உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நெல் களஞ்சியப்படுத்தலை திறமையாகவும் பாதுகாப்பாகவும் மாற்றியமைப்பதற்காக களஞ்சிய வசதிகளை சரிசெய்ய நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ரூ.100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

நெல் மீதான ஏகாதிபத்தியத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், நெல் விலையை முறையான வகையில் பராமரிக்கவும் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார். (ம)

*முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...*

## பலஸ்தீன...

தினமான நேற்று தான் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரதமர் மகிந்த.

பிரதமர் மகிந்த வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

1948ஆம் ஆண்டு இஸ்ரேல் தேசத்தை உருவாக்கும் போது, நக்பா மற்றும் பலஸ்தீனர்கள் தங்களது இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டனர். அதன்போது இடம்பெற்ற நகரம் மற்றும் கிராமத்தை அழிக்கும் பேரழிவின் எதிரொலியாக 1978ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் பலஸ்தீன ஒருமைப்பாட்டுக்கான சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

பலஸ்தீனியர்கள் இன்னும் இராணுவ ஆட்சிக்கு உட்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் சிவில் நிர்வாகம், வன்முறை, குண்டுவெடிப்பு மற்றும் இஸ்ரேலிய குடியேற்றங்களின் கட்டுமானம் மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றின் விளைவாக அவர்களின் மனிதாபிமான மற்றும் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இது தவிர சுதந்திர பலஸ்தீனத்திற்காக தமது வாழ்நாளை தியாகம் செய்தவர்கள் அதிகமாகும்.

2015ஆம் ஆண்டாகும்போது பலஸ்தீன அகதிகளின் எண்ணிக்கை 5.6 மில்லியன் ஆகும். தற்போது அந்த எண்ணிக்கை மேலும் அதிகமாகும். மொத்த பலஸ்தீன மக்கள் தொகையில் அரைவாசி பேர் அகதிகளாக தங்களது இடங்களிலிருந்து வெளியேறி வாழ்ந்து வருகின்றனர்.

பலஸ்தீனம் தொடர்பான பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபை வரலாற்றுடன் இணைந்ததாக விளங்குகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலமாக தீர்க்கப்படாத நெருக்கடிகளில் இதுவும் ஒன்றாகும் என்றுள்ளது.

பலஸ்தீனத்தில் இருக்கும் இஸ்ரேலில் இராணுவப் பிரசன்னத்தைக் கண்டிக்கும் மகிந்த ராஜபக்ச தமிழர் பகுதிகளில் இன்னும் இராணுவ நிலைகளைக் குவித்து வைத்திருக்கின்றார். ஐ.நாவின் தீர்க்கப்படாத பிரச்சினைகளில் ஒன்றாக பலஸ்தீனம் உள்ளது என்று வேதனைப்படும் மகிந்த இலங்கையின் தீர்க்கப்படாத பிரச்சினையாக இனப்பிரச்சினை உள்ளதைப் பற்றி இம்மியும் அக்கறை கொள்ளவில்லை. பலஸ்தீனத்தின் எல்லைகளுக்காகவும் அதன் சுய இறைமைக்காகவும் போராடும் ஹமாஸ் ஆயுதக் குழுவைப் பற்றி எந்த எதிர்ப்பும் வெளிப்படுத்தாமல் பலஸ்தீனத்தின் உயர் விருதைப் பெற்று வைத்துள்ள மகிந்த தமிழர்களின் இறைமைக்காகப் போராடி விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்கின்றார் என்று விமர்சிக்கின்றனர் அரசியல் ஆர்வலர்கள். (ம-இ)

## தனிமனிதனின்...

தகவல்களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 021 222 6666 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு விவரங்களை அறியத்தர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்த ஒருவர் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு எவ்வித தகவலையும் வழங்காததுடன், சுயதனிமைப்படுத்தலையும் கடைபிடிக்காது யாழ். மாவட்டத்தில் உள்ள பல நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் போன்ற தனியார் வீடுகளுக்கும் சென்று வந்துள்ளார். பின்னர் அவரைப் பற்றிய தகவல் சுகாதார திணைக்களத்தினருக்கு கிடைத்ததை தொடர்ந்து இவர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் இவர் சென்று வந்த அனைத்து நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கணக்கானவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு தனிமனிதனின் சமூக பொறுப்பற்ற தவறான நடவடிக்கையால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல், எமது மாகாணத்தில் பரவாதிருக்க தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவும், என்றுள்ளது. (ஒ,இ)

# அரசியல் இலாபத்துக்காகவே பாதீடு விமர்சிக்கப்படுகிறது

## பசில் தெரிவிப்பு



கொழும்பு, நவ.29

**வரவு - செலவுத் திட்டத்தை அரசியல் இலாபத்துக்காக எதிர்த் தரப்பினர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் கூட்டம் எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை மாகாண மட்டத்தில் இடம்பெறும் என பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் தனி நபர் ஒருவரின் அபிப்பிராயங்களைக் கொண்டு தயாரிக்கப்படவில்லை. அரச மற்றும் தனியார் துறையினரை உள்ளடக்கி நாட்டு மக்களின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. சரியான தீர்மானங்கள் பல வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக எடுக்கப்பட்டுள்ளன. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இம்முறை வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 'கமசதர பிலிசர' செயற்திட்டம் ஊடாக பெற்றுக்கொண்ட மக்களின் கருத்துக்கள் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பயனுடையதாக அமையும். சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டம் முழுமையாக செயற்படும் - என்றார் (ப)



# யாழ்.மாநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ.29
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் உள்ள கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
நல்லூர் பகுதியில் கட்டாக்காலிகளாகக் காணப்பட்ட நாய்கள் யாழ்ப்பாண மாநகர சபையின் பணியாளர்களால் நேற்று பிடிக்கப்பட்டன.
இவ்வாறு பிடிக்கப்படும் நாய்கள் அரியாலை பகுதியில் உள்ள தியாகி அறக்கொடை நிலைய நாய்கள் காப்பகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)

# அருட்தந்தையின் கைதுக்கு செல்வம் எம்.பி கண்டனம்

மன்னார், நவ 29
மாவீரர்களை நினைவேந்தியமைக்காக யாழ். அருட்தந்தை கைதுசெய்யப்பட்டமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.
அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
மண்ணுக்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் உயிர் நீத்த மாவீரர்களை அஞ்சலிப்பது ஒவ்வொரு பெற்றோரினதும், தமிழ் மக்களினதும் கடமை. உரிமை. அதற்கு அரசோ படையினரோ தடை விதிப்பது பொருத்தமற்றது. அதிலும் போர்க் காலத்திலும் தமிழர் விடுதலைப் போராட்டப் பாதையிலும் பங்குத் தந்தையர்களின் ஒத்துழைப்பு மிக உன்னதமானது. எனவே மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற பங்குத் தந்தை கைது செய்தமையை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ப-213)

# கார்மேல் நகர் மக்கள் குடிதண்ணீருக்கு அவதி



மன்னார், நவ.29
மன்னார் முசலி கார்மேல் நகர் மக்கள், குடிதண்ணீர்ப் பிரச்சினையால் பெரும் அவதி நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.
இந்தக் கிராமத்தில் 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. குடும்பங்களுக்கு நிரந்தரமாக குடிதண் ணீர் வசதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை.
பல கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிராமங்களுக்கு, குழாய் வழியாக குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.
அந்தக் குழாயில் ஏற்பட்டுள்ள சிறு துளை வழியாக வரும் தண்ணீரைச் சேமித்து, குடிதண்ணீராகப் பயன்படுத்தும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
இது தொடர்பாக கடந்த வருடம் முசலி பிரதேச சபையில் கலந்துரையாடப்பட்டது. கிராமத்தில் தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டால், பவுசர்கள் மூலம் தாங்கிகளுக்கு தண்ணீர் நிரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
எனினும் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள சிறிய அளவு தண்ணீர் தாங்கி 60 குடும்பங்களுக்கும் போதுமானதாக இல்லை.
தண்ணீர் தாங்கிகள் வாங்கும் அளவுக்கு எம்மிடம் வசதிகள் இல்லை. எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எமது தாகத்தைத் தீர்க்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-213)

# மட்டு. பல்கலை அரச சொத்தே

## கல்வி அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, நவ.29
மட்டக்களப்பு, பல்கலைக்கழகத்தை தனியார் நிறுவனமாக அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை. அரசாங்கத்துக்கு கீழேயே அது செயற்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்க வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாகவே பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பும்போது, அது மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயமாற்றுப் பிரிவினூடாகவே அனுமதிக்கப்படவேண்டும். அவ்வாறான எந்த நடவடிக்கையும் இல்லாமலே இந்த நிறுவனத்துக்குப் பணம் வந்திருக்கின்றது. அதனால் அந்த பல்கலைக்கழத்தை தனியார் நிறுவனமாக அரசாங்கம் அங்கீகரிக்காது. அதேபோன்று பட்டச்சான்றிதழ் வழங்கும் நிறுவனமாகவும் அதற்கு அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது. அத்துடன் எமது அரசாங்கம் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் எண்ணிக்கையை அதிகரித்திருக்கின்றது. அதற்குப் போதுமான வளங்கள் தேவையாகின்றன. மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் இருக்கும் இயற்கை வளங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலோ பேராதனைப் பல்கலைக்கழகத்திலோ இல்லை - என்றார். (ப)






# தமிழர்களும் தமது மக்களாம்

## அமைச்சர் சமல் ராஜபக்சவுக்கு பிறந்தது ஞானம்



கொழும்பு, நவ.29

**தமிழர்கள் எமது மக்கள். சகல மக்களுக்கும் இடங்களைப் பெற்றுக்கொடுப்போம். இதில் ஒரு இனத்துக்கு மட்டும் முன்னுரிமை அல்ல என்று அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்**

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை கமத்தொழில், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டுள்ளமை சகல மக்களுக்குமான பயன்களைப் பெற்றுக்கொள்ளவே தவிர எந்தவொரு இனத்தையும் தண்டிக்கவோ நிராகரிக்கவோ அல்ல. தமிழர்கள் எமது மக்கள். சகல மக்களுக்கும் இடங்களைப் பெற்றுக்கொடுப்போம். இதில் ஒரு இனத்துக்கு மட்டும் முன்னுரிமை அல்ல. அவ்வாறு நடந்தவற்றை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம்.

யாழ்ப்பாண மக்கள் மிகவும் அதிகமாகக் கஷ்டப்படுகின்றனர். அவர்களின் பொருளாதாரத்தையும் முன்னேற்ற நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - என்றார்.

இதேவேளை, சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன், மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டு இன்று 32 ஆண்டுகளாகின்றன. இன்றுவரை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் தமிழ் மக்களுக்கு ஒரு துண்டு நிலமேனும் கொடுக்கப்படவில்லை - என்றார். (ப)



# சக்கர நாற்காலி திருத்தும் பயிற்சி

## மாங்குளத்தில் ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ.29

சக்கர நாற்காலி திருத்துவதற்கான பயிற்சி வகுப்புகள் கடந்த புதன்கிழமை மாங்குளம் உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் ஆரம்பமானது. இதில் உயிரிழை அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

சக்கர நாற்காலிகளை திருத்துவதற்காக உயிரிழை அமைப்பின் பயனாளிகள் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இவற்றைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே சக்கர நாற்காலி திருத்துவதற்கான கட்டடம் ஒன்று ஆஸ்திரேலியா தமிழ் அமைப்பின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்டிருந்தது. அபிவிருத்திக்கான உதவி ஊக்க இலங்கை மையத்தின் நிதி அனுசரணையோடு சக்கர நாற்காலி திருத்துவதற்கான பொருள்கள் பெறப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# புதிய அதிபர் நியமனம்



கொடிகாமம்,நவ.29

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் புதிய அதிபராக கனகரத்தினம் மகிந்தன் கடந்த புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவர் முன்னர் கல்வயல் சிறீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற அதிபர், தொடர்ந்து பாடசாலையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். (ஜ-159)

# 15வயது ஜப்பான் சிறுமியுடன் இலங்கை இளைஞன் கைது

## காதல் விவகாரம் காரணம்

கொழும்பு, நவ.29

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 15 வயதான சிறுமியை அவரின் பெற்றோருக்குத் தெரியாமல், இலங்கைக்கு அழைத்துவந்து சட்டவிரோதமான முறையில் தங்கவைத்திருந்த இளைஞனை சிலாபம் கொச்சிக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த ஜப்பான் சிறுமி தற்சமயம் கர்ப்பமாக இருப்பதுவும் தெரியவந்துள்ளது.

தனது மகள் காணாமல் போயுள்ளார் எனவும், வீட்டில் தொழில்செய்த இலங்கை இளைஞனே சந்தேக நபர் எனவும் குறிப்பிட்டு சிறுமியின் தாயார் கடந்த மார்ச் மாதம் இலங்கைப் பொலிஸில் முறையிட்டிருந்தார். இந்த நிலையில் 23 வயதான இளைஞனும், ஜப்பான் சிறுமியும் இளைஞனின் உறவினரது வீட்டில் தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டனர். அந்தச் சிறுமி, அந்த நாட்டிலுள்ள பிரபல செல்வந்தர் ஒருவரின் மகள் எனத் தெரியவருகின்றது.

**பின்னணி**

கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த இளைஞன், 4 வருடங்களுக்கு முன்னர் தனது உயர் கல்வியை தொடர்வதற்காக ஜப்பான் நோக்கிப் பயணித்துள்ளார். தனது கல்வி நடவடிக்கைகளுக்காக பெரும் நிதி தேவைப்படுவதை உணர்ந்த இளைஞன், ஜப்பானிலுள்ள செல்வந்த வர்த்தகர் ஒருவரின் வீட்டில் தற்காலிகமாகப் பணிபுரிந்துள்ளார். வர்த்தகர், வர்த்தகரின் மனைவி மற்றும் அவரது 15 வயதான மகள் ஆகியோரே அந்த வீட்டில் வாழ்ந்துள்ளனர். இவ்வாறு பணிப்புரிந்து வந்த இலங்கை இளைஞனுக்கும், 15 வயதான ஜப்பான் சிறுமிக்கும் இடையில் காதல் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து, குறித்த இளைஞன் தனது காதலியை இரகசியமான முறையில் இலங்கைக்கு அழைத்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப)



# மரக்கன்றுகள் வழங்கல்

கொடிகாமம், நவ.29

யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகமும், நல்லூர் லயன்ஸ் கழகமும் இணைந்து யாழ்ப்பாணம் சிறாம்பியடி கிராம மக்களுக்கு கஜூ மரக் கன்றுகளை வழங்கின.

அண்மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ் நுழைவாயில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ப-159)

# முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு மாநாடு

கொழும்பு, நவ.28

முத்தரப்பு கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பமானது. நேற்றும் அந்த மாநாடு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளின் பங்கேற்பில் இந்த மாநாடு நான்காவது முறையாக இடம்பெறுகிறது.

இறுதி மாநாடு கடந்த 2014 ஆம் ஆண்டு புதுடில்லியில் இடம்பெற்ற நிலையில் இம்முறை மாநாடு 6 வருடங்களுக்குப் பிறகு இடம்பெற்றது.

இதற்கு மேலதிகமாக பங்களாதேஷ், சிசெல்ஸ் மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்பு மட்டத்தில் இதில் கலந்து கொண்டுள்ளனர். இந்திய சமுத்திரத்தின் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் இந்த மாநாட்டின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# 50,000 பனம் விதைகளை நெடுந்தீவில் நடத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம், நெடுந்தீவுப் பிரதேசத்தில் 50ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யும் பணி கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இவ்வாறு பனம் விதைகள் நடுகைசெய்யப்பட்டு வருகின்றன. பனை அபிவிருத்தி சபை வழங்கிய சுமார் 24 ஆயிரம் வரையிலான பனம் விதைகளே இவ்வாறு நடுகைசெய்யப்படவுள்ளன. அத்தோடு 26 ஆயிரம் வரையிலான பனம் விதைகளை பொதுமக்களிடம் இருந்து பெற்று நடுகை செய்யும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தில் இதற்கென தெரிவு செய்யப்படும் இடங்களில் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன என்று நெடுந்தீவு பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி தெரிவித்தார். (ப-17)

# தென்மராட்சியில் 228 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

சாவகச்சேரி,நவ.29

மேல் மாகாணத்திலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வருகை தந்திருந்த 228 பேருடன், அவர்களது குடும்பத்தினரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் மாதம் வருகை தந்திருந்த 119 பேரும், நவம்பர் மாதத்தில் கடந்த வியாழக்கிழமை வரை வருகை தந்த 109 பேரும் குடும்பத்தாருடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 188 பேருக்கு நடாத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று ஏற்படவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மருத்துவத்துறையின் கவனயீனம்!!!

காரைநகர் வாசிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஒரு தடவை பீதிநிலைக்குள் சென்றுள்ளது யாழ்ப்பாணம். குறித்த கொரோனாத் தொற்றாளர் பயணித்த வழித்தடங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. இதையடுத்து யாழ்ப்பாணம் நகர்ப் பகுதிக்குள் உள்ள சில கடைகள் மூடப்பட்டுள்ளன. சில இடங்கள் முடக்கப்பட்டுள்ளன. உண்மையில் இந்தப் பதற்றம் தேவையற்றதே. அவர் கொழும்பில் இருந்து வந்த அன்றைய தினமே அடையாளம் காணப்பட வேண்டியவர். ஆனால் எம் மருத்துவத் துறையில் இருந்த கவனக் குறைவே இந்த நெருக்கடி நிலையை இன்று தோற்றுவித்திருக்கின்றது.

தொற்றாளர் கடந்த 21ஆம் திகதி காரைநகருக்குச் சென்றுள்ளார். அன்றையதினம் மூச்சுத் திணறல் காரணமாக மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். ஆனால் அவரிடம் பி.சி.ஆர் சோதனைகள் எடுக்கப்படவில்லை. உரிய முறையில் பரிசோதிக்கவில்லை. மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் அவர் அதே மருத்துவமனைக்கு மீண்டும் சென்றுள்ளார். ஆனால் மீண்டும் அதே மெத்தனப்போக்கே அவரின் விடயத்தில் இருந்துள்ளது. கடந்த 21ஆம் திகதி மருத்துவமனைக்குச் சென்றபோதே அவரிடம் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் கொழும்பில் இருந்து வந்த அன்றைய தினமே அவர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பார். அதன் பின்னர் மூடப்பட்ட வர்த்தக நிலையங்கள், முடக்கப்பட்ட பகுதிகள் இந்த நெருக்கடியைச் சந்தித்திருக்க வேண்டியதில்லை. அதிலும் மூச்சுத் திணறல் என்று எவர் வந்தாலும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு இந்தத் தொற்றாளர் பரிசோதிக்காமல் விடப்பட்டார் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்தப் பத்தியில் சில நாள்களுக்கு முன்னர் குறிப்பிட்டதுபோன்று, அரச இயந்திரத்தின் பலவீனத்தாலும் குறைபாடாலும்தான் கொரோனாத் தொற்றாளர்கள் யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவுகின்றனர் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கொழும்பை விட்டு எவராவது வெளியேற வேண்டுமாயின் பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயமாக எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டு அதை நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் கொழும்பில் இருந்து ஏனைய இடங்களுக்கு தொற்றாளர்கள் பரவுவதைத் தடுக்க முடியும். 22 ஆயிரம் தொற்றாளர்கள் உருவான பின்னரும், இன்னமும் சமூகத்தொற்று இல்லை என்று சமாளித்துக்கொண்டு இருக்கும் இந்த அரசு, இந்த விடயத்திலாவது உரிய கவனத்துடன் செயற்பட வேண்டும். கொரோனா கொத்தணிகள் மேற்கொண்டு உருவாகாமல் இருக்க வேண்டுமாயின் கொழும்புக்கு தேவையற்ற விதத்தில் மக்கள் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் சுகாதாரத்துறை, கொழும்பில் இருந்து வெளியிடங்களுக்கு தொற்று பரவுவதைத் தடுக்க உடனடியாக பொறிமுறைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

காரைநகர் தொற்றாளர் நடமாடித்திரிந்த இடங்கள் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன. இந்த இடங்களின் விவரங்களை அறிந்து மக்களும் உரிய கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும். கொரோனா எமக்கு அருகில் உள்ளது. அதை மீண்டும் தூரமாக்குவதும் ஆரத்தழுவுவதும் எமது நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.

# வடக்கு மீனவர்களின் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் தீர்க்கவேண்டும்

## விஜித்த ஹேரத் எம்.பி வலியுறுத்து

**கொழும்பு, நவ.29**

**வடக்கு மீனவர்களின் பிரச்சினையை இந்தியாவுடன் ராஜதந்திர ரீதியில் தீர்த்துக்கொள்ளாதவரையில் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. இருதரப்புகளுக்கிடையில் இடம்பெறும் டீலே வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்வதற்குக் காரணமாகும் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.**



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
மீனவர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு இருக்கும் காப்புறுதித் திட்டம் முறையாக இயங்குவதில்லை. மீன்களை பாதுகாப்பதற்கான குளிர்சாதன வசதிகள் இல்லை. அதேபோன்று கடலிலும் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றுக்கு முறையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக வடக்கு மீனவர்களின் பிரச்சினை காலாகாலமாகத் தொடர்கிறது. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் இன்றுவரை தீர்க்கப்படவிலலை. இந்திய மீனவர்கள் பொட்டம் டோலர்களில் வந்து வடக்கில் மீன்களைப் பிடித்துச்செல்கின்றனர். கடல் வளத்தையும் அழிக்கின்றனர். எமது மீனவர்களின் படகுகளை மோதிச் சேதப்படுத்திவிட்டுச் செல்கின்றனர். வாரத்துக்கு 3 முறை இவர்கள் வருகின்றனர். இந்த பிரச்சினை பல வருடங்களாக இருந்து வருகின்றது. சட்ட ரீதியிலான பிரச்சினையே இதற்கு மூல காரணமாக இருந்து வருகின்றது - என்றார். (ப)

## பளை மருத்துவர் உட்பட ஆறு பேருக்குத் தனிமை

கிளிநொச்சி,நவ.29



வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை தனிமைப்படுத்தலுக்காக ஏற்றிவந்த பேருந்து விபத்துக்குள்ளானதை அடுத்து பளை மருத்துவமனை மருத்துவர், உள்ளிட்ட ஆறு பேர் தனிமைப்படுத்தபட்டுள்ளனர்.
ஓமான் நாட்டில் இருந்து வந்த 25 பயணிகளை ஏற்றி வந்த பேருந்து நேற்றுமுன்தினம் காலை பளை அரசகேணிப் பகுதியில் விபத்துக்குள்ளானது. இதில் 17 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் இருந்த பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.
தனிமைப்படுத்த அழைத்து வரப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டமை மற்றும் அவர்களை அருகில் நின்று வாகனங்களில் ஏற்றியமைக்காக குறித்த மருத்துவமனையில் அப்போது கடமையில் இருந்த மருத்துவர், தாதியர்கள், காவலாளி, பொதுச் சுகாதார பரிசோதகர், ஊடகவியலாளர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான 17 பேரின் பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கைகள் வரும் வரை அவர்களை தனிமைப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ப-6)

## மாவீரர் பாடலை பதிவேற்றினாரென இளைஞர் கைது

கொழும்பு, நவ. 29
முகப்புத்தகத்தில் மாவீரர் நினைவேந்தல் பாடலை பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் சம்பூர் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. 23 வயதுடைய அந்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் மூதூர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.
பிரபாகரனின் பிறந்தநாள் தொடர்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட் டில் மட்டக்களப்பின் ஏறாவூரில் கடந்த வியாழக்கிழமை 4 பேர் கைதாகியிருந்தனர். (த-22)

# இறப்பு வீடுகளில் தொடர்ந்தும் சுகாதாரத்தை கடைப்பிடியுங்கள்

சாவகச்சேரி,நவ. 29
கொரோனாத் தொற்றுக் காரணமாக மரண வீடுகளில் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு சாவகச்சேரி சுகாதார பகுதியினர் அறிவித்துள்ளனர்.
மரண வீடுகளின் வெளியே கைகழுவும் வசதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும், உள்ளே நிற்பவர்கள் கட்டாயம் சமூக இடைவெளிகளைப் பேணுவதுடன் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும், அத்துடன் அங்கு அமைக்கப்பட்டுள்ள பந்தலுக்குள் 25 இருக்கைகளுக்கு மேல் வைக்கப்படக்கூடாது, பொதுச் சுகாதார பரிசோதகர். குழு பார்வையிடும்போது அதிக அளவில் இருக்கைகள் (கதிரைகள்) காணப்பட்டால் அவை பறிமுதல் செய்யப்படும் எனவும் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 2020

"மரம் போன்ற ஒரு அழகான கவிதையை ஒருபோதும் காணமாட்டேன் என நினைக்கிறேன்." - ஜெய்சி கில்மர்

உதயன்
newuthayan.com

# கொரோனா தொடருமானால் சா/த பரீட்சை ஒத்திவைப்பு!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு




**கொழும்பு, நவ.29**

**கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் தொடர்ந்தால் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைப்பது தவிர்க்க முடியாது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்று சனிக்கிழமை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

2021 ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 27 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டபடி பரீட்சை நடத்தப்படுமா என்பது தொடர்பான முடிவு ஒரு வாரத்துக்குள் எட்டப்படும்.

நாட்டில் உள்ள 10 ஆயிரத்து 165 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 100 பாடசாலைகள் மட்டுமே நவம்பர் 23 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டன. மேல் மாகாணத்திலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன.

அதேவேளை கொரோனா வைரஸ் மற்றும் அது தொடர்பான அச்சத்தை கருத்தில் கொண்டு நாட்டின் சில பகுதிகளில் பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தால் இந்த நிலையை கருத்தில் கொண்டு தீர்க்கமான முடிவு அடுத்த வாரம் எட்டப்படும். என்றார். (எ-இ)



# குருப்பெயர்ச்சி பலன்கள்



**குரு தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்கிறார். குருப் பெயர்ச்சி வாக்கிய பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு 15.11.2020 (ஞயிற்றுக்கிழமை) இரவு 11.48 மணிக்கு மகர ராசிக்கு மாறியிருக்கிறார். இந்த குருப்பெயர்ச்சி ஒவ்வொரு ராசிக்குமான பலன்களை பார்ப்போம்.**

## தனுசு

கூர்மையான மதிநுட்பம் நிறைந்த தனுசு ராசி அன்பர்களே!

சமூக விரோதிகளை இனங்கண்டு அவர்களிடமிருந்து ஒதுங்கி நிற்பீர்கள். நல்லொழுக்கத்தை கடைப்பிடிப்பீர்கள். பெரியோர்களிடமும், சான்றோர்களிடமும், செல்வாக்குப் படைத்தவர்களிடமும் விசுவாசிகளாகவும், நண்பர் களாகவும் இருப்பீர்கள். இந்த குரு பெயர்ச்சி பல முன்னேற்றங்களைத் தரும். குருபகவான் இதுவரைஉங்கள் ராசியில் இருந்து சிற்சில இன்னலைக் கொடுத்திருப்பார். குடும்பத்தில் குழப்பமும், பிரச்சினைகளும் வந்திருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் ஏதேனும் ஒரு பிரச்சினையை சந்தித்து கொண்டே இருந்திருப்பர். இந்த நிலையில் தான் குருபகவான் 2ஆம் இடமான மகர ராசிக்கு செல்கிறார். இது சிறப்பான அம்சம். இதுவரை குருவால் ஏற்பட்டு வந்த இடர்பாடுகள் அனைத்தும் இருக்குமிடம் தெரியாமல் மறையும். குடும்பத்தில் நிலவிவந்த குழப்பத்துக்கு விடுதலை கிடைக்கும். மந்த நிலை மாறும். துணிச்சல் பிறக்கும். பண வரவு கூடும். தேவையான பொருள்கள்ளை வாங்கலாம் .பகைவர்களின் சதி உங்களிடம் எடுபடாது.அவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும். ஆனால் அவர் 2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை அதிசாரம் பெற்று கும்ப ராசியில் இருக்கிறார். பிறகு அவர் 2021 நவம்பர் 13ஆம் திகதி அன்று முழுபெயர்ச்சி அடைந்து 3ஆம் இடமான கும்ப ராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம் இல்லை. அவரால் முயற்சியில் தடை ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காது. உங்கள் நிலையில் மாற்றம் ஏற்படும். 2022 ஏப்ரல் 14ஆம் திகதி அன்று பெயர்ச்சி அடைந்து 4ஆம் இடமான மீன ராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம் இல்லை. அவர் மனஉளச்சலையும்.உறவினர் வகையில் வீண்பகையையும் உருவாக்குவார் மற்ற கிரகங்களின் நிலை சனிபகவான் இப்போது உங்கள் ராசியில் இருக்கிறார். உடல்நலம் பாதிக்கப்படலாம்.நெருப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சற்று கவனமாக இருக்க வேண்டும். உறவினர்கள் வகையில் வீண்மனக்கசப்பு வரலாம். வெளியூர்வாசம் இருக்கும். ஆனால்அவரது 3ஆம் இடத்துப்பார்வை சிறப்பாக அமைந்துள்ளது. இந்தபார்வையால் அவர் காரிய அனுகூலத்தையும்.பொருளாதார வளத்தையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும், தொழில் விருத்தியையும் தருவார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சனிபகவான் 2020 டிசெம்பர் 26 ஆம் திகதி அன்று உங்கள் ராசியில் இருந்து 2ஆம் இடமான மகர ராசிக்கு மாறுகிறார். இதுவும் சிறப்பான இடம் அல்ல. அவர் குடும்பத்தில் பிரச்சினைகளை உருவாக்குவார். பொருள்களை களவு கொடுக்க நேரிடும். பொருளாதார இழப்பு ஏற்படும். ஆனால் அவரின் 10ஆம் இடத்துப்பார்வை உங்களுக்கு சிறப்பாக அமைந்து உள்ளது. அதன்மூலம் நற்பலன்கள் கிடைக்கும். பொன்,பொருள் கிடைக்கும். மகிழ்ச்சியும், ஆனந்தமும் அதிகரிக்கும். பெண்கள் மிகஉறுதுணையாக இருப்பர். ராகு இப்போது 6ஆம் இடமான ரிஷபத்தில் இருக்கிறார் இது சிறப்பான இடம். அவர் உங்களை தீயோர் சேர்க்கையில் இருந்து விடுவித்து முன்னேற்றத்துக்கு வழிவகுப்பார். காரிய அனுகூலத்தை கொடுப்பார். அவரது பின்னோக்கிய 4ஆம் இடத்துப் பார்வை உங்கள் ராசிக்கு 3ஆம் இடமான கும்பத்தில் விழுகிறது. இது சிறப்பான அம்சமாகும். இதன் மூலமும் நன்மைகள் கிடைக்கும். அவரது பார்வையால் பொருளாதார வளத்தையும் குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தொழில் விருத்தியையும் தருவார்.

கேது நன்மை உங்கள் ராசிக்கு 12ஆம் இடமான விருச்சிகத்தில் இருக்கிறார் இது சிறப்பான இடம் அல்ல.இவரால் பொருள் விரையம் ஏற்படலாம்.உடல் உபாதைகள் வரலாம். அதற்காக கவலைகொள்ள வேண்டாம். காரணம் கேதுவின் பின்னோக்கிய 7ஆம் இடத்துப்பார்வை உங்கள் ராசிக்கு 6ஆம் இடமான ரிஷபத்தில் விழுகிறது. இது சிறப்பான அம்சமாகும். இனி விரிவான பலனை காணலாம். ராகு. குருவால் எந்த பிரச்சினையையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14ஆம் திகதி வரைசிலர் மன உழைச்சலுடன் காணப்படுவர். உத்தியோகத்தில் வேலைப்பளு, வீண்மனக்கவலை மறையும். உங்கள் திறமை பளிச்சிடும். கோரிக்கைகள் நிறைவேறி மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். வேலையில் திருப்தி காண்பீர்கள். மேல் அதிகாரிகள் ஆதரவுடன் இருப்பர். விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்க பெறலாம் சகபெண் ஊழியர்கள்மிகவும் ஆதரவுடன் இருப்பர். 2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை வேலைப் பளுவும். அலைச்சலும் அதிகமாக இருக்கும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். குருவால் பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை பெற்று இருக்கிறீர்கள். தடையின்றி முன்னேறலாம்.வீண்விரையம் தடைபடும். உங்கள் வளர்ச்சிக்கு ஒரு பெண் பின்னணியாக இருப்பார்.வாடிக்கையாளர் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். பெண்களை பங்குதாரராக கொண்ட நிறுவனம் நல்ல முன்னேற்றம் அடையும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் நல்ல வருமானத்தை பெறுவர்.

2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை பொருள் விரையம் ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும் கலைஞர்களுக்கு முயற்சிகளில் இருந்த தடையும், மனதில் ஏற்பட்ட சோர்வும் மறையும். அதன்பிறகு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ் பாராட்டுபோன்றவை கிடைக்கும். அரசியல்வாதிகள், பொதுநல சேவகர்களுக்கு செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரிக்கும். வருமானத்தில் எந்த குறையும் இருக்காது. 2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க அதிக முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும்.பணப்புழக்கத்தில் எந்த குறையும் இருக்காது. மாணவர்களுக்கு ஆசிரியர்களிடம் நற்பெயர் கிடைக்கும். 2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை சிரத்தை எடுத்து படித்தால் பலன் கிடைக்கும். விவசாயிகள் மஞ்சள், கொண்டைக்கடலை, உளுந்து மற்றும் மானாவாரி பயிர்கள் மூலம் நல்ல வருமானத்தை பெறலாம். நவீன இயந்திரங்கள் வாங்க வாய்ப்பு உண்டு. வழக்கு விவகாரங்கள் திருப்திகரமாக இருக்கும். பெண்கள்குரு திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். குடும்பத்தில் முக்கிய அங்கமாக திகழ்வீர்கள். பிறந்த வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கப் பெறலாம். சகோதரிகளால் பணம் கிடைக்கும். அக்கம் பக்கத்தினர் அனுசரணையுடன் இருப்பர். வேலைக்கு செல்லும் பெண்கள் பதவி உயர்வு காண்பர்.ஆடம்பர பொருள்கள் வாங்கலாம். சுய தொழில் செய்து வரும் பெண்களுக்கு லாபத்தில் குறை இருக்காது. 2021ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை குடும்ப ஒற்றுமைக்காக சிற்சில விடயங்களில் விட்டுக் கொடுத்து போகவும். ஆடம்பர செலவை தவிர்க்கவும். வேலைக்கு செல்லும் பெண்கள் அதிக பளுவை சுமக்க வேண்டியதிருக்கும். உடல்நலம்: சீராக இருக்கும். கேதுவால்பித்தம், மயக்கம் போன்ற சிற்சில உபாதைள் வரலாம்.

## 19ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்

உயிர்ப்பு 15 . 01 . 1944



சங்கமம் 30 . 11 . 2001

திதி: 29.11.2020

**அமரர் கந்தையா பன்னிருகரம்**

(முன்னாள் உரிமையாளர் கௌரி மிதிவண்டி வாணிபம்-நெல்லியடி)

ஆண்டுகள் பத்தொன்பது காற்றாய் கரைந்து போனாலும்
நீராய் பூத்த நினைவுகளாய் என்றும் எங்கள் மனங்களில்
உயிர்ப்பாய் வாழ்வீர்கள்
அப்பா! அப்பா! அப்பா!

சாந்தி பவனம்,
பொற்றாவத்தை, கரவெட்டி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மகேஸ்வரி நடேசபிள்ளை**

(புங்குடுதீவு -
3. யாழ். நாவலர் வீதி)

தோற்றம் 25 . 10 . 1938

மறைவு 10 . 12 . 2019

திதி: 29.11.2020


ஆராத அன்பு கொண்ட எம் அன்னையே!
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லையே எம் துயரம்
நிலையில்லா இவ் அகிலம் நீங்கி நீண்ட துயில் கொண்ட எம் ஒளி விளக்கே
எம் உயிருள்ளவரை என்றும் மறவோம் உனதன்பை
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

இல.2C, வியாசகர் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

குடும்பத்தினர்
024 222 5838, 077 610 9910

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 04 . 1964



இறப்பு 28 . 11 . 2020

**துரைச்சாமி விசாகரராசா (சுப்பு)**

புளியங்கூடலை (வேலணை) பிறப்பிடமாகவும் ஆலடி ஆனைக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வர்த்தகர் துரைச்சாமி விசாகராசா நேற்று (28.11.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி (சண்முகலிங்கம்) - அமராவதி தம்பதியரின் பாசமிகு மகனும், காந்தலட்சுமியின் (காஞ்சனா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற காராளபிள்ளை - மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், திலக்ஷினி (ஆசிரியர் - சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்), ஜெனோஷா (1 ஆம் வருட மாணவி, விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற சாந்தராசா, சாந்தலட்சுமி (கனடா), தியாகேஸ்வரன், காலஞ்சென்ற உதயசூரியன், உதயேஸ்வரன், கோடீஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விஜயலட்சுமி (ஓய்வுநிலை - ஆசிரியர்), காண்டீபன் (பிரான்ஸ்), கணநாதன் (நோர்வே), காங்கேயன் (பிரான்ஸ்), கலாமதி (சுவிஸ்), கோமதி, தயாபரன் (ஆசிரியர் - மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயம்), கஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
021 221 3149
077 058 7018

தகவல்:
குடும்பத்தினர்


## வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள வீடு ஒன்றுக்கு சிறு குழந்தைகளை பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. வயது 45 இற்கு கீழ் விரும்பத்தக்கது. சம்பளம் ரூபா 600 நாளொன்றுக்கு வழங்கப்படும்.

**T.P: 0777 157 070**

## சிங்கள வகுப்பு ஆரம்பம்

வவுனியாவில் அலுவலகங்களில் பணியாற்றி வரும் பெண்கள், தரம் 01 முதல் O/L மாணவர்களுக்கு சிங்கள வகுப்பு ஆரம்பமாகியுள்ளது. இறுதியில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**074 0068 343**

## A/L எழுதிவிட்டீர்களா?

**உடனடி வேலைவாய்ப்பு**

(EPF,ETF உட்பட)

**077 241 7007**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை

**AAA Gold Center**
**076 568 4346**

## வீடு வாடகைக்கு

யாழ் நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார் பண்னை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள், 2 Hall Bathroom மாத வாடகை 20,000. ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு. (தரகர் தேவை யில்லை). Store ஆகவும் பயன்படுத்தலாம்.

தொடர்புகளுக்கு **077 9311889**

## வீடு, கடை வாடகைக்கு

கண்டி வீதி (A9) நாவற்குழியில் (சிவபூமி திருவாசக அரண்மனைக்கு அருகில்) கீழ்த்தள வீடு 6 அறைகள் (குளிரூட்டப்பட்ட அறை) 4 குளியலறை இணைந்த சமையலறை, 2 விறாந்தாவுடன் இருபக்க வாசல்கள் உடைய வீடும் 10'x28' கொண்ட கடையும் வாடகைக்குண்டு. (நிறுவனங்கள், அலுவலகங்கள், குடியிருப்பு என்பவற்றுக்கு உகந்த வீடு). வீடு இரண்டாக பிரித்தும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு **077 167 9880**


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**A.N. லியனர்ரோ அடம்ஸ் அலோசியஸ்**

(மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை உயிரியல் பிரிவு மாணவன்)

பிறப்பு 27 . 06 . 2000



இறப்பு 29 . 11 . 2017



தனயன் நீ எனக்கு தாயாகி தரமான மந்திரியாய்
தோழனுமாய் இருந்தெந்தன் துயர்துடைத்த செல்வம் நீ
உன்னை நினைத்து ஓராயிரமாம் கற்பனைகள்
பண்ணி பல கனவு வளர்த்தேன் நான் பாவிமகள்
மின்னாமல் இடித்ததுபோல் என்னை விட்டு போனாயோ

ஐயிரண்டு திங்கள் அடிவயிற்றில் உனைச்சுமந்து
மெய்யயர்ந்து வாடி மேதியினில் உன்னை எந்தன்
கண்ணின் கருவிழியாய் காத்து வளர்த்தேனே
விண்ணுலகில் நீ செல்ல வெந்து மனம் நொறுங்கி
மண்ணுலகில் நீ நடந்த வழித்தடத்தை தேடுகிறேன்.

தகவல்:-
தாய் A.N. தனுஜா
சகோதரன் A.N. கஷினோ

விலாசம்: உதயசூரியன் வீதி,
உடுவில்.

## ஈழத்து சீரடியான் திருப்பாதங்களில்

### ஆண்டு ஒன்று

மண் மகிழ 13 . 12 . 1941



விண் மகிழ 10 . 12 . 2019

**சரஸ்வதி பொன்னம்பலம்**

உள்ளத்தில் மட்டுமல்ல
உங்களை உயிரிலே
வைத்திருக்கின்றோம்
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்
என்றும் எம்மை
ஈழத்து சீரடியான்
திருப்பாதமிருந்தும்
வழிநடத்துங்கள்

314, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P: 077 7222 568

பா.ராகவன்
(ஈழத்து சீரடி
சாயி மந்திர்)

## மரண அறிவித்தல்



மண்ணில் 02 . 05 . 1962

விண்ணில் 28 . 11 . 2020

### மேரி ரஞ்சினிகுமாரி வலன்ரைன் ஜோர்ஜ்

( தேசிய லொத்தர்சபை விநியோகஸ்தர் )

வவுனியா இறம்பைக்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி ரஞ்சினிகுமாரி வலன்ரைன் ஜோர்ஜ் நேற்று (28.11.2020) காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிரட் செபஸ்யானா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை மலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வலன்ரைன் ஜோர்ஜ் (குனா) வின் அன்பு மனைவியும் ஆன் லின்டுஷா (Centre for Human Rights and Development - Accountant) மிரின் தனோஜன் (SLLM Final Year) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கொலஸ்ரிக்கா மற்றும் மனோ (லண்டன்) ஜெயராணி (முன்னாள் பிரதி அதிபர்-வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), ராணி (வவுனியா), மணி (லண்டன்), ராஜ்குமார் (லண்டன்), வதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற நிக்கலஸ் மற்றும் ஜீன் (லண்டன்) காலஞ் சென்ற அந்தோனிமுத்து (முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்), எட்மன் (சென் யோசவ் கடை உரிமையாளர்), நெவில் (லண்டன்), வசந்தி (லண்டன்), தேவதாஸ் (லண்டன்), ராணி , வசந்தி , வசந்தன் காலஞ்சென்றவர்களான நிரூபன் , நிமலன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார் .

அன்னாரின் பூதவுடல் நாளை (30.11.2020) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லடக்கத்துக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் இறம்பைக்குளம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : பிள்ளைகள்
077 767 6718

## காணி தேவை

கைதடிக்கும் சுண்டுக்குளிக்கும் இடையில் மணியம் தோட்டம் கொய்யா தோட்டம் ஆகிய இடங்க ளில் இரண்டு பரப்பு காணி தேவை.

தொடர்புகளுக்கு
077 365 3989

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னாங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(அருள் முருகன் ஸ்தாபகர்)



தோற்றம் 18 . 11 . 1936

மறைவு 04 . 12 . 1987

திதி: பூரணை

என்றும் அன்பே உருவான எங்கள் அப்பா!
நாம் ஏற்றம் காண நல்வழி நடத்தி - எமக்கு
நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் அமைதியே உருவான தோற்றமும்


அன்பு முகமும், கருணை உள்ளமும்
அனைவரையும் அன்போடு அரவணைக்கும்
இனிய பண்பும், கனிவான பேச்சும், உதவி
செய்யும் கரங்களும் என்றும் மறவோம் - அப்பா
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் - என்றும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாதப்பா

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

483, கஸ்தூரியார் வீதி,
157, சாரங்கா நகை மாடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மண்ணில் 10 . 07 . 1962

விண்ணில் 20 . 11 . 2020

பாலா சேவிஸ் ரேசன் உரிமையாளரின் அன்புச் சகோதரன்

### சுப்பிரமணியம் இராசதுரை

யாழ் மந்துவிலைப் பிறப்பிடமாகவும், துன்னாலை, சுவிஸ், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசதுரை அவர்கள் 20-11-2020 வெள்ளிக் கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்து விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், சுதாவின் பாசமிகு தந்தையும், பூரணம் துரைராசா (லண்டன்), பாலச்சந்திரன் (பாலா சேவிஸ் ரேசன் மந்திகை), ஜெயறஞ்சன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமசிவம், றஞ்சி, சாந்தி, குணரத்தினம், அருந்தவமலர், துரைரத்தினம், சீவரத்தினம், ஞானமூர்த்தி, மகாலட்சுமி, சிவஞானமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லண்டனைச் சேர்ந்த கணேசானந்தசிவம், நிறஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லண்டனைச் சேர்ந்த சுவேதா, ஜெயதர்சினி, அனோஜன், அபினயா, ஆயுதன், ஜேர்மனியைச் சேர்ந்த அபி ஆகியோரின் பாசமிகு பெரிய தகப்பனாரும், லண்டனைச் சேர்ந்த டினுஷன், தக்ஷயன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-11-2020 நாளை திங்கட்கிழமை கனடா (ரொரன்றோ) மண்டபத்தில் இடம்பெறும். அதேதினம் மிஷன் பாடசாலை வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நினைவஞ்சலியும் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 05 . 1937

மறைவு 27 . 11 . 2020

### கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் (பேப்பர் சோமு)

(ஓய்வுபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் 27.11.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இலட்சுமியம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், மனோகரி, ரவிக்குமார் (கண்ணன் - டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன், சுபாங்கினி, (டென்மார்க்) ஆகி யோரின் அன்பு மாமனும்,தேஜஸ்வியின் பேரனும், காலஞ்சென்ற தங்கரட்ணம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசையா, கிருஸ்ணபிள்ளை மற்றும் சிவராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், விஜயகாந்தன் (டென்மார்க்), காலஞ்சென்ற இலட்சுமிகாந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் சிறிய தகப்பனும், கமல சரோஜினியின் (டென்மார்க், மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 605 9973

## வாடகைக்குத்தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.
**கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி** விரும்பத்தக்கது.

**077 624 4796**

## விற்பனைக்குண்டு

2 Stroke ஆட்டோ
விற்பனைக்கு உண்டு
**077 9474 860**

## Manager, Supervisor Jaffna

தகைமைகள்:-* ஆண்
* விற்பனை சந்தைப்படுத்தலில் முன் அனுபவம் முக்கியமானதாகும்.
* வாடிக்கையாளருடன் சிறந்த தொடர்பாற்றல்.
* வயது : 30-45

தொடர்புகளுக்கு **0776231295**
**021-221-6889** (அலுவலக நேரத்தில் மட்டும்)
நேர்முகத் தேர்வு : 30.11.20-8.12.20
10am - 12pm
இல.175, K.K.S. Road, Jaffna.

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**
(மணமகள்களுக்கு மட்டும் 28.11.2020 முதல் 02.12.2020 வரை) மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும். ஞாயிறும் திறந்திருக்கும்.
**இல.5, ஐந்தாம் ஒழுங்கை பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்**
**(பேபி ஸ்ருடியோ பக்கத்து லேன்)**
**021 222 9306, 077138 7596, 071 999 9306**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1988 ஆம் ஆண்டு பிறந்த விசாக நட்சத்திரம், கிரகபாவம் 65, 8 இல் செவ்வாய் ராகு ஜாதக பல்கலைக்கழக விரிவுரையாளர் மணமகனுக்கு மணமகள் தேவை

**071 316 5728**

## வேலையாள் தேவை

யாழ் பிறவுண் வீதியில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு
1. Graphics Designer தேவை- இரண்டு வருட அனுபவம்.
2. Online Sales & Marketing Expert தேவை. ஒரு வருடத்திற்கு மேல் அனுபவமுள்ளவர்கள் விரும்பத் தக்கது.

**T.P: 0777 157 070**

---

MAG
saves lives builds futures

### Vacancy Announcement
### 03 X Mechanics
### (Contract Position)

The Mines Advisory Group (MAG) is British Non-Governmental Organization registered as a charity, undertaking humanitarian mine action around the world. MAG is working to save lives and build futures in Sri Lanka by reducing the risk presented by remnants of conflict.

MAG Sri Lanka is seeking applications from suitable candidates to consider for the post of **Mechanic**. Selected candidates will be deployed in MAG **North/East province** and should be flexible in working all parts of the region according to MAG operational locations.

As part of MAG's commitment to safeguarding, this post is subject to check reference before an offer of employment is confirmed.

**Essential Skills & Requirements**


- Should have at least a certificate level qualification in Heavy vehicle/Construction Equipment repairs and maintenance from a recognised Institution.
- Minimum 1-2 years' experience on mechanical, electrical, hydraulic repairs and maintenance
- Preference will be given to heavy equipment mechanics and automobile mechanics
- Preferable given for Mechanics with welding skills.
- MAG operates on a 21-day rotational 3 weeks continuous work cycle and be prepared work away from home.
- Accommodation Allowance will be provided to find accommodation.

Salary will be based upon the MAG Salary Scale on a fixed term contract.

Please submit your CV to:
Human Resources Coordinator: recruitment.lk@maginternational.org
(Include "Mechanic" in the subject line)
**Deadline: 4:00pm Sunday 6th December 2020**
www.maginternational.org

***MAG is an equal opportunity employer. Women are highly encouraged to apply the above post***

---



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த
நகைகள்
அறுதியாக
போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில்
அடகு வைத்த நகைகளுக்கு
**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**
**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0776 445322 இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | ஓட்டுச்சுட்டான் | 074 0929571 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | வவுனியா | 074 0920313 |
| கல்முனை | 071 0870663 | நெல்லியடி | 074 0920357 |
| ராகலை | 071 0870703 | சங்கானை | 074 0920317 |

---

## உங்கள் நண்பர்களுக்கு உதவிடுங்கள்



1 Help → வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த மதிப்புமிக்க தகவலை பகிருங்கள்

2 இந்த துண்டு பிரசுரத்தை புகைப்படம் எடுத்து வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் உறவினர்கள் நண்பர்களுக்கு பகிருங்கள்

3 இலங்கைக்கு வராமலேயே உங்கள் கனவு இல்லத்தை வஜிர ஹவுஸ் மூலமாக கட்டு விக்கலாம்

4 **55** இலட்சம் முதல் சொகுசு வீடுகள் (இலகு தவணை வசதிகள் உண்டு)

5 ரூ10,000 செலுத்தி வேலை தொடங்கவும்
ஆன்லைன் பணம் செலுத்தலாம் VISA MasterCard

• யாழ்ப்பாணம் ✔ • வவுனியா ✔
• முல்லைத்தீவு ✔ • மன்னார் ✔
• கிளிநொச்சி ✔

6 உங்கள் வருகையின் போது குடிபுகலாம் →



~~97~~ இலட்சம் **91** இலட்சம் **6** இலட்சம் தள்ளுபடி ✔

**This offer is valid for limited days**
இந்த சலுகை வரையறுக்கப்பட்ட நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்

7 ரூ10,000 செலுத்தி வேலை தொடங்கவும்
ஆன்லைன் பணம் செலுத்தலாம் VISA MasterCard



24 மணிநேர சேவை
(பகல்/இரவு)
**0094701757736**

→ யாழ்ப்பாண அலுவலகம்
**54/11,** கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

8 மேலும் வடிவமைப்புகளை தேர்ந்தெடுப்பதற்கு
www.vajirahouse.net

9 கட்டப்பட்ட அழகான வீடுளை பார்வையிட
YouTube → Vajira House

1916 ம் ஆண்டு தொடக்கம், 104 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டட நிர்மாண துறையின்

# வஜிர ஹவுஸ்

**070 175 7736** 54/11, நல்லூர் கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்

## தேவை

யாழ். நகரில் இயங்கும்...
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு
வேலைகளில் நிபுணத்துவம் பெற்ற

ATEA
MAINTENANCE AND REPAIRS

நிறுவனத்திற்கு துப்பரவுத்
தொழிலாளர்கள் தேவை.

0771157302

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சியில்..

Diploma in Spoken English

முழு / பகுதி நேரம்
முழுநேரப் பாடநெறிகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன.

Now prepare for your Academic / General IELTS

6.5 band score இற்கு உத்தரவாதம்
idp Exam Centre

BRITISH COLLEGE of Education
More information 0777-695605

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114
55, A9 Road, Vavuniya. {next to new bus stand}. Tel : 024-4930042

### அடங்க மறுக்கும் கொரோனா 3ஆம் அலை

# பல துணைக் கொத்தணிகள் நாட்டில் உருவாகும் ஆபத்து!

கொழும்பு, நவ. 29
இலங்கையில் பல கொரோனா துணைக் கொத்தணிகள் உருவாகும் ஆபத்து இருக்கின்றது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது ஏனவும் சுட்டிக்காட்டியுள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொழும்பு நகரில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதால், கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். கொரோனாப் பரவல் அவதானமுள்ள பிரதேசங்களில் பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் போக்குவரத்து என்பவற்றைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'- என்றார். (ம-22

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின்
அங்கத்தவரும் விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறையின்
தலைவருமான **கலாநிதி த.ஈஸ்வரமோகன்**
அவர்களது அன்புத் தந்தையாரான

### திரு. இளையவி தம்பு

இளைப்பாறிய தொழிற்சங்க தலைவர்,
இலங்கை போக்குவரத்து பிரிவு)

அவர்கள் கடந்த 27.11.2020 அன்று வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை சங்கமம் றோட், கோப்பாய் தெற்கு கோப்பாய், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற உள்ளது.

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
விலங்கியல் துறையின் தலைவர்
**கலாநிதி ஈஸ்வரமோகன்**
அவர்களின் தந்தையார்

### இளையதம்பி தம்பு

அவர்கள் 27.11.2020 வெள்ளிக் கிழமை
இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராா்த்திக்கின்றோம்.

**ஊழியர்களும், மாணவர்களும்
விலங்கியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வீரசிங்கம் அரியரட்ணம்



நேற்றாய் நிகழ்ந்தது போலிருக்க காற்றாய்
பறந்து ஆண்டுகள் நான்காகியும் உன்
நினைவுகள் எங்களுடன் நிலைத்திருக்க
எங்கள் அருமைத் தெய்வம் அரியமே நீங்கள்
எம்மைப் பிரிந்து சென்றதை எம்மால்
ஏற்றுக்கொள்ள முடியவில்லையே எம்
அரியமே உடல் வருத்தம் பார்க்காமல்
உங்களின் வாழ்க்கையை அர்ப்பணித்தீர்கள்
எல் லோருக்கும் நல்லவராய் நாணயமாக
நடந்தீர் கள் பண்புள்ளோரை பல காலம்
வாழ விடமாட்டானே இறைவன் அன்பிற்கு
இனிய அரியமே இன்று நீ பிரிந்து நான்கு
ஆண்டுகள் ஆனதடா தாங்கமுடிய
வில்லையடா உன்தன் இழப்பை மீண்டும்
இவ்வுலகில் எப்போது வந்துதிப்பாய்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**வீரசிங்கம் குடும்பத்தினர்**
மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியா.

அன்னை மடியில் 11.09.1957
ஆண்டவன் அடியில் 29.11.2016

## மரண அறிவித்தல்



### கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற யாழ். பிரதம தபாலக அதிபர்)

**பிறப்பு :15.12.1924 இறப்பு : 26.11.2020**

யாழ்.அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற யாழ். பிரதம தபாலக அதிபர்) அவர்கள் கடந்த 26.11.2020 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிலம்பாத்தை தம்ப தியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகம்மா (கனடா), அவர்களின் அன்பு கணவரும் ரோகினிதேவி (அமெரிக்கா), சியாமளா (ஓய்வு நிலை கணித ஆசிரியர்), சோமாஸ்கந்த (கனடா), நாகேஸ்வரி (கனடா), அருள்மொழி (கனடா), அருள்மோகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துவேல், சிவகுமார், விஜயகலா, சுரேஷ், கிருஷ்ணானந்த வேல், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சின்னம்மா, பொன்னம்மா, செல்லம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற பண்டிதர் இராமசாமி, முருகேசு வேலுப்பிள்ளை, மயில்வாகனம், சரவணமுத்து, கந்தையா, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜா, கஜந்தன், தினேஷன், துவாரகன், நிரூபன், சியானி பிரசானி, ஜீவிதன், சதுர்ஷன், மிதுர்ஷா, யதுர்ஷா, ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்மி, விகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 2/44, கேம்வெலி, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கடந்த 27.11.2020 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கொட்டகலை கொமர்சல் பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: S சிவகுமார் (மருமகன்) ஹட்டன்.**
**077 304 0876, 075 4942 669**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 . 08 . 1955



இறப்பு 03 . 12 . 2017

### அமரர் வல்லி மகேந்திரன் (சமாதான நீதவான் JP)

கலிகையுறை கந்தன் வழி வாழ்ந்து-எமை
கண்ணியமாய் வளர்த்து வாழ வழி வகுத்து
வையத்துள் நாம் நல்வாழ்வு வாழ
வழி காட்டிய எம் செல்வம் அப்பா.
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்து விடாதிருக்க
குல விளக்காய் இருந்தவர்-எம் அப்பா.
கடவுள் எமக்கு காட்டி கொடுத்த கண்கண்ட தெய்வம் எம் அப்பா.
காலனின் சொல் கேட்டு கடவுளிடம் சென்றீரே -எம் அப்பா
சோகத்தைத் தந்து விட்டு சொல்லாமல் சென்றதென்ன...
மூன்றாண்டு சென்றாலும் முடியாது எம் துயர்... அப்பா!! அப்பா!!!

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி ம.தேவமலர்
பிள்ளைகள்-மதன், மதனா,மோகன்ராஜ், பிறேமன்.
மருமக்கள்-சிந்துஜா, தீபன், தஜேசா
பேரப்பிள்ளைகள்-திரிஷிகா, அஷ்விகா, அனன்யா, சந்தோஷ்,
சஞ்சனா, ஹரிகணன், யஸ்மித்ரா, அஸ்வத், சஞ்சை, ஆரத்தியன்.

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
0777-078628

### சிறைக் கொத்தணி 908ஆக அதிகரிப்பு

கொழும்பு, நவ. 29
சிறைச்சாலைக் கொத்தணியில் மொத்தத் தொற்று ஆயிரத்தை நெருங்கியுள்ளது. அந்தவகையில் நேற்றும் 87 கைதிகளுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் 63 பேரும் நேற்று தொற்று உறுதியான கைதிகளில் உள்ளடங்குகின்றனர். இதையடுத்து இதுவரை சிறைச்சாலைக் கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 908ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

*228 குடும்பங்கள்...*

களைச்சேர்ந்த 389 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 131பேர், காரைநகரில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 105பேர், சண்டிலிப்பாய் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2பேர், உடுவிலில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 15பேர், சங்கானையில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 129பேர், கரவெட்டியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், பருத்தித்துறையில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 6பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது 677 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 263 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் 3 அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**076 1619826**

## காணி விற்பனைக்கு

யாழ் கந்தர்மட சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ் வைமன் வீதியில் 2 1/2 பரப்புக் காணிதுண்டும், யாழ் வெலிங்டன் சந்திக்கு அருகில் 2 பரப்பில் அமைந்த மாடி வீடும், கொக்குவில் சந்திக்கு அருகில் 4 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 723 2535**

## மாடி வீடு வாடகைக்கு உண்டு

கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில் 12 அறை கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். நிறுவனங்களுக்கும் ஏற்ற இடம்.

**077 1995 709**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்

**ONLINE COURSES (INDIVIDUAL/GROUP)**

*ENGLISH COURSES
- Foundation Diploma in English
- Diploma in English
- Diploma in Spoken English
- Diploma in Teaching English

*ICT COURSES
- Diploma in MS-Office
- Diploma in ICT
- Diploma in H/W & Networking

**காலம்: மூன்று மாதங்கள்**
**சான்றிதழ் வழங்கப்படும்.**

ஆரம்பம்: சனி, ஞாயிறு
10.00 AM- 01.00 PM

**கற்கைப்பிரிவில்:**

*பாடசாலை மாணவர்கள்
*உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
*உத்தியோகத்தர்கள் அரச, தனியார் இணைய முடியும்.

மாணவர்கள் தமது பதிவினை அலுவலகத்தில் உறுதிப்படுத்தி **Zoom** வகுப்பில் இணைய முடியும்.

**On-line IELTS வகுப்புகள் ஆரம்பமாகின்றன**

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு மட்டும் விசேட பிரிவு ஆரம்பமாகின்றது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அலுவலகத்தில் பதிவுசெய்ய முடியும்.

**பதிவு:**

**Type your Name , Course Name to**
**076 685 2529 / 077 602 1794**

**IPS** பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்




29.11.2020 அன்று 60வது அகவையில் கால்பதிக்கும்

**உயர்திரு. சின்னத்தம்பி முருகானந்தன்**
(அதிபர் கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி)

அவர்களை கிளி/ ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை சமூகம்**

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்துடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் **NVQ – Level** 3 தரத்திலான கீழ்வரும் புதிய பயிற்சிநெறிகள் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள் (6 மாதங்கள் - உள்ளகப்பயிற்சி, 6 மாதங்கள் - வெளியகப்பயிற்சி)**

1. கணினி பிரயோக உதவியாளர் (Computer Application Assistant)
2. ஆங்கிலக்கற்கை நெறி (English)
3. குளிரூட்டலும் வளிச்சீராக்கலும் (Ref & Air Condition Mechanic)
4. அழகுக்கலை/சிகை அலங்கரிப்பு (Beautician & Hair Dresser)

**பயிற்சி நெறி 2 இற்கான தகைமைகள்**

➢ *க.பொ.த சா/தரத்தில் கணிதம், ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சாதாரண சித்தியைக்கொண்டிருத்தல்.*

**பயிற்சி நெறி 1, 3, 4 இற்கான தகைமைகள்**

➢ *க.பொ.த சா/தரம் வரை கற்றிருத்தல்.*

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள 17–30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களது தொலைபேசி இல. மற்றும் பயிற்சி நெறியினை தெளிவாக குறிப்பிடப்பட்டு **20.12.2020** இற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

**தொடர்புகளுக்கு:** தொ.பே: 021-221-1342 / 077-7859308
**எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்,**
**219, நாயன்மார்கட்டு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்:** nanthakumar.mahenthiran@soscvsrilanka.org
jaffna@soscvsrilanka.org

# அன்னை நாகா

**50%**

**பூட் சிற்றியில் யாழ். கிளையில்**

**விசேட விலைக்கழிவு**

**பண்டிகைகால விஷேட விலைக்கழிவு**



- Fancy
- Kids Item
- Gift & Toys
- Party Item

**up to 50% Discount**

**ரூ.3000 /= இற்கும் மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 kg சீனி இலவசம்**

**இச் சலுகை வரும் (29.11.2020 தொடக்கம் 05.12.2020) வரை**



**அன்னை நாகா பூட் சிற்றி**

**175,K.K.S.Road. Jaffna.**
**021 739 0192, 021 739 0194**

# புதிய டெல்மன் வைத்தியசாலை

## வெள்ளவத்தை கொழும்பு - 06

அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட எமது வைத்தியசாலையின்

## புதிய தாதிமார் மாணவர்களுக்கான விண்ணப்பம்

பதிவு எண் - PV 10383

**கல்வித்தகைமைகள்**

1. க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் C சித்தி உட்பட ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
2. க.பொ.த.உயர்தர பரீட்சையில் தோற்றியிருப்பது மேலதிக தகைமையாகும்.
3. கல்வி தகைமைகளின் மூலப்பிரதியின் நிழற் பிரதிகளை விண்ணப்பதுடன் அனுப்பிவைக்கவேண்டும்.



**பொது தகைமைகள்**

18 - 22 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்
உயரம் 5' அடிக்கு குறையாமல் இருத்தல்வேண்டும்
திருமணம் ஆகாதவராக இருத்தல்
உடல் மட்டும் மனரீதியாக ஆரோக்கியமாக இருத்தல்
பெண்கள் மட்டும்

**தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு தங்குமிடம், உணவு மற்றும் கீழுள்ள சலுகைகள் வழங்கப்படும்**

**1** ஆம் வருடம் மாதாந்தம் 9500/=
**2** ஆம் வருடம் மாதாந்தம் 10000/=
**3** ஆம் வருடம் மாதாந்தம் 11000/=

**விதிமுறைகள்**

1. பயிற்சி காலகட்டத்தில் எமது தாதி மாணவர்கள் வகுப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல்வேண்டும்
2. 3 வருட பயிற்சி முடிவின் பின் டெல்மன் வைத்தியசாலையில் தாதியாக வேலை செய்யமுடியும்

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முறை**

மேற்கொண்ட தகுதிகள் கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்ப படிவத்தை க.பொ.த.சாதாரண மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சை சான்றிதழின் பிரதியுடன் கீழ் உள்ள முகவரிக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும் கடித உறையின் இடது மூலையில் "தாதிமார் பாடசாலை" என குறிப்பிடவும்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :**

**மனிதவள முகாமையாளர்**
**புதிய டெல்மன் வைத்தியசாலை,**
**இல.258, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு -**

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 12 . 1944



மறைவு
28 . 11 . 2020

## சரவணை-கந்தசாமி (சாமியார்)

(தயா மரக்காலை உரிமையாளர்)

மயிலணி வடக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணை-கந்தசாமி நேற்று (28.11.2020) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், தயாசோழன் (இலண்டன்), றஜீத் (Piraveen Construction), காலஞ்சென்ற பிரதாஸ் (மயூரன்) மஞ்சுகி, பரீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், E.N. பவதீஸ்வரன் (MG Consultant), அகிலா (இலண்டன்), லதாயினி, விநோதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரவீன், பிரதிஸ்ஷா, கோகுலவர்னன், சபிஸ்னவி ஆகியோரின் அன்பு பேரனாரும், காலஞ்சென்ற செல்லையா, பற்பனாவதி, இராசலட்சுமி, கருணமலர் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசுப்பிரமணியம் (வீரன்) இராஜேஸ்வரி



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, சொர்ணவடலிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (28.11.2020) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (வீரன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை இராஜலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அம்பலவாணர் நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும், யோகேஸ்வரி, லோகேஸ்வரன், சறோஜினிதேவி, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், கிருஷ்ணசாமி, ஜெகன்மோகினி, காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் திலகவதி ஆகியோரின் மைத்துனியும் நந்தகுமார் (ரவி- ஜேர்மனி), கிருஷ்ணகுமார், (குமார்-ஹொலண்ட்), ரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மஞ்சுளாதேவி (மஞ்சு), துவாரகாதேவி (செல்வி), பிறேம்குமார் (பிறேம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்தியா, காவியா, வித்தியா, அஸ்வின் ஆகியோரின் விருப்பத்திற்குரிய பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக் கிழமை பி.ப 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சொர்ணவடலி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 222 5198

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 03 . 1937



இறப்பு
28 . 11 . 2020

## நடராஜன் இராஜேஸ்வரி

யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும், நல்லூர் மூத்தவிநாயகர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நடராஜன் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (28.11.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குழந்தைவேலு சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராஜன் அவர்களின் அன்பு மனைவியும், சாவித்திரி (Germany), விஜயகுமார் (Australia), ரவீந்திரகுமார் (Canada) காயத்திரி (Londan) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், யோகரட்ணம் மற்றும் சகுந்தலா (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாதேவன், வசந்தா, சூரியகுமாரன், பாமினி ஆகியோரின் மாமியாரும், சாலினி, கோகுலன், ஜனனி, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் 29, மூத்தவிநாயகர் வீதியிலுள்ள அன்னாரின் வீட்டில் நடைபெற்று, செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சாவித்திரி - 0049234538714
விஜயகுமார் - 0061407254598
ரவீந்திரகுமார் - 0016474586509
காயத்திரி - 00442034899103

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி சற்குணநாதன் திகழ்மதி (பவா)

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணநாதன் திகழ்மதி (பவா) நேற்று (28.11.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிதம்பி அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை அன்னம்மா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும், சற்குணநாதன் (இலங்கை சீமெந்து கூட்டுஸ்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், கௌசல்யா (அவுஸ்திரேலியா), கஜீபன், பிறிந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குணநாதன் (அப்பன்), ரவீந்திரன், (வானரவி) குணசிங்கம், அகிலன் (UK) ஆகியோரின் அன்பு சகோதரியும் சுதர்சன் (அவுஸ்திரேலியா), விநோதா, தனேஸ் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்தோஸ், சைலேஸ், சானுயா (அவுஸ்திரேலியா), லகிஷா, அனன்யா, கவின்சன், விபிக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.0 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 985 2085

### குடாநாட்டை...

இதுவரை முடக்குவது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து கடந்த 21ஆம் திகதி காரைநகருக்கு வந்த ஒருவர் 25ஆம் திகதி வரையில் சுகாதாரத் துறையினருக்கு அறிவிக்காமல் சுற்றித் திரிந்துள்ளார். இதன் பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் நடமாடித் திரிந்துள்ள நிலையில் குடாநாடு முடக்கப்படுமா என்பது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இதுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டை முடக்குவது தொடர்பில் எந்தத் தீர்மா னத்தையும் நாம் மேற்கொள்ளவில்லை. அவருடன் தொடர்புடையவர்களை இனம் கண்டு தனிமைப்படுத்தி வருகின்றோம். அவர்களுக்கு 7 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படும். இதன்போது கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே எமது அடுத்த கட்ட நடவடிக்கை அமையும், என்றார். (ஒ,5)

### கொழும்பிலிருந்து...

யாழ்ப்பாணம், நவ 29

கொழும்பில் பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் அங்கிருந்து தப்பி வந்தவரே காரைநகரில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் தொற்றாளர் கொழும்பில் தங்கியிருந்த இடத்தில் இருந்தவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் தங்கியிருந்த அனைவருக்கும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இதற்கிடையில் காரைநகர் தொற்றாளர் அங்கிருந்து தப்பி வந்துள்ளார்.

அவருடன் அங்கு தங்கியிருந்த ஏனையோருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே கொழும்பிலிருந்து தப்பி வந்த தொற்றாளர் தொடர்பான தகவல் வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னரே அவர் கண்டறியப்பட்டு பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஒ,5)

### வேலணையிலும்....

யாழ்ப்பாணம், நவ. 29

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வீதி திருத்தப்பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

'மாகா' நிறுவனத்தில் பணிபுரியும் கெக்கிராவையைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவருக்கே கோரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். வீடுகளுக்குச் சென்று கடமைகளுக்கு திரும்புவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்படும். அவ்வாறு தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 75 பேரில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ஒ,26)

### 17 கடைகள்...

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் மற்றும் வேலணையில் கண்டறியப்பட்ட தொற்றாளர்களால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 17 கடைகள், 3 தவறணைகள், ஓர் அரச மருத்துவமனை மற்றும் இரண்டு தனியார் மருத்துவமனைகள் பகுதியளவில் முடக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேசத்தில் மாத்திரம் 11 கடைகளும், 3 தவறணைகளும் முடக்கப்பட்டுள்ளன. மூளாய் மருத்துவமனை மூன்று நாள்களுக்கு முழுமையாக மூடப்பட்டுள்ளது. அந்தத் தொற்றாளர் யாழ்ப்பாணம் மாநகர சபை பிரதேசத்திலும் பல கடைகளுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கும் சென்றுள்ளார்.

பரமேஸ்வரா சந்திக்கு அருகில் அமைந்துள்ள நொதேர்ன் சென்ரல் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, யாழ் மருத்துவமனையின் வரவேற்பு பகுதி என்பன முடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ரொப்பாஸ் மற்றும் த குமாரசாமி ரெக்ஸைஸல் என்பனவும் தொற்றாளர் சென்று வந்தமையால் மூடப்பட்டுள்ளன. பி.பி.ரி. யாழ்ப்பாணம் கொழும்பு பிரயாண சேவை பதிவு கடையும் முடக்கப்பட் டுள்ளது. ஓட்டுமடத்தில் உள்ள கராஜ், ரொலக்;ஸ் பேக்கரி, புத்தகசாலை ஒன்றும் முடக்கப்பட்டுள்ளது.

காரைநகர் தொற்றாளர் தனது உறவினர் ஒருவரின் திவசத்துக்காக பல வீடுகளுக்குச் சென்று அழைப்பு விடுத்துள்ளார். அந்த வீட்டார்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அவரது உறவினரின் திவசத்துக்கு சென்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வேலணையில் கண்டறியப்பட்ட தொற்றாளர் சென்று வந்த 2 வர்த்தக நிலையங்கள் மூடப்பட் டுள்ளன. (ஒ,5,26)

### காரைநகரில்....

நிலையில் நாளை திங்கட்கிழமை பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு உயர் மட்டத்தில் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

காரைநகரில் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் 21ஆம் திகதி கொழும்பிலிருந்து திரும்பியிருந்த நிலையில் 25ஆம் திகதியே தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அதற்கு இடைப்பட்ட காலத்தில் பல இடங்களுக்கும் சென்றதுடன் பலருடனும் பழகியுள்ளார். அவர் பழகியவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும், தொற்றாளருடன் பழகியமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து ஆசிரியர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

தொற்றாளருடன் பழகிய பின்னர் ஆசிரியர் பாடசாலைக்குச் சென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

### கொரோனா சாவு...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

கொழும்பு 02 ஐச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு 08 ஐச் சேர்ந்த 96 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் நேற்றும் 487 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ,22)

### மாணவர்களின்...

இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென பல்கலைக்கழப் பேரவையால் நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தால் முன்மொழியப்பட்டு, பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையால் பரிந்துரைக்கப்பட்ட படி சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்கான தண்டனைகளை பல்கலைக்கழகப் பேரவை இறுதி செய்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று 28 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட பல்கலைக்கழகத்தின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட மூன்றாம் வருட மாணவர்களுக்கு, அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 946 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரியால் வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அதன் படி அடுத்து வரும் நாள்களில் மாணவர் ஒவ்வொருவருக்குமான தண்டணைகள் துணைவேந்தரால் அறிவிக்கப்படும்.

மூன்றாம் வருட மாணவர்கள் 3 பேருக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் (இரண்டு அரையாண்டுகள்) பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும், 4 பேருக்கு நடப்பு அரையாண்டு காலத்துக்குள் (அடுத்த வருடம் பெப்ருவரி மாதம் வரை) பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக்குரிய இந்த 7 பேருக்கும் கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும், மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது. கற்கை நெறியின் நிறைவில் வகுப்புச் சித்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படக் கூடாது, மற்றும் எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தினுள் அவர்கள் வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்கும் போது, தற்போது இழைத்துள்ள குற்றங்கள் கணக்கிலெடுக்கப்பட வேண்டும்.

தற்போது தண்டணை அறிவிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்காலத்தில் மீண்டும் இதே வகையான குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவர்களின் மாணவர் பதிவு இரத்துச் செய்யப்பட வேண்டும்.

சம்பவத்தை அடுத்து, கலைப்பீடச் சபையினால் அடையாளங்காணப்பட்டு உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த மூன்றாம் வருட மாணவர்கள் 21 பேரில் 12 பேருக்கு விதிக்கப்பட்ட உள்நுழைவுத் தடை உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட்டாலும், அவர்களுக்கும் எதிர்காலத்தில் மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது என்றும் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடக் கூடாது என்பதற்கான எச்சரிக்கைக் கடிதம் ஒவ்வொருவருக்கும் துணைவேந்தரால் வழங்கப்பட வேண்டும் என்றும், இவர்களை விட மீதி இரண்டு பேர் குற்றச் செயல்களுடன் தொடர்புபடாதவர்கள் என்பது அறியப்பட்டதன் காரணமாக அவர்கள் இருவரும் தண்டணைகளிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளனர் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 6பேருக்கு இத்தகைய சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்ற எச்சரிக்கைக் கடிதம் துணைவேந்தரால் வழங்கப்பட வேண்டும் என்றும் பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ.இ)

### பிணையில்...

கைதுசெய்யப்பட்ட புனித மடத்தினார் குருபீடத்தின் முதல்வரான அருட்தந்தையை யாழ்ப்பாணம் நீதிவான் நேற்று பிணையில் விடுவித்தார்.

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி நினைவேந்தலை நடத்த முயன்றமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளை பொலிஸார் முன்வைத்திருந்தனர். அவர் சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் முன்னிலையாகி, பிணை விண்ணப்பம் செய்தார்.

பிணைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த பொலிஸார், சந்தேக நபருக்கு வெளிநாடுகளிலிருந்து நிதிப் பங்களிப்பு கிடைப்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் மன்றுரைத்தனர்.

அவற்றைப் பரிசீலித்த நீதிவான், அருட்தந்தையை ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவித்து வழக்கை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு ஒத்தி வைத்தார். (ஒ,த,இ)

### வடக்கு...

கிடைத்துள்ளன என்று காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

'நாட்டில் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் ஒரு இலட்சம் பேருக்குக் காணிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதுவரை 6 இலட்சம் கேள்விப்பத்திரங்கள் கிடைத்துள்ளன. வடக்கு கிழக்கில் இருந்தே அதிகளவிலான விண்ணப்பங்கள் வந்துள்ளன' எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே நேற்று அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஒரு இலட்சம் பேருக்குக் காணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதில் அந்தந்த பிரதேசங்களுக்கான மக்களுக்கு இதில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். நாட்டின் அபிவிருத்திக்காகவே இந்த வேலைத்திட்டம் என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் இருந்தே அதிக கோரிக்கைகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

எனவே, வடக்கு, கிழக்கு மக்களையும் நாம் கருத்தில்கொண்டே காணிகளை வழங்குகின்றோம். காணி உரிமை உள்ள சகலருக்கும் காணிகளை வழங்குவோம்.

வடக்கு, கிழக்கில் இளைஞர்களுக்கு விவசாயத்துக்கான காணிகள் வழங்கப்படும். அதில் எமக்கு மகிழ்ச்சியே.

பொதுமக்களின் காணிகள் அநாவசியமாகவோ கட்டாயமாகவோ கையகப்படுத்தப்பட்டு இருந்தால், அவ்வாறான காணிகளை உரிய மக்களுக்கு வழங்குவோம். அவர்கள் விவசாயம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (ஒ,22)

## இன்று...

தினம் இன்றாகும். அன்றைய தினம் ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி வழிபடுவது வழமையாக உள்ளது. மாவீரர் தினத்தை அடுத்து இத்தீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளதால் பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் இதை தவறாக புரிந்து இதனை தடுக்க முறபடலாமென பலர் அஞ்சுவதாக எம்மிடம் தெரிவித்துள்ளனர். அதைத் தடுத்து விடாதீர்கள் என்று இந்து சமயப் பேரவையின் தலைவர் சி.சக்திகிரீவன் கோரிக்கை விடுத்துள் ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்துக்கள் கடைப்பிடிக்கும் கார்த்திகை விளக்கீட்டின் மகோன்னதமான புனிதத் தன்மையை புரிந்துகொள்வது அவசியமாகும். இந்தியாவில் இந்நிகழ்வு வெகுவிமர்சையாக நடை பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். திருவண்ணா மலை இதற்கு பிரசித்தி பெற்றது. உலகில் உள்ள அனைத்து ஆலயங்களில் நடைபெறினும் முருகப்பெருமான் எழுந்தருளி உள்ள ஆலயங்களில் சிறப்புற நடைபெறுகின்றது. நாளை திங்கட் கிழமை விஷ்ணு ஆலயங்களில் இத்தீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளது.

தற்போதைய கொரோ னாச் சூழலில் சுகாதார நடைமுறைகளைப் பேணி கடைப்பிடிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம், என்றுள்ளது. (ஒ.இ)

## வங்காள...

அது நேற்றைய நிலையில் எதிர்வரும்முதலாம்திகதி தொடக்கம் நகரத் தொடங்கும் என்றும் அன்றைய தினமே புயலாக மாறுமா இல்லையா என்பதைக் கணிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ள மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா, எதுவாக இருப்பினும் இன்று மாலையிலிருந்து மழை பெய்யத் தொடங்கும் எனவும் முதலாம் திகதியிலிருந்து அது கனமழையாக மாறும் என்றும் குறிப்பிட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் புதிய தாழமுக்கம் உருவாகியுள்ளது. இது புயலாக மாறுமா இல்லையா என்பது தொடர்பில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலையே கூற முடியும். செவ்வாய்க் கிழமையிலிருந்து இது நகரத் தொடங்கும். தற்போதைய நிலையில் இது நகரும் பாதை வடக்கை ஊடறுத்துச் செல்கின்றது. முல்லைத்தீவு ஊடாகப் பிரவேசித்து, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தின் ஊடாக மன்னார் வளைகுடாவை ஊடறுத்து தமிழகத்தின் விசாகபட்டினம் அல்லது குமரிமுனை ஊடாகச் செல்லும். இன்று மாலையிலிருந்து வடக்கில் மழை பெய்யக் கூடும். முதலாம் திகதியிலிருந்து கனமழை பெய்யும்.

தாழமுக்கமாக இருந்தாலென்ன, புயலாக மாறினாலென்ன வடக்குக்கு முதலாம் திகதியிலிருந்து கனமழை கிடைக்கும். இது புயலாக மாறினால் எதிர்வரும் 2ஆம் திகதி அல்லது 3ஆம் திகதி கரையைக் கடக்கூடும். தற்போதைய நிலையிலேயே இந்தக் கணிப்பீடு. நிலைமைகளைப் பொறுத்து இது மாற்றமடைய லாம் என்றார். (ஒ.5)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



ZOOM
Video Editing
திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள்
பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
Adobe Premiere 2020, Edius 8.3, After Effects, Photoshop,
15 Days 30 Hrs video plugin
Colorcorrection, Adorage Filter, Mask, New blue, Blu ray writing Skin smooth, Color Upgrading Wedding song Editing Tectnic,
விபரங்களுக்கு - 0773903123

### திருமண தரகர்களுக்கான அழைப்பு

இந்து கிறிஸ்தவ மதத்தில் அனைத்து சமுதாயத்தினருக்குமான திருமணங்களை ஒழுங்கமைக்கும் தரகர்கள் எம்மை தொடர்பு கொள்ளுங்கள். புதிதாக திருமண தரகு தொழிலை மேற்கொள்ள விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். உங்கள் வீண் அலைச்சல், நேர விரயங்களை குறைத்து கூடுதல் வருமானம் பெற உதவி செய்கின்றோம்.

076 213 2272

### வாடகைக்கு விடப்படும்

இல 235, ஆஸ்பத்திரி வீதி.யாழ்பாணம். எனும் முகவரியில் அமைந்துள்ள மூன்று தளங்களை உடைய கட்டடம் வாடகைக்கு விடப்படவுள்ளது. ஒவ்வொருதளமும் 2000 சதுர அடி விஸ்தீரணம் உள்ளது வியாபார ஸ்தாபனம், வங்கி,கல்வி நிறுவனங்கள், களஞ்சியம் போன்ற தேவைகளுக்கு ஏற்றது.

தொடர்புகளுக்கு 074 076 5803

### விற்பனைக்கு

தரமான மணல், சல்லி, என்பவற்றை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P: 075 757 4865

### கணக்காளர் தேவை

கணினி மூலம் (Quick Book) கணக்காளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 075 6328 578

### காணி தேவை

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்பு:076 2212 037

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1983ம் ஆண்டு பரணி நட்சத்திரம் 3ம் பாதம் (கி.ப 31 1/2) 7 ல் செவ்வாய்யுடைய சொந்த தொழில் உரிமை யாளர். மணமகனுக்கு மணமகள் தேவை.

077 459 3235, 021 436 2226

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவில் இருபாலை வீதியில் பழனி ஆண்டவர் ஆலயம் அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை. (ராச வீதி சந்தியிலிருந்து 50 மீற்றர் தூரம்)

குரு


077 468 3354, 077 2880 152

### 1 நாள் ஊர் கோழிகுஞ்சுகள்

இன்று முதல் தினமும் பெற்றுக்கொள்ளலாம் விலை
இடம்:- பண்ணாகம், சுழிபுரம். 077 33 22 433 75/=

## மரண அறிவித்தல்

### இராமு பொன்னம்பலம்



பிறப்பு 08.12.1945 இறப்பு 28.11.2020

முள்ளியவளை, தண்ணீர் ஊற்றை பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு பொன்னம்பலம் 28.11.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், திருநாவுக்கரசு முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பத்மாவதியின் பாசமிகு கணவரும், சிவாஜினி (லண்டன்), சிவசேகரன் (லண்டன்), சிவமாதவன் (லண்டன்), சிவகீதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுதர்சன் (லண்டன்), ஜெயந்தி (லண்டன்), கிரிஜா (லண்டன்), வினோபா கனகேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி, கிருஷ்ணகுமார், தனபாலசிங்கம் ஆகியோரின் மாமனும், கௌசிகா, சகானா, ஜனுசன், ஜனுசனா, அர்ச்சிகன், அர்ச்சியா, விசாகன், விபிசன், தீபா, சுதர்சன், கஜந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, ராசலட்சுமி, பாக்கியம், சரஸ்வதி மற்றும் அருணாசலம் ஆகியோரின் சகோதரரும், செல்வராசா(கனடா), காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, சரோஜினிதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஓடை அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்.
0777 578 171, 021 226 3934

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 • 09 • 1987



ஆண்டன் அடியில் 29 • 11 • 2018

### அமரர் இராஜ்குமார் விஜெய் (மானிப்பாய்)

திதி: 07.12.2020

எங்கள் அன்பு மகனே விஜெய்
ஈரவிழிகளுடன் ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறவில்லை நம் துயரம்
ஆழக் கால் பதித்து நீ நடந்த முற்றம் இன்று
வெறிச் சோடிக் கிடக்கின்றது
நீ இல்லாத வீடும் பொலிவிழந்து போனது
பார்க்கும் இடம் எல்லாம் உன் புன்னகை முகமும்
சிரிப்பொலியும் தான் கேட்குதடா
உன் பாச நினைவுகள் எம்மை விம்மி அழவைக்குதடா
ஒரு கூண்டுப்பறவைகளாக நாம் இருந்தோம்
இன்று எமைவிட்டுத் தனியே பறந்துவிட்டாய்
கனவிலும் நினைவிலும் நீதான் வந்து செல்கிறாய்
எங்கள் இதயம் நொருங்கிவிட இமைகள் நனைய
எமை தவிக்கவிட்டு நீண்ட நெடுதூரம் சென்றுவிட்டாய்
இறப்பு என்பது நியதி என்றாலும் ஏனோ அதை ஏற்க
எங்கள் உள்ளம் மறுத்து நிற்கின்றது
இனி ஒரு பிறப்பு உனக்கு வேண்டாம் மகனே
உனது ஆத்மா பிறப்பில்லாப் பெருவாழ்வு வாழ
எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
அண்ணா, அண்ணி, உற்றார், உறவினர், நண்பர்கள்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி

Regi… as a N…

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை (29.11.2020) சிகரம் : 24

கார்த்திகையென்றாலே மாவீரர் நினைப்பில் படைக்கு
போர்க்கால ஞாபகத்தில் பயமெடுக்கும் – தார்பட்ட
நாய்களாக நாலுதிசைக்கும் கண்ணைத் திருப்பினும்
பேய்களாளும் தேசத்தில் மூண்டெழும் பெருஞ்சுடர்!

–கொரோனாச் சித்தர்



# கசிப்புக் கோட்டைக்குள் இரட்டைக் கொலை!

**தீபாவளிக்கு முதல் நாள். சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் நிகழ்ந்த இரட்டைக் கொலையால் குடாநாடே அதிர்ச்சியில் மூழ்கியது. இந்த இரட்டைக் கொலைக்கான காரணம் குடும்பத் தகராறே என்று மேலோட்டமாகச் சொல்லப் பட்டாலும் அந்தப் பகைக்கான அடிப்படை என்ன? கொலையாளிகள் யார்? கொலை நிகழ்ந்த விதம் எப்படி? என்பன குறித்தெல்லாம் எமது விசேட புலனாய்வுக் குழு திரட்டிய தகவல்களின் தொகுப்பு இது.**



செல்வம்



தேவராசா

விடிந்தால் தீபாவளி.

சுழிபுரம் குடாக்கனை பகுதியில் இனம் புரியாத அமைதி. அந்த மயான அமைதிக்கு, மணித்தியாலங்களுக்கு முன்னர் நிகழ்ந்த அடிதடியே காரணம். ஆனாலும் அந்த செயற்கை அமைதி நீண்டநேரம் நிலைத்திருக்கவில்லை.

" வள் ..! வள்...!! வள்!!"

திடீரென நாய்கள் ஒன்றாகிக் குரைத்துக் கொண்டோடின.நாய்களின் குரைப்பொலியை மிஞ்சுவது போல ஒழுங்கையில் இருந்து மேலெந்தன தூஷண வசவுகள்.

" அறுவார் திரும்ப தொடங்கிட்டாங்கள்"

ஊரிலுள்ளவர்கள் மனதுக்குள் திட்டிக் கொண்டே அடுத்து என்ன நடக்கப் போகின்றதோ என ஏக்கத்துடன் அந்தக் கொடிய இரவைச் சபிக்கத் தொடங்கினர்.தூஷணங்களை முழங்கிக் கொண்டு , அந்த இருளிலும் மின்னும் கூர்மையான கத்திகள், வாள்கள், பொல்லுகளோடு நகரத் தொடங்கியது அந்தக் கும்பல். இந்த வாள்வெட்டுக் கும்பலில் தனியே ஆண்கள் மாத்திரம் இருக்கவில்லை. பொலித்தீன்களில் மிளகாய்த்தூளை நிரப்பிக் கொண்டு பெண்கள் சிலரும் கோபாவேசமாகக் கத்திக் கொண்டு செல்வம் என்பவரின் வீட்டை அடைந்தனர். இப்போது செல்வத்தின் வீடு அந்தக் கும்பலின் முற்றுகைக்குள்!

" நீ ஒரு ஆம்பிளையெண்டா இப்ப வாடா வெளியால"

வீட்டைப் பூட்டி விட்டு உள்ளே இருக்கும் செல்வம் குடும்பத்தினரை கேவலப்படுத்தும் வார்த்தைப் பிரயோகத்தோடு வலிந்த சண்டைக்கு இழுத்தது அந்தக் கும்பல். வீட்டுக்குள்ளே செல்வமும், அவரது குடும்பத்தினரும் வெளியே சென்றால் விபரீத மாகிவிடும் என்று உள்ளுக்குள்ளேயே இருந்து, மதிலால் வெளியே நடப்பதை அவதானித்தபடி இருந்தனர்.

ஆனால் சற்றுத்தள்ளி தன்னுடைய அக்கா வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த தேவராசா( செல்வத்தின் மைத்துனர்) இந்தச் சத்தம் கேட்டு எழுந்தார். மாலையில் தன் அண்ணன் சிவகுமார் என்பவருக்கு இதே கும்பல் அடித்ததைக் கேள்விப்பட்டு இணுவிலில் இருந்து வந்திருந்தார். இப்போது மறுபடியும் அந்தக் கும்பல் தன் மைத்துனரைக் கேவலமாகப் பேசுவதைக் கேட்க அவரால் பொறுக்க முடியவில்லை. மைத்துனருக்கு ஏதும் ஆபத்தோ என்ற பயத்தில் செல்வத்தின் வீட்டுப் பக்கமாக ஓடிப்போனார்.

ஆனால் சூழலில் திடீர் மாற்றம்.

இவர் ஓடிப்போகையில் சில கணங்களுக்கு முன்னர் சத்தமிட்டுக் கொண்டிருந்த எவரையுமே ஒழுங்கையில் காணோம். என்ன நடந்திருக்கும் என்பதை அவர் ஊகிக்கும் முன்னரே,அவர் முகத்தில் அடிக்கப்பட்டது ரோர்ச் லைட் வெளிச்சம். அதேகணம் எங்கிருந்தோ வந்து மோதியது மிளகாய்த்தூள் அடங்கிய பொலித்தீன் பை.

"ஐயோ"

எரிச்சல் தாங்க முடியாமல் கண்ணைப் பொத்திக் கொண்டு , தேவராசா நிலைதடுமாறினார். அவர் சுதாகரிப்பதற்குள்-

ஆடு வெட்டப் பயன்படும் கூர்மையான கத்தியொன்று அவரது காலைப் பதம் பார்த்தது. தேவராசா குத்திட்டு அப்படியே ஒழுங்கையில் சரிந்தார்.

"ஐயோ, என்னைக் கொல்லுறாங்கள். காப்பாத்துங்கோ" ஈனஸ்வரத்தில் எழுந்தது தேவராசாவின் கடைசி வார்த்தை. இப்போது துணைக்கு இன்னும் இருவர் வாள்களோடு ஓடிவந்தார்கள். மூவரும் தேவராசா கதறக் கதற சரமாரியாக வெட்டித் தள்ளிவிட்டு இருளோடு இருளாக மறைந்தார்கள். இப்போது யாருமில்லை ஒழுங்கையில். இவ்வளவற்றையும் மதிலால் பார்த்துக் கொண்டிருந்த செல்வம், தனக்காக தன் மைத்துனர் வெட்டுப்பட்டுக் கிடப்பதைக் காணச்சகிக்காமல் வீட்டுக்காரர் மறிக்க மறிக்க வெளியே ஓடிவந்தார். அதுதான் கொலையாளிகள் அவருக்கு வைத்த பொறி. அந்தப் பொறியில் தானே போய் சிக்கிக் கொண்டார் செல்வம். காவோலையால் உருமறைப்புச் செய்தபடி இருளோடு இருளாக ஒழுங்கைக்குள் பதுங்கியிருந்த கொலையாளிகள் தங்கள் எல்லைக்குள் செல்வம் வந்ததும் வெளியே பாய்ந்தனர்.

"சதக்!! சதக்!!"

கால், கை, முதுகு என ஈவிரக்கம் இல்லாமல் செல்வத்தின் உடலில் வாள்கள் இறங்கி ,மீண்டன. வெட்டுப்பட்டு செல்வம் கீழே விழமுன்னரே கொலையாளிகள் மின்னல் வேகத்தில் அங்கிருந்து மாயமாகினர். கொலையாளிகள் மறையவும், ஊர்க்காரரும் , செல்வத்தின் குடும்பத்தவர்களும் ஒழுங்கைக்கு ஓடிவந்து வெட்டப்பட்டவர்களைக் காப்பாற்ற முயன்றனர்.

தேவராசா எந்த அசைவுமற்றிருந்தார். பார்த்தவுடனேயே உயிர் பிரிந்துவிட்டமை தெரிந்தது. ஆனால் செல்வத்துக்கு உயிர் இருந்தது. குடும்பத்தாரோடு கதைக்கவும் செய்தார். பொலிஸுக்கும், அம்புலன்ஸுக்கும் அறிவித்தார்கள். ஆனால் வழக்கம் போல பொலிஸ் அங்கே வரத் தாமதமாகும் என்பது தெரிந்ததால்,உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் செல்வத்தை மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றி அருகில் உள்ள மூளாய் மருத்துவமனைக்கு கொண்டோடினர்.

ஆனால் "இது பொலிஸ் கேஸ். இஞ்ச அனுமதிக்க முடியாது" என்று அங்கே கைவிரிக்க, மீண்டும் அதே மோட்டார் சைக்கிளில் செல்வத்தை அவரது வீட்டுக்கே கொண்டுவந்தனர். இவர்கள் வரவும் அம்புலன்ஸும், பொலிஸும் அங்கே பிரசன்னமாகியிருந்த னர்.

உடனடியாகவே செல்வத்தை அம்புலன்ஸில் ஏற்றி, யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பினர். போகும்போது தன்னுடன் வந்த உறவுக்கார இளைஞர்களோடு உரையாடியபடி இருந்த செல்வத்தின் குரல், திடீரென உச்சஸ்தாயிக்கு போனது, வார்த்தைகள் குழம்பின. வலி நிறைந்த குரலில் உரத்துக் கத்தினார். மறுகணம் அமைதியானார். அவர் உயிர் அம்புலன்ஸுக்குள் பிரிந்து விட்டிருந்தது.

தீபாவளிக்கு முதல்நாளிரவு நடந்த இந்த வெறியாட்டத்துக்கு காரணம் என்ன? யார் இப்படியொரு பாதகத்தைச் செய்யத் துணிந்தார்கள்? கொலையாளிகள் இவர்களை ஏன் குறி வைத்தார்கள்? என்பதையெல்லாம் அறிய, சில முன்கதைகளையும், இந்தச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களையும் அறிந்திருக்க வேண்டும்.

*(14ஆம் பக்கம் பார்க்க)*

# மாவீரர் நாள் 2020



"அடக்குமுறை என்பது விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி"

*கவிஞர் பொன்னம்பலம்*

நிலாந்தன்

நினைவுகூர்தல் பொதுவாக இரண்டு வகைப்படும். முதலாவது தனிப்பட்ட நினைவுகூர்தல். இரண்டாவது பொது நினைவுகூர்தல். தனிப்பட்ட நினைவு கூர்தல் எனப்படுவது ஒருவர் அல்லது ஒரு குடும்பம் இறந்து போனவரை தனிப்பட்ட முறையில் நினைவு கூர்வது. அது தனிநபர் உரிமை தொடர்பானது. அதற்கு அரசியல் பரிமாணம் ஒப்பீட்டளவில் குறைவு. பண்பாட்டு பரிமாணமும் உளவியல் பரிமாணமும்தான் அதிகம்.

ஆனால் பொது நினைவுகூர்தல் என்பது முழுக்க முழுக்க அரசியல் பரிமாணத்தைக் கொண்டது. பண்பாட்டு உளவியல் பரிமாணத்தைக் கொண்டது. அது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமை சம்பந்தப்பட்டது.

ஒரு பொது நினைவுகூர்தலின்போது ஒரு பொது இடத்தில் மக்கள் ஒன்று திரண்டு இறந்தவர்களை நினைவு கூர்கிறார்கள். இதனால் கூட்டுத் துக்கமானது கூட்டு ஆக்க சக்தியாக, அரசியல் செயலாக்க விசையாக மாற்றப்படுகிறது. அதேசமயம் துக்கம் கூட்டாக வெளிப்படுகையில் அங்கே ஒரு குணமாக்கல் செய்முறையும் உண்டு. அதாவது உளவியல் ரீதியாக அந்தக் கூட்டுத்துக்கம் குணமாக்கப்படுகிறது. அது ஓர் ஆற்றுப்படுத்தல் செய்முறை.

ஆனால் அரசாங்கம் கூட்டு நினைவுகூர்தலைத் தடை செய்திருக்கிறது. இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தமிழ் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளில் தனிப்பட்ட முறையில் நினைவுகூரலாம் என்று கூறி விட்டார். ஆனால் பொது இடங்களில் கூடி அதை ஓர் அரசியல் நிகழ்வவாக அனுஷ்டிப்பதற்கு தடை உண்டு என்றும் கூறினார். அரசாங்கத்தின் உபகரணங்களான நீதிமன்றமும் பொலிஸும் அதை உறுதிப்படுத்தின. பயங்கரவாதத் தடைச்சட்டம் ,கொவிட்19 தனிமைப்படுத்தல் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின் அடிப்படையில் பொது இடங்களில் கூடி நினைவுகூர முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டதோர் அரசியல், உளவியல், மருத்துவச் சூழலுக்குள் தமிழ் கட்சிகள் நினைவுகூர்தலை எவ்வாறு ஒழுங்குபடுத்தின?

அவர்கள் வழமைபோல துயிலும் இல்லங்களைத் துப்புரவாக்கினார்கள். பொலிஸ்காரர்களோடு வாக்கு வாதப்பட்டார்கள். அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்கள். நீதிமன்றங்களுக்கு போனார்கள். வழக்குப் போட்டார்கள். முடிவில் நினைவு கூர்வதற்கு சட்டப்படி தடை என்று தீர்ப்பை வாங்கினார்கள். அதன்பின் மக்கள் அவரவர் தங்களுடைய வீடுகளில் இருந்தபடி விளக்குகளை ஏற்றி நினைவு கூரலாம் என்று அறிக்கை விட்டார்கள்.

அவர்கள் அறிக்கை விட்டார்களோ இல்லையோ சனங்கள் வீடுகளில் விளகேற்றினார்கள். ஆனால் வெளிப்படையாக தங்கள் வீட்டின் மதிற் சுவரில் ஒரு சிட்டியை எத்தனைபேர் ஏற்றி வைத்தார்கள்? அல்லது பொது இடங்களில் ஒரு சுடரை ஏற்றி அதை அனுஷ்டித்தவர்கள் எத்தனை பேர்?அல்லது மணிகளை ஒலித்து அஞ்சலித்த ஆலயங்கள் எத்தனை?

இது கடந்த மே-18 இன் போதும் அவதானிக்கப்பட்டது. கொவிட்19 சூழலுக்குள் மே18 ஐ மக்கள் மயப்படுத்துவதில் இருக்கக்கூடிய இடர்களை கவனத்திலெடுத்து குறிப்பிட்ட நேரத்தில் எல்லா ஆலயங்களிலும் மணிகளை ஒலிக்க விடுமாறு கேட்பதென்றும் வீடுகளில் சுடரேற்றுமாறு கேட்பது என்றும் முடிவெடுக்கப் பட்டது.யாழ் சர்வமத சபை அது தொடர்பில் அறிக்கையும் விட்டது. ஆனால் எத்தனை ஆலயங்களில் மணி ஒலிக்கப்பட்டது? எத்தனை வீடுகளில் சுடர் ஏற்றப்பட்டது? அதேசமயம் திலீபன் நினைவு நாளை முன்னிட்டு கடைகளை அடைக்குமாறு தமிழ்க் கட்சிகளின் கூட்டு கேட்டபோது முஸ்லிம்களும் சேர்ந்து கடைகளை அடைத்தார்கள். அது ஒரு வெற்றி பெற்ற கடையடைப்பு. ஆனால் அதே போல ஒரு மக்கள் மயப்பட்ட நினைவுகூர்தலை ஏன் ஒழுங்கு படுத்த முடியவில்லை?

பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மக்கள் மயப்பட்ட நினைவுகூர்தல் என்று விளங்கி வைத்திருப்பது ஒரு பொது இடத்தில் தொகையான மக்களைக் கூட்டி விளக்கு ஏற்றி துதிப்பதைத்தான் . அதாவது ஒரு பொது இடத்தில் அதிக தொகை மக்களைக் கூட்டும் பொழுது, அது ஒரு உணர்ச்சிகரமான நினைவு கூர்தலாக இருக்கும். கூட்டுத் துக்கம் உணர்வுபூர்வமாக வெளிப்படும். அப்படிப்பட்டதோர் கூட்டு நிகழ்வில் அரசியல்வாதிகளுக்கு அதிகம் ஆதாயம் உண்டு. அக்கூட்டுத் துக்கத்தை அவர்கள் கொத்து வாக்குகளாக மாற்றி எடுக்கலாம். நாயகர்கள் போல காட்சி தரலாம். படம் காட்டலாம்.

எனவே பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் நினைவுகூர்தலை ஓர் அரசியல் நிகழ்வாக, ஒரு பொது வைபவமாக ஒழுங்குபடுத்தவே விரும்புகிறார்கள். அதற்குத்தான் வழக்காடுகிறார்கள்.

ஆனால் நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது என்பது, ஒரு பொது இடத்தில் கூட்டத்தைக் கூட்டுவது மட்டும் அல்ல. அது அதைவிட ஆழமானது.

தமிழ் மக்கள் தனிப்பட்ட முறையில் இறந்தவர்களை நினைவுகூரும் நாட்களான ஆடி அமாவாசை,சித்திராப் பௌர்ணமி, அனைத்து மரித்தோர் தினம் போன்றவற்றை வீடுகளில் இருந்தபடியே அனுஷ்டிக்கிறார்கள். விளக்கீடு, தீபாவளி போன்றவற்றையும் வீடுகளில் இருந்தபடியே அனுஷ்டிக்கிறார்கள். அவை மதம்சார் பண்பாட்டு நாட்கள் ஆகும். அவற்றை அனுஷ்டிக்குமாறு யாரும் தமிழ் மக்களுக்கு அறிக்கை விடுவதில்லை.

நினைவுகூர்தலையும் ஏன் அவ்வாறு ஒரு பண்பாடாக பரவலாக்க முடியவில்லை? இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளிடம் ஏதும் உரையாடல் நடந்திருக்கிறதா? துயிலும் இல்லங்களை துப்புரவாக்குவது, அரசாங்கத்திடம் வினயமாகக் கேட்பது, அல்லது நீதிமன்றங்களில் வழக்காடுவது கடைசியில் அறிக்கை விடுவது என்பவற்றுக்கும் அப்பால் நினைவுகூர்தலை எப்படி ஒரு பண்பாட்டு நிகழ்வாக மக்கள் மயப்படுத்துவது என்பது குறித்து பொருத்தமான அரசியல் தரிசனங்களும், செயற்பாட்டுத் தரிசனங்களும் தமிழ் அரசியல்வாதிகளிடம் உண்டா?அல்லது தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களிடம் உண்டா?

கடந்த மே-18 இன் போதே இதை யோசித்திருக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் திலீபனின் நினைவு நாளிலாவது இதுகுறித்து யோசித்திருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் யோசிக்கும் அளவுக்கு தொகுக்கப்பட்ட ஒரு ஒட்டுமொத்தத் தரிசனம் எத்தனை அரசியல்வாதிகளிடம் உண்டு?

எல்லாருமே அந்தந்தப் போகத்துக்குச் சிந்திப்பவர்கள்தான். அந்தந்தப் போகத்துக்கு அறிக்கை விடுப வர்கள்தான். அந்தந்தப் போகத்துக்கு நாடாளுமன்றத்தில் முழங்குபவர்கள்தான். அந்தந்த போகத்துக்குப் படம் காட்டுபவர்கள்தான். மாறாக நினைவுகூர்தலை ஒரு பண்பாடாகக் கட்டியெழுப்புவது என்று சொன்னால் அதை எப்பொழுதிருந்தோ தொடங்கியிருக்க வேண்டும். அதற்கு ஆழமான அரசியல் தரிசனம் வேண்டும். விசுவாசம் வேண்டும். அர்ப்பணிப்பு வேண்டும்.

திலீபன் நினைவு நாளின்போது நீதிமன்றம் தடை விதித்தது. அதனால் நீதிமன்றம் தடை விதிக்காத ஒரு பிரதேசத்தில் அரசியல்வாதிகள் திலீபனை நினைவுகூர்ந்தார்கள். அது ஒரு மக்கள்மயப்படாத நினைவுகூர்தல். ஆனால் அதன் பின் ஒழுங்கு செய்யப்பட்ட கடையடைப்பு முழு வெற்றி பெற்றது. அது ஒரு மக்கள் மயப்பட்ட நிகழ்வு. தமிழ் மக்கள் அந்தக் கடை அடைப்புக்கு முழு ஆதரவு கொடுத்தார்கள். கடைகளைப் பூட்டுவதற்கு ஒருவரும் பயப்படவில்லை. முஸ்லிம் மக்களும் அதில் இணைந்தார்கள்.

ஆனால் "வீடுகளின் வெளி மதில்களில் சிட்டிகளை ஏற்றுங்கள். ஆலயங்களில் மணிகளை ஒலிக்கச் செய்யுங்கள் "என்று கேட்கும்பொழுது ஏன் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் பின்னடிக்கின்றன?

விடை மிக எளிமையானது. பயம்தான் காரணம். பயத்தினால்தான் மக்கள் வெளிப்படையாகச் சிட்டிகளை ஏற்றி வைக்க அச்சப்படுகிறார்கள். அவ்வாறு சிட்டிகளை ஏற்றுவதன் மூலம் தங்கள் பாதுகாப்பைக் குறைத்துக்கொள்ள அவர்கள் தயாரில்லை. வெளிப்படையாகச் சிட்டிகளை ஏற்றி மணிகளை ஒலிக்கச் செய்து புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு ஆளாக அவர்கள் தயாரில்லை. இந்த அச்சம்தான் மக்கள் ஒன்று திரள்வதற்கு தடையாக இருக்கிறது. இந்த அச்சத்தை போக்க வேண்டியது அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும்தான்.

கடைகளை அடைக்கும் பொழுது எல்லோரும் ஒன்றாகக் கடைகளை மூடாவிட்டால் கடைகளை மூடிய சிலரை பொலிஸோ புலனாய்வுத் துறையோ விசாரிக்கும். எல்லோரும் கடைகளை ஒருமித்து மூடினால் எத்தனை பேரை விசாரிப்பது ?இதுதான் மக்கள் மயப்படுவதன் முக்கியத்துவம்; பலம்.

அதாவது திரட்சிதான் பலம். திரட்சியின் அளவே பலம். மக்கள் எல்லோரும் வீட்டு மதிலில் சிட்டிகளை ஏற்றினால் எல்லோரையும் விசாரிக்க முடியாது. எனவே நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது என்பது ஆகக்கூடுதலான மக்களை அதில் மானசீகமாகப் பங்களிக்க செய்வதுதான். அதற்கு கட்சிகள் என்ன செய்யலாம்?


தேர்தல் காலங்களில் வீடு வீடாகச் சென்று ஸ்டிக்கர்களை ஒட்டுவது போல, கட்சித் தொண்டர்களை அனுப்பி ஒவ்வொரு வீடாக சிட்டிகளை ஏற்றுமாறு கேட்டிருந்தால் என்ன? தேர்தல் காலங்களில் தெருத் தெருவாகச் சென்று பிரசாரம் செய்வதுபோல, ஒவ்வொரு கோவிலாகச் சென்று மணிகளை ஒலிக்குமாறு கேட்டால் என்ன? ஒரு அரசியல் நிகழ்வை மக்கள் மயப்படுத்துவது என்று சொன்னால் அதற்காக மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்வதற்கு பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். தேர்தல் காலங்களில் காசைக் கொடுத்து அவ்வாறான கட்டமைப்புக்களை உருவாக்குவதை போன்றதல்ல இது. உணர்வுபூர்வமான கிராம மட்ட கட்டமைப்புக்கள் எத்தனை கட்சிகளிடம் உண்டு? அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இருந்திருந்தால், ஏன் கிராமங்கள் தோறும் பரவலாக சிட்டிகளை ஏற்றுமாறு மக்களைக் கேட்க முடியாமல் போனது என்ற கேள்விக்குக் கட்சிகள் பதில் கூறட்டும்.

இது விடயத்தில் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு கல்லில் பல வெற்றிகளை பெற்றிருக்கிறது. முதலாவது வெற்றி நினைவுகூர்தலைத் தடை செய்ததன் மூலம் சிங்களபௌத்த வாக்காளர்களை சந்தோஷப்பட வைத்திருக்கிறது. இரண்டாவது வெற்றி நினைவுகூர்தலைத் தடை செய்ததன் மூலம் நினைவு கூர்தலை ஒரு கூட்டு உரிமையாக ஏற்றுக்கொள்ளும் நிலைமாறுகால நீதிக்கு எதிரான்கூர்மையான செய்தியை வெளிப்படுத்தியிருக்கிறது.

(03ஆம் பக்கம் பார்க்க)



# பைடனுக்கு எதிராக இஸ்ரேல் கொம்பு சீவும் ட்ரம்ப்



அ.நிக்ஸன்

அமெரிக்க ஜனாதிபதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் வெற்றிபெற்று ஆட்சியமைக்கவுள்ள நிலையில், டொனால்ட் ட்ரம்பின் பதவிக் காலம் முடிவடைய இன்னமும் 69 நாள்களே உள்ளன. இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களச் செயலாளர் மைக் பொம்பியோ ஆகியோர் சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் உள்ளிட்ட அதிகாரிகளைச் சென்ற ஞாயிற்றுக் கிழமை சந்தித்துள்ளனர். தனது பதவிக் காலம் முடிவடைவதற்குள் ஈரான் மீது தாக்குதல் நடத்த டொனால்ட் ட்ரம்ப் முற்படுகிறார் என்றே சவுதி அரேபியச் சந்திப்பை நோக்க வேண்டியதாகவுள்ளது.

ஜோ பைடன் தலைமையிலான புதிய நிர்வாகம் அமெரிக்காவில் பதவியேற்பதற்கு முன்னர், ட்ரம்ப் ஈரான் மீதான தாக்குதலை நடத்தித் தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கான அதிசயங்களைக் காண்பிக்கக் கூடும் என்று அவதானிகளும் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை, அமெரிக்கா மீது கடும் அதிருப்தியடைந்துள்ள ஈரான் ஜனாதிபதி அலி கமேனி, கடந்த நான்கு ஆண்டுகளில் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் விட்ட தவறுகளை ஜோ பைடன் தலைமையிலான புதிய நிர்வாகம் திருத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளார். இந்த நிலையிலேயே சவுதி அரேபியாவில் இஸ்ரேலியப் பிரதமருடனான சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்தச் சந்திப்புத் தொடர்பாக அதிகாரபூர்வமான அறிவிப்புகள் எதனையும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும், சவுதி அரேபியாவும் வெளியிடவேயில்லை.

ஆனால் இஸ்ரேலுடனான உறவைச் சீராக்க, அரபு நாடுகளை சமாதானப்படுத்த அமெரிக்காவின் ஆலோசனையோடு இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சந்தித்துப் பேசினார் என்றும், இந்தச் சந்திப்பு இஸ்ரேல், சவுதி அரேபிய நாடுகளுக்கிடையிலான முதலாவது சந்திப்பு என்றும் இஸ்ரேலிய ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

சவுதி அரேபியாவின் செங்கடல் கடற்கரையில் நியோமில் நடைபெற்றதாகக் கூறப்படும் சந்திப்பில் இஸ்ரேலிய உளவுத்துறையான மொஸாட்டின் தலைவர் யோசி கோஹனும் கலந்து கொண்டார் என்று இஸ்ரேலின் கான் பொது வானொலி மற்றும் இராணுவ வானொலி தெரிவித்துள்ளது.

ஈரான் தனது யூரேனியப் பதப்படுத்தல் தொடர்பாக 2015ஆம் ஆண்டு Joint Comprehensive Plan of Action (JCPOA) எனும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது. இது ஒபாமா நிர்வாகத்தின் சாதனைகளில் ஒன்றாகவும் காட்டப்பட்டுவந்தது.

இந்த ஒப்பந்தத்தை இஸ்ரேல், சவுதி அரேபியா ஆகிய இரு நாடுகளும் கடுமையாக எதிர்த்ததால், பராக் ஒபாமாவின் இந்த ஒப்பந்தத்தை 2017இல் ட்ரம்ப் நிராகரித்துவிட்டார். ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளையும் விதித்தது.

ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த அளவை



விட, 12 மடங்கு அதிக அளவில் தற்போது செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை ஈரான் அரசு வைத்துள்ளது என்று சர்வதேச அணுசக்தி அமைப்பு கடந்த 12ஆம் திகதி அறிவித்திருந்தது. அதையடுத்து கடந்த வாரம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையில் பாதுகாப்புத்துறையின் முக்கிய அதிகாரிகள் அவசரமாகக் கூடி ஆராய்ந்தனர்.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பு மையங்களை இலக்கு வைத்து ராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்த டொனால்ட் ட்ரம்ப் விருப்பம் தெரிவித்தார் என நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எவருமே ஈரான் மீது தாக்குதல் நடத்த விரும்பியிருக்கவில்லை. தாக்குதல் நடத்த வேண்டும் என்ற டொனால்ட் ட்ரம்பின் விருப்பத்துக்கு மாறாகவே அந்த அதிகாரிகள் கருத்து வெளியிட்டிருந்தனர் என்று நியூயோர்க் ரைம்ஸ் கூறியிருந்தது.

ஈரான் அணு ஆயுத மையங்கள் மீதான தாக்குதல் மிகப்பெரிய போருக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் எச்சரிக்கையும் விடுத்தனர். அதிகாரிகளின் எச்சரிக்கை மற்றும் ஆலோசனைகளையடுத்து தாக்குதல் நடத்த வேண்டுமென்ற தனது முடிவில் இருந்து டொனால்ட் ட்ரம்ப் பின்வாங்கினார் என நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

தனது பதவிக்காலம் முடிவடைவதற்குள் ஈரான் மீதான போர்ச் சூழல் ஒன்றை உருவாக்கிவிட்டால், ஜோ பைடன் பதவியேற்றாலும் ஒபாமா காலத்து அமெரிக்க நிர்வாகம் ஒன்றை மீண்டும் மீளுருவாக்கம் செய்ய முடியாதென ட்ரம்ப் சிந்திக்கக்கூடும்.

இத்தகைய நிலையில் ஈரான் மீதான தாக்குதலை விரும்பாத மற்றும் ட்ரம்ப்பின் சில நடவடிக்கை யோசனைகளுக்கு ஒத்துழைக்காத அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் மார்க் எஸ்பரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிய டொனால்ட் ட்ரம், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் பணிப்பாளர் கிற்ஸ்டோபர் மில்லரை அந்தப் பதவிக்கு நியமித்தும் உள்ளார்.

பலஸ்தீனியர்களின் மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரேல் மேற்கொண்ட சட்டவிரோதமான யூதக் குடியேற்றங்களையும் அமெரிக்கா அங்கீகரித்தது. ஐக்கிய அமீரகம், பாஹ்ரேன், சூடான் ஆகிய நாடுகளோடு இஸ்ரேல் இராஜதந்திர உறவுகளைப் பேண டொனால்ட் ட்ரம்ப் ஏற்பாடும் செய்திருந்தார்.

இந்த ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஈரானின் புரட்சி பாதுகாப்பு படையின், குத்ஸ் படைப்பிரிவின் தளபதி குவாசிம் சுலைமானி கொல்லப்பட்டார். இது இஸ்ரேலுக்காக நடத்தப்பட்ட தாக்குதல் என்றே அப்போது அவதானிகள் கூறியிருந்தனர்.

டொனால்ட் ட்ரம்பின் தனிப்பட்ட முறையிலான இந்த நகர்வுகள் ஒட்டுமொத்த அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கும் ஒத்துழைத்துச் செயற்படும் ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கும் சவாலாக அமைவதோடு, அந்த நாடுகளின் சுயமரியாதைக்கும் ஆபத்தை விளைவிக்கும் ஒன்றாகவே நோக்கலாம்.

ஆனால் ஈழத்தமிழர், ரோகின்யா முஸ்லிம்கள் உள்ளிட்ட உலகில் விடுதலை வேண்டிப் போராடும் தேசிய இனங்களின் அரசியல் விடுதலை குறித்த செயற்பாடுகளில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள் கையாண்ட தவறான அணுகுமுறைகளே, உலகில் இன்று எழுந்துள்ள அரசியல், பொருளாதார ரீதியான இராஜதந்திர நெருக்கடிகளுக்கான பிரதான காரணமென்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. ■

---

## மாவீரர் நாள்...

அதாவது ஐநாவின் 30/1 தீர்மானத்துக்கு எதிரான ஒரு செய்தி அது.

மூன்றாவது, அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்கியது. அதாவது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உரிமையை சட்ட விவகாரமாக சுருக்குவதற்கு அந்த மக்களின் பிரதிநிதிகளையே மறைமுகமாக அதன் கருவிகளாக மாற்றியது.

நான்காவது ஒட்டுமொத்தத்தில் நினைவு கூர்தலை மக்கள் பயப்படாத ஒரு நிகழ்வாக மாற்றியது.

ஐந்தாவது பத்து ஆண்டுகளின் பின்னரும் தமிழ் மக்களை பயத்தால் பிரித்து வைத்திருப்பது. நீதிமன்றத் தீர்ப்புக்களின் பின்னணியில் படைத்தரப்பு மற்றும் பொலிஸின் அதிகரித்த பிரசன்னத்தின் மத்தியில் சனங்கள் மேலும் பயப்படுகிறார்கள்.

இது விடயத்தில் பயப்படாது துணிந்து' ரிஸ்க் 'எடுக்கும் சிவாஜிலிங்கம், தமிழ் அரசியல் பரப்பில் ஒரு சீரியஸ் இல்லாத ஆளாகப் பார்க்கப்படுகிறார். கடந்த தேர்தலில் அவருக்கு கிடைத்த வாக்குகள் கிட்டத்தட்ட 10,000.

அவருடைய துணிச்சலுக்கு தமிழ் மக்கள் வழங்கிய வெகுமதி அவ்வளவுதான். அவருடைய துணிச்சலை ஒரு சீரியஸில்லாத விவகாரமாக மாற்றியது துணிச்சலில்லாத, ரிஸ்க் எடுக்காத ஏனைய தமிழ் அரசியல்வாதிகள்தான்.

அதேசமயம் நினைவுகூர்தலை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்கி அதை தடுத்த அரசாங்கம், ஒரு விடயத்தை வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறிவிட்டது. ஒரு கூட்டுத் துக்கத்தை வெளி வழிய விடுவது, ஒரு குணப்படுத்தல் செய்முறையாகும்.

ஒரு கூட்டுத்துக்கம் அடக்கப்படுமாக இருந்தால் அது ஒரு கட்டத்தில் கூட்டு ஆவேசமாக; கூட்டுக் கோபமாக குமுறிக் கொண்டு வெளியேவரும். அதைத்தான் தமிழின் மூத்த கவிஞர்களில் ஒருவராகிய பொன்னம்பலம் அழகாகச் சொல்வார் "அடக்குமுறை என்பது விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி" என்று. அது "அதிகாரம் புரியாத ஒரு சமன்பாடு" என்று. ■

# அழகிரி: அதிர்வேட்டா? வெற்றுவேட்டா?



○ மயூ

தமிழக சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடக்கவுள்ள நிலையில், தமிழக அரசியலில் இப்போதே அதிர்வேட்டுக்கள் வெடிக்கத் தொடங்கியுள்ளன. சுப்பர் ஸ்டார் ரஜினி காந்தின் அரசியல் பிரவேசம் புஸ்வாணம் ஆகிவிட்டநிலையில், மறுபுறத்தில் நடிகை குஷ்பு பா.ஜ.க பக்கம் பாய்ந்திருக்கின்றார். இந்தப் பேச்சுக்கள் அடங்கும் நேரத்தில் இப்போது, கருணாநிதியின் மூத்த மகனான மு.க.அழகிரி பரபரப்பைக் கிளப்பியுள்ளார்.

அண்மைக்காலமாக அமைதியாக இருந்த மு.க.அழகிரி, தனிக்கட்சி ஆரம்பிக்கின்றார் என்ற செய்தியுடன் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றார். எதிர்வரும் 20ஆம் திகதி தனது ஆதரவாளர்களுடன் மதுரையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தும் மு.க.அழகிரி, தனது அரசியல் நிலைப்பாட்டை அப்போது அறிவிப்பார் என்று வெளியான செய்தி தமிழக அரசியல் வட்டாரத்தில் எதிர்பார்ப்பைக் கிளப்பியுள்ளது.

மு.க.அழகிரி திராவிட முன்னேற்ற கழகத்தில் இருந்து ஒழுங்கு நடவடிக்கை மூலம் தூக்கியெறியப்பட்டு 7 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கருணாநிதி உயிரோடு இருந்தபோதும், மறைந்த பின்னரும் மீண்டும் கட்சியில் இணைய எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்துமே வீணாகியிருந்தன. அழகிரி எவ்வளவு இறங்கிச் சென்றாலும், தவழ்ந்து சென்றாலும் அழகிரியைக் கணக்கெடுக்க மறுத்தது ஸ்டாலின் தரப்பு. அதனால் கடுப்படைந்த அழகிரி தொடர்ந்து தி.மு.க.வைத் தாக்கியே கருத்துக்களை வெளியிட்டுவந்தார்.

மு.க.அழகிரிக்கும், மு.க.ஸ்டாலினுக்கும் இடையிலான மோதல் இன்று, நேற்றல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது.

1983ஆம் ஆண்டு மதுரைக்கு கலைஞரால் அனுப்பப்பட்டார் அழகிரி. அதுவரை அரசியலில் முழுமையாகக் கவனம் செலுத்தாதிருந்த அழகிரி, 1989ஆம் ஆண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் கட்சியின் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்தார். தென் மாவட்டங்களில் தனக்கென ஆதரவு வட்டத்தை உருவாக்க முற்பட்டார். 1993ஆம் ஆண்டு தி.மு.க.விலிருந்து முக்கிய நிர்வாகிகளுடன் வைகோ பிரிந்து சென்றபோது, தென்மாவட்டங்களில் அழகிரியின் ஆதிக்கம் பரவியது.

அழகிரி தனக்கென ஓர் ஆதரவு வட்டத்தை ஏற்படுத்த முயன்ற நேரத்தில், படிப்படியாக அரசியலில் வளர்ந்த ஸ்டாலின், இரு முறை சட்ட மன்ற உறுப்பினராகவும், சென்னை மாநகராட்சி மேயராகவும் ஆகியிருந்தார். ஸ்டாலினின் இந்த வளர்ச்சி இருவரிடையே மோதல் போக்கை ஏற்படுத்தியது என்கின்றனர் அந்தக் கட்சி ஆதரவாளர்கள். எனினும் ஸ்டாலினும், அழகிரியும் நேருக்கு நேர் வெளிப்படையாக மோதிக்கொண்டது 2000ஆம் ஆண்டுதான்.

அதன்பின்னர் சற்று ஒய்ந்திருந்த இந்த மோதல், கருணாநிதி மறைந்த கையோடு மீண்டும் சூடு பிடித்தது. பின்னர் அழகிரி தரப்பு அமைதியாக இருந்தது.

இப்போது புதிய அறிவிப்புடன் வெளியே வந்திருக்கின்றார் அழகிரி. அவரது இந்த அறிவிப்புத் தொடர்பில் பல கருத்துக்கள் பேசப்படுகின்றன. இவர் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவின் வாக்குகளைப் பிரிக்கவே பாரதிய ஜனதாக் கட்சியால் களமிறக்கப்பட்டுள்ளார் என்கிறது ஒரு தரப்பு. இன்னொரு தரப்போ, அழகிரியின் அறிவிப்புக்குப் பின்னால் நடிகர் ரஜினிகாந்த் உள்ளார் என்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் அழகிரியின் ஆதரவாளர்கள் மறுக்கின்றனர். அழகிரி புதிய கட்சியை ஆரம்பித்திருப்பது பா.ஜ.கவுக்கு மகிழ்ச்சி என்பது அவர்கள் தரப்பில் இருந்து வெளியாகும் கருத்துக்களால் தெரிகின்றது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே?


அழகிரியின் இந்த அறிவிப்புத் தொடர்பாக ஸ்டாலின் தரப்பு அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை. யார் வந்தாலும் பரவாயில்லை, எமது செல்வாக்குச் சரியாது பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் ஸ்டாலின் தரப்பின் திட்டம். அதன் ஒரு கட்டமாக அழகிரியைக் கணக்கிலேயே எடுக்காது விட்டிருக்கின்றது ஸ்டாலின் தரப்பு. நானும் ரவுடிதான் என்னும் அழகிரியை வாகனத்தில் ஏற்றாது விட்டுத் தன்பாட்டில் ஸ்டாலின் தரப்பு இருப்பதும், அழகிரிக்கு ஏமாற்றம்தான்.

தற்போதைய நிலைமையில் அழகிரி புதிய கட்சி தொடங்கினாலும் பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியாது. இருந்தும் ஏன் இந்த விஷப் பரீட்சையில் இறங்கியிருக்கின்றார்?. தமிழகத்தில் கருகியுள்ள பா.ஜ.கவை துளிர்க்க வைக்க ரஜினியை நம்பியிருந்தவர்கள், ரஜினியின் நழுவலால் ஏமாற்றம் அடைந்துள்ளார்களாம். அதனாலேயே இப்போது அழகிரிக்குத் தூண்டில் போடப்பட்டுள்ளது என்று அடித்துக் கூறுகின்றது ஒரு தரப்பு.

தற்போது பேசப்படுவது போன்று அவர் பா.ஜ.கவின் உந்துதலாலோ அல்லது ரஜினிகாந்தால் நெட்டித் தள்ளப்பட்டோ இருப்பாரேயானால் இந்தத் தேர்தலில் பலத்த அடி வாங்குவார் என்பது உறுதி. ஏனெனில் தி.மு.கவுடன் மோதும் பழைய கெத்து, இப்போது அழகிரியிடம் இல்லை என்பது வெள்ளிடைமலை.



○ மௌனா



## மணிக் கதை

## வினா விடை

படையினரின் எறிகணை வீச்சில் சின்னாபின்னமாகிக் கிடந்த அந்தக் கடலோரக் கிராமத்தில் எல்லோரும் உயிர்காக்க, கையில் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு கிராமத்தை விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

பயம், பீதி, பாதுகாப்பைத் தேடி ஓடும் வேகம் மக்களின் அவல ஓலம்.

அந்தக் கூட்டத்தினரிடையே ஒரு இளம் தாய் தன் பிள்ளையை தூக்கிக்கொண்டு வேகமாக ஓட்டமும் நடையுமாக சென்று கொண்டிருந்தாள்.

பிள்ளை கேட்டான்... "அம்மா நாங்கள் எங்க போகிறோம்?"

தாய் சொன்னாள் "நாங்க பெரியம்மா வீட்டை...!"

"ஏன் எங்கடை வீட்டை போவம் வாங்கோ..."

"அங்கை போகேலாது.... குண்டு போடுறாங்கள் !"

"ஏன் குண்டு போடுறாங்கள் அம்மா....?"

"நாங்க தமிழங்களாம்... அதுதான்....!"

எறிகணை வீச்சின் சப்தம் அதிர்ந்து கொண்டிருந்தது.

பாதையின் குறுக்கே ஒரு பெரும் மரத்தின் பெருங்கிளை முறிந்து கிடந்தது. கிளையில் கூடு கட்டியிருந்த காகங்கள் நிலத்தில் செத்துச் சிதறிக் கிடந்தன.

பையன் கேட்டான் "ஏனம்மா இந்தக் காகங்கள் செத்து கிடக்கின்றன?"

"குண்டு விழுந்து கூடு சிதறி செத்துப் போச்சுதுகள்...."


பையன் சற்று மௌனமானான். பின் கேட்டான் "ஏனம்மா காகங்களுக்கு குண்டு போட்டாங்கள்... அதுகளும் தமிழ்க் காகங்களா...?"


தாய் மௌனமானாள்....



# புனைவுசாரா இலக்கியத்துக்கு ஒரு நல்வரவு

O இராகவன்



நவீன இலக்கிய ஆய்வியற் பரப்பில் சு. குணேஸ்வரன் செய்துவரும் பங்களிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததென்பது மறுக்க இயலாததாகும். இவர் இதுவரைக்கும் "மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்" (2008), "அலைவும் உலைவும்" (2009), "புனைவும் புதிதும்" (2012), "உள்ளும் வெளியும்" (2014), "இலக்கியத்தில் சமூகம் - பண்பாடு சார் கட்டுரைகள்" ( 2016), "அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்" (2016), ஆகிய ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார். "மண்ணில் மலர்ந்தவை - இலக்கியக் கட்டுரைகள்" இவரது ஏழாவது நூல் வரவாகின்றது. இவரது தொடர்ச்சியான தேடலுக்கும், ஓய்வற்ற செயற்றிறனுக்கும் இந்நூல் வரவுகளே சான்று பகருவனவாகும்.

இவரது அண்மைய நூல் வரவான இந்த "மண்ணில் மலர்ந்தவை" தொகுப்பானது, குந்தவையின் பாதுகை பிடித்த சிறுகதை, அ.முத்துலிங்கத்தின் அம்மா பாத்திர வார்ப்பு, இந்த மண்ணின் கதைகள் - ஆறாத காயங்கள், கி. செ துரையின் சுயம்வரம் நாவல், அருளரின் லங்காராணி, சந்தங்களால் இணையும் வாழ்வு - இராஜேஸ் கண்ணனின் கவிதைத் தொகுதி குறித்து, மட்டைவேலிக்குள் தாவும் மனசு - சிவசேகரனின் கவிதைகள், மணல் கும்பி - ரஜிதாவின் கவிதைகள், கவி கலியின் இரண்டு கவிதைத் தொகுப்புக்கள் பற்றிய கட்டுரைகள், அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் பன்முக ஆளுமை, கலாநிதி ஆ.கந்தையாவின் ஆஸ்திரேலியாவில் தமிழ்மொழி கற்பித்தல், கவிஞர் சண்முகம் சிவலிங்கம் - கிளர்த்தும் நினைவுகள், எழுத்தாளர் கண. மகேஸ்வரன், நந்தினி சேவியர் படைப்புகள் நூல் அறிமுகம், கலாநிதி செ.யோகராசாவின் தேடல், வசீகரன் சுசீந்திரகுமாரின் கரும்பாவளி ஆவணப்படம் என 2005 தொடங்கி 2019 வரையான காலப்பகுதிக்குள் எழுதப்பட்ட 18 கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நூலுக்கான அணிந்துரையை எழுத்தாளர் கொற்றை பி. கிருஸ்ணானந்தன் எழுதியுள்ளார். இவ்விலக்கியக் கட்டுரைத் தொகுப்பானது தனித்து இலக்கியப் பிரதிகளைப் பற்றிய நோக்காகக் குறுகி விடாமல், படைப்பாளிகளைப் பற்றிய நினைவுக் குறிப்புகள், ஆவணப்படம் பற்றிய பார்வை, தனிமனித ஆளுமை குறித்த பார்வை என பன்முக நோக்காக விரிந்தி ருப்பது எடுத்துக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

குணேஸ்வரன், நுனிப்புல் மேயும் ஒரு மேலோட்டமான நோக்குநரல்ல என்பதற்கு ஆதாரமாக நான் அண்மையில் வாசித்த அவரது ஆய்வுக் கட்டுரை ஒன்றைக் குறிப்பிடலாம். "மூத்தோர் வழிபாடாக நடுகல் - சங்கப் புனைவுகளை அடிப்படையாகக் கொண்ட பார்வை" என்ற கட்டுரையை ஒவ்வொரு விடயத்தையும் மிகுந்த அர்ப்பணிப்போடும், தீவிரத்தோடும் ஆழ்ந்து நோக்கி செயற்றிறனாற்றியிருக்கிறார் என்பதை உணர்த்தியது.


இவரது முன்னைய நூல் வரவுகளைப் போலவே இந்த மண்ணில் மலர்ந்தவை இலக்கியக் கட்டுரைகள் நூல் வரவும் இதனை நிரூபணம் செய்கிறது. இது அவர் அவ்வப்போது எழுதிய சிறிய கட்டுரைகளாக இருந்தாலும், இந்நூலினது ஒவ்வொரு உள்ளடக்கமும் எளிமையான மொழிநடையில் வலுவான நோக்கில் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். இது குணேஸ்வரனின் தனித்துவம் எனக்கூறுவதும் மிகப் பொருத்தமானது. தவிரவும் உணர்வு தோய்ந்து எழுதுவதும் செம்மையான நோக்கினை நயம்பட முன்வைத்தலுங்கூட இவரது தனித்துவ இயல்பாகக் கருதுவதில் தவறிருக்க முடியாது. ஆரம்பகட்டப் படைப்பாளிகளுக்கு நம்பிக்கையளிக்கும் விதத்திலும், அவர்களுக்கு படைப்பூக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் மேற்கூறியவாறே தனது செம்மையான நோக்கினை நயம்பட முன்வைத்திருப்பதற்கு எடுத்துக்காட்டாக "மட்டைவேலிக்குள் தாவும் மனசு - சிவசேகரன் கவிதைகள்", "இயற்கையை உறவாகக் காணும் பண்பு - ரஜிதாவின் மணல் கும்பி கவிதைகள்", "மண்ணுடன் பிணைந்த வாழ்வு - கவி கலியின் இன்னுமொரு தேசம்", வசீகரனின் "கரும்பாவளி ஆவணப்படம்", என்பவற்றைக் குறிப்பிடலாம். உணர்வு தோய்ந்தும் உணர்வைத் தொற்ற வைத்தும் எழுதும் இயல்புக்கு எடுத்துக்காட்டாக "சண்முகம் சிவலிங்கம் - கிளர்த்தும் நினைவுகள்", எழுத்தாளர் கண. மகேஸ்வரன், வே. ஐ. வரதராசன் என்னும் உள்ளடக்கங்களைக் குறிப்பிடலாம். இதில் என்னை நெகிழ வைத்த பகுதியொன்றை இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

" ... இன்று (20.06.2015) காலை அவரது உயிரற்ற உடலின் முன்னால் தலைமாட்டில் திருமறைக் கலாமன்றம் நடத்தவிருக்கும் மூன்று நாள் இலக்கிய விழாவுக்கான அழைப்பிதழ் அவரின் முகவரியுடன் இருந்ததையும் கண்டேன். உள்ளம் கலங்கிவிட்டது..." (பக்.66) வே.ஐ.வரதராசனை கலைமுகத்துக்காக நேர்காணல் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்பதையும் அதுவே அவரது முதலும் கடைசியுமான நேர்காணல் என்பதையும் இவ்விடத்தில் கனக்கும் மனதுடன் பதிவு செய்கிறேன்.


குந்தவையின் "பாதுகை" சிறுகதை மதிசுதாவினால் குறும்படமாக்கப்பட்ட தகவலை இத்தொகுப்பின் வாயிலாக அறிந்து கொண்டதில் மகிழ்ச்சி. இதற்காக குணேஸ்வரனுக்கு மனமார்ந்த நன்றி. தனிமனித ஆளுமை குறித்து சிறப்பாகப் பதிவு செய்திருப்பதற்கு "அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா பன்முக ஆளுமை" , கலாநிதி செ. யோகராசாவின் தேடல்" எனுமிரண்டும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும். இதிலும் கவிஞர் மு.செல்லையா பற்றிய பதிவு தனித்துக் குறிப்பிட வேண்டியதாகும்.

இலக்கியச் செயற்பாடுகள் அனைத்தும் உறை நிலையில் இருக்கும் இவ்வனர்த்த காலத்தில் இந்நூல் வரவானது, இலக்கியச் செயற்பாட்டாளர்களின் மீளெழுச்சியைத் தூண்டும் வகையிலும், நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்திலும் புத்துணர்வளிப்பதாக அமைகின்றது. காலத்தின் தேவையுணர்ந்து இந்நூலை வெளியிட்ட புத்தகக் கூடத்துக்கும் குணேஸ்வ ரனுக்கும் ஈழத்து இலக்கிய உலகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

## பிஞ்சு தூரிகைகள்



மு.பிரியங்கா,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி





செ.ஆன் தர்சனா,
தரம்-11
யா/ திருக்குடும்ப
கன்னியர்மடம் தேசிய
பாடசாலை.



கே.சர்விகன்,
தரம் -08,
சாவகச்சேரி இந்துக்
கல்லூரி.



வித்துவான் பதில்கள்

நீங்களும்
கேள்விகள்
கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்

வித்துவான்
பதில்கள்

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.

0773165555

sanjeevi@uthayan.com

# கொரோனாவால் உருவான உள – சமூகப் பிரச்சினைகளும் உளவியல் ஆலோசனைகளும்



கலாநிதி.க.கஜவிந்தன்

முதுநிலை உளவியல் விரிவுரையாளர்
உளவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

நம் வாழ்வை சிறப்பாக வாழ நமக்கு நல்ல உடல் நலனும் உளநலனும் அவசியம். உடல் நலம் பெறவும், உடலில் ஏற்படும் பிரச்சினைகளைச் சரிசெய்து கொள்ளவும் நாம் மருத்துவரை அணுகுகிறோம். அதேபோல் உள நலம் பெறவும், மனதில் ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்து கொள்ளவும் உளவியல் ஆலோசகர்களை நாடுவது அவசியமாகும்.


### காய்ச்சல்

மலேரியா, டெங்கு, நீரிழிவு போன்ற உடலில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றே, கொரோனா தொற்று பீதியால் மனதிலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆனால் எம்மில் பலர் உளநலம் குறித்து அக்கறை காட்டுவதே இல்லை. அவர்கள் உடல் நலத்தை மட்டுமே முழு ஆரோக்கியம் எனக் கருதுகின்றார்கள். ஆனால் இரண்டும் சேர்ந்து பெறப்படுவதே முழுமையான ஆரோக்கியமாகும். அந்த வகையில் உளநலத்தையும் பேணிப் பாதுகாப்பது அவசியமாகும். எப்படி இந்த உடலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிகிச்சை இருக்கிறதோ, அதேபோல் மனதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் இருக்கின்றன.

உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. உடலுக்கு ஏதாவது ஏற்பட்டால் அது மனதைப் பாதிக்கும். அதேபோல் மனதுக்கும் ஏதாவது ஏற்பட்டால் அது உடலைப் பாதிக்கும். உதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டால் மனம் சோர்ந்து போய்விடுகிறது.

மனதில் ஏற்படும் பிரச்சினைகள் உடலின் எல்லாப் பாகங்களையும் சென்றடைந்து உடல் சோர்வடைகிறது. இதனால் கொரோனா பற்றிய மனப்பதற்றத்திலும் குழப்பத்திலும் இருப்பவர்களுக்கும் பலவிதமான பாதிப்புகள் ஏற்படவே செய்யும். தொடர்ந்து வீட்டில் இருப்பதால் பின்வரும் தனிமனித, குடும்ப , சமூக பாதிப்புக்கள் உண்டாகலாம்.



### 1. உடலியல் விளைவுகள்

- ஞாபக இழப்பு
- தலைவலி
- ஆஸ்துமா
- சமிபாட்டுப் பிரச்சினை
- தடிமன்மூக்கில் நீர்வழிதல்
- பாலியல் ஊக்கி ஆர்வம் குறைவடைதல்
- மலச்சிக்கல்
- இதயத்துடிப்பு அதிகரித்தல்
- சுவாச வீதம் அதிகரித்தல்
- வியர்த்தல்
- அடிக்கடி சிறுநீர் கழிக்க உந்துதல்
- சுவையிழப்பு உணவு சுவையின்றி உணர்தல்)

### 2. நடத்தை ரீதியான விளைவுகள்

- சக்தி குறைதல் அல்லது செயற்பாடு குறைத்தல்
- மதுபோதை பாவனை அதிகரித்தல்
- நித்திரைக் கோளாறு
- பல்கடித்தல்
- செயலில் ஆர்வம் குறைவடைதல்
- வாக்குவாதம்
- பொய் பேசுதல்
- கீழ்ப்படியாமை
- நெறிபிறழ்வு
- சுய பராமரிப்பின்மை'
- தற்கொலை முயற்சி
- வன்கொடுமை போக்கு

### 3. உளரீதியான விளைவுகள்

- பதகளிப்பு
- பயம்
- கெட்டகனவு
- மெய்பாட்டு நோய்கள்
- மிதமான மனச்சோர்வு
- கட்டுக்கடங்கா நினைவு நடத்தை

### 4. குடும்பப் பிரச்சினைகள்

- கணவன் மனைவி சண்டை
- மதிப்பிழந்தது போல் உணர்வு
- குடும்பத்தவரிடம் எரிந்து விழுதல்
- குழந்தைகளின் செயல்களைப் பார்த்து எரிச்சலடைதல் .அவர்களுக்கு அடித்தல்.
- உறவுச் சிக்கல்
- நேருக்கு நேராக பார்த்துப் பேசத் தயங்குதல்

### 5. சமூகப் பிரச்சினைகள்

- சுயநல நடத்தை
- சமூகப் புறக்கணிப்பு
- சமூகத்துக்கு எதிரான நடத்தை
- விவாகரத்து
- சிறுவர் துஷ்பிரயோகம்
- வன்முறை தலையெடுத்தல்
- பொறுப்பற்ற நடத்தை
- உதவும் மனப்பாங்கு நடத்தை குறைதல்
- சமூகத்தில் நம்பிக்கையற்ற தன்மை

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் சரியாகச் சிந்தித்து செயலாற்றுதல் என்பது மிக அதிகமாக நமது மனநலத்தைச் சார்ந்திருக்கின்றது. ஆகவே வெளிச்செல்லாது வீட்டிலிருந்து தினசரி வாழ்க்கையில் வேலைகளை கவனத்துடன் சிறப்பாகச் செய்ய உளநலம் அவசியமாகும்.

கொரோனாத் தொற்று பீதியிலிருந்து உளநலம் பேண உளவியல் உதவி அவசியமாகும். ஒவ்வொரு மனப்பிரச்சினைகளுக்கும் தனித்தனியாக முறையான மருந்துகளும் அறிவியல்பூர்வமான உளவியல் சிகிச்சைகளும் வந்துவிட்டன. ஓர் உளவியல் ஆலோசகரால் மூன்று பரிமாணங்களில் உதவ முடியும்.


1. பிரச்சினையைச் சரி செய்ய
2. பிரச்சினைகள் வருவதைத் தடுக்க
3. உங்கள் வாழ்வை மேலும் வளமானதாக்க

மேலும் அதிக நேரம் வீட்டிலிருந்தால், கோபத்தை கட்டுப்படுத்த முடியாமை குடும்பப் பிரச்சினைகள் பிள்ளைகளுக்கு அடித்தல் காரணமின்றி கோபப்படல், மணவாழ்வில் பிரச்சினைகள், குடும்ப உறுப்பினர்களிடையே முரண்படுதல், அடிக்கடி எழும் பிரச்சினைகள் சரியான தொடர்பு கொள்ள முடியாமை போன்றவற்றை தினசரி வாழ்வில் எழும் பிரச்சினைகள் என வரையறுக்கலாம். இவ் வகைப் பிரச்சினைகளை எதிர்கொள்வோரின் மனநலன் பாதிப்புக்குள்ளாகின்றது. இவற்றைக் கவனிக்காது விடும்போது காலப்போக்கில் அவை மனநோயாக மாறிவிடவும் வாய்ப்புண்டு. உடல் நோய்க்கு எவ்வாறு உடனே சிகிச்சை எடுத்துக் கொள்கின்றோமோ, அது போன்றே உளப்பிரச்சினைகளுக்கும் உரிய முறையில் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் மனப்பதற்றம், ஆளுமைச் சிதைவு போன்ற மனநோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவை மனித வாழ்வின் இயல்பு நிலையையே பாதிப்படையச் செய்கின்றது. எனவே உளநலத்திலும் அக்கறை காட்ட வேண்டியது இன்றியமையாதது.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் நல்லவர்கள். நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள். ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் தனித்தன்மை உடையவர்கள். ஆகவே ஒவ்வொரு தனிமனிதனின் பிரச்சினைகளும் மற்றவர்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவை. ஒவ்வொருவரும் தங்களை தைரியமான வாழ்க்கையில் சவால்களை யாருடைய துணையும் இன்றி தாங்களாகவே எதிர்கொள்ளும் சக்தி உடையவர்கள் என நம்பினாலும், சில சமயங்களில் மற்றவர்களிடம் உதவி பெறுவது என்பது நடைமுறை அவசியமாகிறது.

எனவே தான் தனக்கு ஏற்படும் உளரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உரியமுறைகளை கையாள்வது அல்லது நாடுவது அவசியமாகும். இதன்முலம் வாழ்கையை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் அமைத்துக் கொள்ள முடியும். மனிதனின் ஆழ்மனதின் உணர்வுகளின் ஆக்கிரமிப்பாலேயே மனநோய்கள் தோன்றுகின்றன என்றும், எல்லாவற்றுக்கும் நனவிலி மனம்தான் காரணம்.

உள்ளத்தின் வெளிப்பாடே நடத்தையாகக் கொள்ளப்படுகின்றது. உளநிலை பாதிப்படைந்திருந்தால் அவருடைய நடத்தையே பிறழ்வாகின்றது. கொரோனாத் தொற்று பீதியால், மனிதன் உடல் ரீதியான பிரச்சினைகளைவிட, உள ரீதியான பிரச்சினைகளாலே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளான். இதனால்தான், குடுப்பத்திலும் சமூகத்திலும் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. தோன்றப் போகின்றன. ஆகவே தான் உடல் நலத்தைப் போன்று உள நலத்திலும் அதிகமான அக்கறை செலுத்த வேண்டியது இக் காலகட்டத்தில் அவசியமாகும். இதனால் தகுந்த முறையில் சந்தர்ப்பத்தை உணர்ந்து உளவியல் ஆலோசனை பெறுதல் முக்கிய மாகும்.



**"மனநலம் மன்னுயிர் காக்கும்
இனநலம் எல்லாப் புகழும் தரும்"**




○ கோகுலராகவன்

அப்பாவின் தம்பிமாரில் மலேரியாப் பரிசோதகராகக் கடமையாற்றிய பரராஜசிங்கமும் ஒருவர். அவரை 'ஆசையப்பா' என அழைப்போம். கனிவான, இனிமையான மனிதர். நல்ல குரல் வளம். நாகர்கோயில், நாகதம்பிரான் கோயில் கப்பல் திருவிழா அறிவிப்பாளரும் கூட. "பூர்வீக நாகதம்பிரான் அடியார்களே' என்று தொடங்கினால், "அடுத்ததாக நாதஸ்வர கலாநிதி எம். கே.பஞ்சாபிகேசன் அவர்களின் நாதஸ்வர இன்னிசை இடம்பெறும்" என இனிதாக முடிப்பார்.

எல்லா வளமும் இருந்தும் ,பாவம் அவர் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர் ஒருநாள் அம்பன் ஆஸ்பத்திரியில் இரவுக் கடமை முடித்து நிலா வெளிச்சத்தில் குடராப்பு நோக்கி போய்க் கொண்டிருந்தார். சுடலைப்பிட்டி பிள்ளையார் கோயிலுக்கு முன்னே வீதிக் குக் குறுக்காக ஏதோ நீளமாகத் தென்பட்டது. கொஞ்சம் உற்றுப்பார்த்த ஆசையப்பா,

சைக்கிளை 'சடார் புடார்' என்று திருப்பிக் கொண்டு நாகர்கோயிலுக்கு யோகத்தான் வீட்டுக்கு வந்துவிட்டார்.

"யோகு யாரையோ கொலை செய்து றோட்டிலை போட்டிருக்கிறாங்கள்." சொல்லும் போதே அவரின் கைால் எல்லாம் பதறுகின்றது. நடுக்கம்வேறு.

"சரி, சரி மாமா, பொறுங்கோ. நானும் வாறன். போய்ப் பாப்பம்"

யோகத்தான் நல்ல ரோர்ச் ஒன்றை கையில் எடுத்துக் கொண்டார். யோகத்தானுக்கு ஆசையப்பாவின் பயம் பற்றி நன்கு தெரியும்.

இரண்டு பேரும் புறப்பட்டார்கள். கிட்டவாக வந்து ரோர்ச் அடித்துப் பார்த்தார்கள். அது காற்றுக்கு வீழ்ந்த பனையோலை. மூன்று காவோலைகள். அவற்றை பார்த்துத்தான் அவர் பிண மென்று வெருண்டிருக்கிறார்.

"அடக் கறுமம், உதுக்கே பயந்தனான்" சிரித்துக் கொண்டு போனார் ஆசையப்பா. மலேரியாப் பரிசோதகர் வேலை கிடைக்க முன்னர் வன்னிக்கு நாட் சம்பளத்துக்கு அரிவுவெட்டப் போவார் ஆசையப்பா. பல இளைஞர்களும் இவ்வாறு சேர்ந்து போவார்கள்.

ஒரு தடவை அரிவு வெட்டப் போய்ப் பதினைந்து நாள் கழித்து ஊருக்குத் திரும்பினார்.அவரின் கஷ்டகாலம் தனியத்தான் வரவேண்டியதாய்ப் போய்விட்டது. பஸ் வேறு தாமதம். எழுதுமட்டுவாளில் வந்து இறங்கவே இரவு 7.30 மணி ஆகிவிட்டது. நடந்துதான் போக வேண்டும். ஆனால் நல்ல நிலவு.

துணிவை வரவழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

பயமா இருக்குது. கையில் பதினைந்து நாள் சம்பளம் வேறு இருக்கின்றது. இடுப்புச் சாரத்தில் காசை முறுக்கி சுற்றி வைத்துக் கொண்டார். பசியும் கிளம்பிவிட்டது. வேகமாக நடக்கத் தொடங்கினார். விழுவளைச் சந்தி கழிய வருவது கண்டல்காடு. வழிப்பறித் திருடர்கள் அந்தக் காட்டில் நடமாடும் காலகட்டம். திருடன் வரக் கூடாது.

"நாகையா நாகையா" என நாகதம்பிரான் பெயரை முணுமுணுத்துக் கொண்டே நடந்தார்.

நடுக் காடு.

பாலத்துக்கு முன்பாக

"டேய் நில்லடா"

ஆசையப்பாவுக்கு இதயம் நின்றுவிடும் போல இருந்தது.

நிச்சயமாகக் கள்ளன்தான். கள்ளனின் கையில் வில்லுக்கத்தி மினுமினுக்கிறது.( மடித்து மடியில் வைத்துக் கொள்ளக் கூடிய சிறிய கத்தியை வில்லுக்கத்தி என்பர் கிறிஸ் கத்தி எனவும் அழைப்பார்கள்.)

"இண்டைக்கு காசு தொலைந்தது"

**"ஆசையப்பா என அழைப்போம். கனிவான இனிமையான மனிதர். நல்ல குரல் வளம். எல்லா வளமும் இருந்தும் , பாவம் அவர் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர்"**

"காசு வைச்சிருக்கிறியோ? எடடா காசை"

"காசு இல்லை"

"பொய் சொன்னியோ குத்துவன்"

"ஆசுப்பத்திரியால வாறன் காசு இல்லை"

பயத்தை காட்டாமல் சொல்கின்றார்.

"கொண்டாடா பையை"


கள்ளன் உடுப்புப் பையை வாங்கி காசு, கீசு கிடக்கா என்று குனிந்து தடவத் தொடங்கினான்.

ஆசையப்பா யோசித்தார். இதுதான் சந்தர்ப்பம் துணிவை வரவழைத்துக் கொண்டார். வருவது வரட்டும்.

குனிந்தபடி நின்று கள்ளனுக்கு நன்றாக வலது காலை தூக்கி ஓங்கி ஒரு உதைவிட்டார். கள்ளன் 'அம்மா" என்று கத்தியபடி பின்னால் விழ, ஆசையப்பா பையைத் தூக்கிக் கொண்டு எடுத்தார் ஓட்டம்.

நாகர்கோவில் சந்தியில் நின்றுதான் திரும்பி பார்த்தார். இவரை எங்கே கள்ளன் கலைத்துப் பிடிக்க முடியும்? அவ்வளவு வேகம்...!

"அப்பு அண்டைக்கு ஓடின மாதிரி ஒலிம்பிக்கில் ஓடினால், எனக்குத்தான் தங்கப்பதக்கம்" பின்னைய நாள்களில் அந்தச் சம்பவத்தை எங்களுக்குச் சொல்லிவிட்டு கெக்கட்டமிட்டு சிரிப்பார்.




# யாழ். மாநகர வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

1944 மே மாதம்

மின்சார அதிகாரி எஸ்.நாகேந்திரம் சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற காரணத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். முன்னதாக மின்சாரப்பகுதியின் நடவடிக்கைகள் திருப்தியில்லை என்பதைக் காரணம் காட்டித் தலைவர் பதவி விலக வேண்டுமென வரி செலுத்துவோர் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யிருந்தது. இந்தத் தீர்மானத்தை தலைவர் நிராகரித்திருந்தார்.

13.09.1946 அன்று நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் ஒரேயொரு பயணிகள் மேடை தான் உண்டு என்வும் இரண்டு மேடைகள் அமைக்கப்பட வேண்டுமெனவும் அத்துடன் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் உறுப்பினர் மன்மதராயன் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இந்தப்பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1946/1947 ஆம் ஆண்டுக்குரிய சந்தை குத்தகை வருமானம்.

| | |
|---|---|
| பெரிய கடை சந்தை - | ரூபா 16,895 |
| பெரிய கடை பஸ்காலை - | ரூபா 7,357 |
| பெரிய கடை மீன் சந்தை - | ரூபா 4,021 |
| சின்னக்கடை சந்தை - | ரூபா 2,566 |
| செங்குந்தர் சந்தை - | ரூபா 3,620 |
| சிவியாதெரு சந்தை - | ரூபா 200.75 |
| தட்டாதெரு சந்தை - | ரூபா 51 |
| முத்திரைச்சந்தை - | ரூபா 210 |
| கொழும்புத்துறை சந்தை | ரூபா 36.50 |
| நாவாந்துறை சந்தை | ரூபா 427 |

பாகம் 23

1946/1947 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போது செலவினங்களை ஈடுகட்டுவதற்கு தற்போது 12.5 வீதமாக அறவிடப்படும் வரியை, 17.5 வீதமாக அதிகரிக்க வேண்டுமென தலைவர் பொன்னம்பலம் கூறினார்.

ஜனவரி 1947

சட்டத்தரணி பற்றிக், உபதலைவராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். சபை அங்கத்தவர்களுக்குள்ளேயே இளமையானவர் பற்றிக்.

வரி செலுத்துவோர் சங்கம் யாழ் மாநகரசபையை 15 வட்டாரங்களாக பிரிக்கும் யோசனையை அரச அதிபருக்கு சமர்ப்பித்தது. இந்த வட்டாரப் பிரிப்பில் முஸ்லிம்கள் தங்களுக்கு இரண்டு ஆசனங்கள் தேவையெனவும், தாழ்த்தப்பட்ட சாதியினர் தமக்கு மூன்று ஆசனங்கள் தேவையெனவும் வலியுறுத்தினர்.

தலைவர் பொன்னம்பலம் சாதிரீதியான வட்டாரப்பிரிப்பு முறைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இனரீதியான அல்லது மதரீதியான பிரதிநிதித்துவத்திற்கு அமைச்சரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது; இவ்வாறான நிலையில் நகரசபையில் எப்படி சாதி அடிப்படையில் வட்டாரங்களை பிரிக்க முடியும் என தலைவர் பொன்னம்பலம் கூறினார் அத்துடன் சபை எல்லைக்குள் பல சாதிகளைச் சேர்ந்தோர் உள்ளனர். ஒவ்வொரு சாதிக்கும் பிரதிநிதித்துவம் வழங்க முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

**பெப்ரவரி 1947**

வட்டாரப் பிரிப்புத் தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு உள்ளூராட்சி அமைச்சு விடுத்த கோரிக்கையை தலைவர் நிராகரித்தார். வரி செலுத்துவோர் சங்கம் தயாரித்த அறிக்கையை அரச அதிபர் ஏற்றுக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி, உள்ளூராட்சி அமைச்சும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. வரி செலுத்துவோர் சங்கத்தின் அறிக்கையை அங்கீகரிப்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையை அவமதிப்பதாகும் எனத் தலைவர் பதில் அனுப்பினார்.

உதவிக் களஞ்சியபொறுப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை உள்ளூராட்சி அமைச்சு வழங்க வேண்டுமென மன்மதராயன் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இப்பிரேரணையைச் சபை ஏற்றுக்கொண்டது.

(முற்றும்)

# அறிந்தும் அறியாமலும்

## சுயதனிமையில் பாலித!



எத்தடைவரினும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு மக்களுக்கு சேவை வழங்குவதை உயரிய கொள்கையாகக்கொண்டு செயற்படும் அரசியல்வாதிதான் பாலித தேவரப்பெரும.இதனால் மக்கள் மத்தியில் அவருக்கு பெரும் ஆதரவு இருக்கின்றது. சமூகவலைத்தளங்களிலும் அவரை போற்றிப் புகழ்வதற்கென தனிபடையணியே இருக்கின்றது.
கொரோனா முதலாவது அலையின்போது பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார். உணவு சமைத்து, அவற்றை லொறியில் ஏற்றி களுத்துறை மாவட்டம் முழுவதும் ஊர், ஊராகசென்று விநியோகித்தார்.
ஆனால் தேர்தல் தோல்வியின் பின்னர் பாலித தேவரப்பெரும மௌனம் காப்பதை காணமுடிகின்றது.தற்போது கொரோனா 2ஆவது அலை ஏற்பட்டுள்ள நிலையில், முன்புபோல அவர் உதவிகளை வழங்குவதைக் காணமுடியவில்லை. பாலித எங்கே எனப் பலரும் கேட்கின்றனர். களுத்துறை மாவட்டத்தில் உள்ள தனது காணியில் பெரும் கொட்டகையொன்றை அமைத்து அதில் பாலித தேவரப்பெரும தங்கியுள்ளார். அங்கே விவசாயம் செய்வதுடன், இயற்கையுடன் அமைதியாக நாட்களை கழித்துவருகிறார்.வீட்டுக்குகூட அடிக்கடி செல்வதில்லையாம்.

சுழியன்

## விஜயகலா 'அவுட்'!

நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று மூன்று மாதங்கள் நிறைவடையப்போகின்றன.எனினும், தேசியப்பட்டியல் ஊடாக கிடைத்துள்ள ஓர் ஆசனத்துக்கு உறுப்பினரொருவரை நியமிக்க முடியாமல் ஐக்கிய தேசியக்கட்சி திண்டாடிக்கொண்டிருக்கின்றது.
தேசியப்பட்டியல் உறுப்பினர் தொடர்பான விபரம் இன்று அறிவிக்கப்படும்,நாளை அறிவிக்கப்படும் என இழுத்தடிப்பு தொடர்கின்றதே தவிர இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள மோதலே இதற்கு பிரதான காரணம் என சொல்லப்படுகின்றது.
இதற்கிடையில் விஜயகலா மகேஸ்வரனும் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்வதற்கு கட்சித் தலைமையிடம் வாய்ப்புக் கேட்டுள்ளார் எனவும், இதற்கு தலைமைப்பீடம் பச்சைக்கொடி காட்டவில்லை எனவும் கூறப்படுகின்றது.

# மௌன மொழி 23 கவிதைகள்



விற்பனைக் வந்த பலூன்
விளையாட நீ எடுத்தால்
மொத்த முதல் நஷ்டமென்ற
மூதாட்டி நித்திரை போய்
விற்பனையோ ஏதுமில்லை
விடிவு வந்து சேரவில்லை - நான்
கற்பனைக்கு பிறந்த பிள்ளையா இங்கு
காரில் ஓடும் கனவும் பொய்களா

**வேலணையூர் விஜயன்**

வண்ண மலர் எனக்கு
வாழ்க்கை வெறுக்குதிங்கே
அண்ணை இருந்திருந்தால்
ஆசை குறைத்திருப்பேன்
வண்ண பலூன் ஏந்தி
வானில் மிதந்திருப்பேன்
என்ன பாவம் செய்தேனோ
எல்லாமே துக்கம் இங்கே

**வி.சாத்வீகன்**
முரசுமோட்டை

விதியின் விளையாட்டு என்று ...
வீதியோரம் விளையாட்டு
பலூன்களை நான் விற்பது
கோட்டை கட்டிக் குடிபுகவும்
வீட்டைக் கட்டி வாழ்ந்திடவும்
ஆபரணங்களால் எங்களை
அழகுப்படுத்தவும் இல்லை...
அரைச்சாண்
வயிற்றுக்கு உணவிட மட்டுமே

**பா.கனகேஸ்வரி**
யாழ் பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை

உன்னவன் எழுந்து வரும் வரைக்கும்
நீ பசியால் வாடித்தானாக வேண்டும்..
பெண்ணியம் பேசும் மேதைக்கெல்லாம்
உன் வறுமையை போக்க நேரமில்லை..
அழிந்ததற்காய் போராடும் எம்மவர்க்கு
இருப்பதைக் காத்திட வீரமில்லை..

**சி.கஜானி,**
சாவகச்சேரி.

துணையிழந்தே தனிமரமானாலும்
மழலைதனைக்காக்க தேர்ந்தெடுத்தே
பலூன் விற்பனையை கொரோனாவும் தடுத்திட
மழலைதனை அணைத்திடும் கரமது
பலூன் தனைக் கட்டியணைத்து வாடும்
தாயவள் முகங்கண்டு பாலனவன்
விளையாட்டை மறந்தானோ? தாயே
துயர்விடு நானுளேன் என்றெண்ணியதோ?

**ந.தனுபதன்**
வணிகர் கழகம், யாழ்ப்பாணம்

ஒளியில்லாத இருள் சூழ்ந்த வாழ்வில் கந்தல் உடையில்
வறுமையின் பிடியில் வனப்பில்லா வாழ்க்கையால்
வீதியிலே தன் குழந்தையின் பசி போக்கத் தன்
மூச்சுக்காற்றைச் சிறைப்பிடித்து வண்ண வண்ண
பலூன்களை விற்பனை செய்கிறாள் அவள்
வாழ்வின் விடியலைத் தேடி......

**ஜெனனி .மோ**, உருத்திரபுரம்,
கிளிநொச்சி

சோறு தண்ணீர் வேண்டுமென்று
சகோதரம் அழும்போது
சோம்பி நானும் சாலையிலே
படுத்திடத்தான் இயலுமோ
கொரோனா கோமகனால்
யாசகத்துக்கும் இடமில்லை
கொல்லும் பசியில் என்னிரு
கண்களும் திறக்குதில்லை
பாடநூலுடன் புரளும் நேரத்தில்
பலூன் விற்கும் பாலகி நான்
வாசிப்பவருக்கு இது ஒரு வேடிக்கை
வடிப்பவளுக்கு இது தான் வாழ்க்கை

உ.டிலக்ஷிகா,
யாழ்ப்பாணம்

பலூனுக்குள் பலூன்கள்
வண்ண வண்ண பலூன்கள்
காற்றில் அசைந்து அசைந்து
குழந்தையின் ஏக்கமுணர்ந்து
கதை பேசுகின்றன

**ச.நந்தனா,**
159, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

சாலையோரத்தில்
என்னுடன் என் அம்மா
தன் முனைப்போடு பலூன் விற்க
புன்னகை பூத்த பலூனில் – உன்
அடக்க முடியாத அழுகையை
யார் காண்பார் அம்மா
மூச்சடக்கி எனை ஈன்றாய்
மூச்சுள்ளவரை காப்பாற்ற முயல்கிறாய் !
மூச்சுள்ளவரை நானும்
உனை காப்பாற்றுவேன்!


ச . சிவசங்கரி

**பரிசு பெறும் கவிதை**

காற்று நிரம்பிய பலூன்கள்
கண்சிமிட்டி புன்னகைக்கின்றன
அவற்றை ஏந்தி விற்கும்
வறுமையின் குழந்தைகள்
வயிற்றுப் பசியை
நிரப்புவோர் யாரோ....?

மின்மினி,
சண்டிலிப்பாய்.

# மௌன மொழி 24




**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**05.12.2020**

கவிதைக்கு பரிசு 1000/-

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555




அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

..............................................................

கையொப்பம்:........................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

# சொற்சிலம்பம் போட்டி 23

## சொற்சிலம்பம் போட்டி 21 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சமத்துவம், 6.மாறு, 7.தின், 8.மது, 9.திப்பு, 11. மைதானம், 13.புத்தி, 15.யாம், 17.தருமதி, 20.நுகர், 22.தம், 23.மதி, 24.மாரடைப்பு, 25.திரைத்துணி, 26.பாரா

**மேலிருந்து கீழ்**

1.சமாதி, 2.மறுப்பு, 3.துதி, 4.வன்மை, 5.போதும், 8.மனம், 10.புத்தர், 12.தாயாதி, 14.திரு, 16.அநுமதி, 18.மகாரணி, 19.தம்புரா, 21.கதிரை, 22.தப்பா, 24.மாது

### இடமிருந்து வலம்

1.வஞ்சகம் நிறைந்த தன்மை, 5.தீப விளக்கேற்றும் கலம், 7.மற்றொரு தரப்பினருடன் மோதிக் கொள்பவன், 9.தீவிரமான/ இறுக்கமான, 10.விழி, 11.ஒரு காட்டு விலங்கு, 12. பிரமிட் இந்த வடிவம் கொண்டது, 14.நெஞ்சு, 15.வாழ், 17.ரதியின் மனம் கவர்ந்த காதல் நாயகன், 19.பொருத்த, 20.வலிமை மிக்க/ உறுதியான, 21.விரிய/அகன்ற, 22.ஓரணியினர், 23.மச்சானை இப்படியும் அழைப்பர்

### மேலிருந்து கீழ்

1.சாடை மாடை, 2.வெட்டுவதால் கிட்டும் பகுதி, 3.பருவப்பெயர்ச்சிக் காற்றுகளுள் ஒன்று, 4.கவலை, 5.பெருக்கல் குறி, 6.முற் பிறப்பின் பாவ புண்ணியம், 8.ஒரு காட்சியை கண்ணால் பார்ப்பவன், 12.நுண்மதி, 13.வேகம், 14.காட்டு விலங்குகளில் ஓரினம், 16.சகோதரிமாரை மணந்த கணவர்மாரின் உறவு முறை, 17.புத்திக் கூர்மையற்றவன், 18.குளிர்ந்த தன்மை, 19.மரணமடையும் இந்துக்களது உடல்களின் எரியூட்டு, 21.ஒரு சுட்டுச் சொல்

**சொற்சிலம்பம் போட்டி இல.23**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**05.12.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 21இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**திருமதி தவமணி பிரேமானந்தன்**
சின்னக்கடை, பிரதான வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**அவனிகா வரதராசா**
இல 599/2, இணுவில் கிழக்கு, இணுவில்

**3 ஆம் பரிசு**
**மிதுலாஜினி விவேகானந்தன்**
தெய்யா கலட்டி வீதி, தும்பளை மேற்கு, பருத்தித்துறை

**4 ஆம் பரிசு**
**த.கவின்**
இல 17/1 மாட்டீன் லேன், யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**த.நிர்மலம்**
இல. 2, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

# மாணவர் கழகம்

133

**பெயர்:** ச.சரணியா
**முகவரி:** தெளிவத்தை தோட்டம், பதுளை.
**பி. திகதி:** 2005.02.19
**பாடசாலை:** பதுளை/ பாரதி மகா வித்தி.

134

**பெயர்:** சிவகுமாரன் பரணிகா,
**முகவரி:** 'அத்தி அகம்' நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
**பி. திகதி:** 2009.02.14
**பாடசாலை:** யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.

135

**பெயர்:** மு.மயூரேசன்,
**முகவரி:** நீர்வேலி மத்தி, நீர்வேலி.
**பி. திகதி:** 2008.02.04
**பாடசாலை:** யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.

136

**பெயர்:** வாமதேவன் தருண்,
**முகவரி:** நெளுக்குளம், வவுனியா.
**பி. திகதி:** 2003.05.15
**பாடசாலை:** வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்.

137

**பெயர்:** ச.சஜிதன்
**முகவரி:** 430, திருநகர், யோகபுரம், மல்லாவி.
**பி. திகதி:** 2013.06.10
**பாடசாலை:** மு/மயில்வாகனம், தமிழ் வித்தி.

138

**பெயர்:** சதீஸ்சன் ராகவன்,
**முகவரி:** அளவெட்டி மத்தி, அளவெட்டி.
**பி. திகதி:** 2009.09.21
**பாடசாலை:** யா/ மகாஜனக் கல்லூரி.

139

**பெயர்:** பாலகோபி ஆதேஸ்
**முகவரி:** 27A, பொற்பதி றோட்,' கொக்குவில்.
**பி. திகதி:** 10.10.2014
**பாடசாலை:** யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

140

**பெயர்:** சஷ்டிகா செந்துராஜ்
**முகவரி:** செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 14.08.2010
**பாடசாலை:** புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

1. சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மாணவர்கள் தமது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................................
2. முகவரி: ..............................................

..............................................

3. பிறந்த திகதி: ..............................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................................
6. தொலைபேசி இலக்கம்: ......................................

............................ ............................

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

சஞ்சீவி மாணவர் கழக **அங்கத்தவர்களாக** இணைய உங்கள் **புகைப்படத்துடன்** கீழ்காணும் முகவரிக்கோ **அல்லது வட்அப்,** வைபர் எண்ணுக்கோ **அனுப்பி** அங்கத்தவர்களாக **இணையுங்கள்.**

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

sanjeevi@uthayan.com

தில்லைநாதன் கோபிநாத்







# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 15

## 1990 - 1995

தனியரசு ஒன்றை அமைப்பதற்கான முக்கிய படிமுறைகளாக மரபுவழி இராணுவம், கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றோடு தன்னிறைவுப் பொருளாதாரத்தையும் புலிகள் முன்வைத்தனர். "தங்கு நிலையற்ற, சுய பூர்த்தியுடைய பொருளாதார வாழ்வை உருவாக்குதல்" என்பது தனியரசுக்கான முக்கிய படிமுறையாக இனங்காணப்பட்டிருந்தது.

போர்ச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க விடுதலைப்புலிகள், சுதந்திரப்பறவைகள் போன்ற பத்திரிகைகளை உருவாக்கியதுபோல, பொருளாதாரம் தொடர்பிலான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துக்காகப் பல்வேறு இதழ்களும் நூல்களும் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டன. அத்தகைய வெளியீடுகளில் முதன்மையானது "ஆதாரம்" என்ற சஞ்சிகை ஆகும்.

ஆதாரத்தின் முதலாவது இதழ் 1990 கார்த்திகை - மார்கழி காலப்பகுதிக்குரிய இரு மாத இதழாக வெளியாகத் தொடங்கியது. சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழ் எனக் குறிப்பிடப்பட்ட ஆதாரத்தின் ஆரம்ப வெளியீட்டாளராகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் அமைந்தது. இந்தத் தமிழீழ ஆய்வு நிறுவனமே பின்னர் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் என்றும் அறியப்பட்ட அமைப்பாகும். இந்த ஆய்வு நிறுவனமும், இதழும் 1972ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1980ஆம் ஆண்டுகளில் ஆய்வு நிறுவனமாகப் பரிணமித்த ஊற்று நிறுவனத்தினை ஒத்ததாக அமைந்தது குறிப்பி டப்பட வேண்டியதாகும்.

1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மீண்டும் போர் வெடித்ததைத் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது நேரடியானதும் மறைமுகமானதுமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. பல்வேறு அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. அந்த நெருக்கடி நிலையினை எதிர்கொள்ளவும், பொருளாதார எதிர்கால மேம்பாட்டைத் திட்டமிடவுமான ஒரு களமாக ஆதாரம் உருவாக்கப்பட்டது. தட்டுப்பாட்டு நிலைமையை எதிர்கொள்ளும் வகையில் பதிலீடுகளையும் மாற்று வழிகளையும் கண்டு பிடிப்பதற்கும், தமிழர் பிரதேச வளங்கள் அனைத்தையும் அடையாளங் கண்டு அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெறும் வழிவகைகளைத் திரட்டுவதையும், அச்செயற்பாடுகள் தொடர்பான உரையாடலை முன்னெடுப்பதையும் ஆதாரம் முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தது. கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களே ஆதாரம் இதழுடன் தொடர்பு கொள்ளும் வழிவகையாகக் குறிப்பிடப்பட்டி ருந்தன. அத்துடன் "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்" என்று தொடங்கும் பாரதியார் பாடல் ஆதாரத்தின் மகுடப்பாடலாக இடம்பெற்றிருந்தது. அவ்வகையில் ஆதாரம் பொருளாதாரச் செயற்பாட்டுக்கான ஆய்விதழாக அமைந்தது எனலாம். ஆதாரம் முதலாவது இதழில் "ஒரு இனம் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின், அதற்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று அவ்வினத்துக்கான ஒரு தனியான பொருளாதாரம் இருத்தல் என்பதாகும்" என்பதனை வலியுறுத்தித் தொடங்கும் போர்க்காலப் பொருளாதாரக் கொள்கை தொடர்பான கட்டுரை அடிப்படைத் தகவல்களைச் சேகரித்தல், பிரதேச ரீதியான திட்டமிடல், மாதிரி விவாசயப் பண்ணைகளை அமைத்தல், மக்களை உணவுற்பத்தியில் ஈடுபடுத்துதல், வழமை உணவு முறைகளை மாற்றியமைத்தல் ஆகிய திட்டங்களை முன்வைக்கிறது. அவ்வகையில் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கான பாதைப்படத்தினை வகுப்பதாக ஆதாரம் அமைந்தது எனலாம்.







ஆதாரம் அவ்வப்போது சிறப்பிதழ்களாகவும் அதிக பக்கங்களுடன் வெளியானது. விவசாயச் சிறப்பிதழ், உணவு பதனிடல் சிறப்பிதழ், நீர்வளச் சிறப்பிதழ், கைத்தொழில் சிறப்பிதழ் ஆகியவை அத்தகையவை ஆகும். ஆதாரம் குறிப்பாகக் கவனப்படுத்திய ஆய்வுத் துறைகளா கவும் இவையே அமைந்தன. அத்துடன் கால்நடை வளர்ப்பு, பனை வளப் பயன்பாடு போன்றவை தொடர்பில் ஆதாரம் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தியது.

அக்காலத்தில் பனையானது புலிகளால் தேசிய வளமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுமதியின்றிப் பனை தறிப்பது தடைசெய்யப்பட்டது. பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் 2000 ஆம் ஆண்டில் 2 கோடி பனைமரங்கள் எனும் திட்ட இலக்குடன் கூடிய கற்பகச் சோலைத் திட்டமும் அக்காலத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. இவை தொடர்பான தகவல்களையும் ஆதாரம் இதழ் தாங்கி வந்தது. பனைசார் தொழில்கள் குறித்த சமூகங்களுக்குரியதாகக் கருதப்பட்டதும் அது தொடர்பான சாதீய நிலைமைகள் தொடர்பானதுமான முற்போக்கான நிலைப்பாடுகளை ஆதாரம் முன்வைத்தது. "பனை சாதியின் ஓர் நெம்புகோல். சாதியின் ஓர் ஆப்பாகுமா" என்ற தொடர் கட்டுரை இத்தகையது ஆகும். அக்காலத்தில் பனை ஏறுவதற்கான இயந்திரம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

சுயசார்புப்பொருளாதாரத்தை வலியுறுத்தியும் அத்தகைய தொழில்கள் தொடர்பாகவும் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் வெளியாகின. காகித உற்பத்தி, களிமண், செங்கல், ஓடு உற்பத்தி, தும்புத்தொழில் போன்றவை தொடர்பான அறிமுகங்கள் இத்தகையவை ஆகும். ஆமணக்கம் எண்ணெய், சிறுதானியப் பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு, ஊடு பயிர்ச்செய்கை, கோழி வளர்ப்பு, பசுப்பால் உற்பத்தி போன்ற பல்வேறு வேளாண்மை சார் கட்டுரைகளும் வெளியாகின. நெருக்கடி நிலை தொடர்பாக உள்ளூர் விவசாயியின் பேட்டி, சீவல் தொழிலாளியின் பேட்டி போன்றனவும், பிரதேச ரீதியான கிராமிய அபிவிருத்திக் குழுக்களின் செயற்பாட்டு விபரங்களும் பொருண்மியச் செயற்றிட்டங்களை நேரடியாகப் பார்வையிட்ட விபரணங்களும், பிரதேச ரீதியான பொருண்மிய வள அறிக்கைகளும் ஆதாரத்தில் இடம்பெற்றன. பொருளாதாரத் தடை நிலவும் பிரதேசத்துக்குத் தேவையான பல்வேறு யோசனைகளையும் மாற்று வழிகளையும் தொடர்ச்சியாக ஆதாரம் முன்வைத்து வந்தது. நீர் இறைப்பில் மாற்று வழிகள், சீமெந்துக்குப் பதிலாக சுண்ணாம்பு பயன்பாடு போன்றவற்றை அவ்வகையில் குறிப்பிடலாம். மிகை உற்பத்திகளை வெளி மாவட்டங்களுக்கு அனுப்ப முடியாத நிலை நிலவிய காலம் என்ற வகையில் பதனிடல் தொடர்பாக அதிக முக்கி யத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

அக்காலத்தில் அறிமுகமான இரட்டைச் சூட்டடுப்பு போன்றவை பற்றிய தகவல்களும் ஆதாரத்தில் இடம்பெற்றன. பொருளாதாரத் தடையால் காகிதம் கிடைக்காத சூழலில் ஆதாரம் இதழ் 7இன் அட்டைப்படம் உள்ளூரில் மீள்சுழற்சி செய்யப்பட்ட காகிதத்திலேயே அச்சாகியிருந்தது.

ஆதாரம் இதழ்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கட்டுரைகளும், மீன்பிடி அபிவிருத்தி தொடர்பான கட்டுரைகளும் கவிதைகள், சிறுகதைகள் போன்றனவும் அவ்வப்போது இடம்பெற்றன. கல்வி போன்ற ஏனைய பொருண்மியத்துடன் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும் இடம்பெற்றன. குறுக்கெழுத்துப் போட்டிகளும் தொடர்ச்சியாக வெளிவந்தன. பழங்களிலிருந்து பானங்களைத் தயாரிக்கும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் 'அர்ச்சயா' நிறுவன விளம்பரங்கள் உள்ளிட்ட பல்வேறு விளம்பரங்களும் ஆதாரத்தில் வெளியாகின. ஆதாரத்தின் அட்டைப்படங்களில் பல்வேறு நிறங்களில் அமைந்த ஓவியங்கள் இடம்பெற்றன. கணினி பயன்படுத்தும் வசதிகள் இல்லாத அக்காலத்தில் பல்வேறு வகையான எழுத்துருக்களையும் நிறங்களையும் பயன்படுத்தி ஆதாரத்தின் தளக்கோலம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆதாரம் இதழ்களிலும், ஆதாரத்துடன் தொடர்புடைய வெளியீடுகளிலும் ஓவியர் தயாவின் ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன.

ஆதாரத்தின் வெளியீட்டுக்கு மேலதிகமாகத் தனியான ஆய்வு நூல்களையும், தமிழீழ ஆய்வு மையம் அல்லது பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வெளியிட்டு வந்தது. எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும், உணவுத் தேவையும் உற்பத்தி இலக்குகளும் போன்றவை இத்தகைய ஆய்வு நூல்களாகும். விரிவான தரவுச் சேகரிப்பின் அடிப்படையிலான ஆய்வுகளாக இந்த நூல்கள் அமைந்தன.

பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பிரிவினர் காப்பரண் எனும் காலாண்டிதழையும் 1992இல் ஆரம்பித்தனர். பனையும் தென்னையும் தமிழர் தாயகப் பொருளாதாரக் கட்டமைப்பின் பிரதான கூறுகள் என்ற வகையில் அவை தொடர்பான பொருண்மிய மேம்பாட்டுக்கு அக்காலத்தில் மிக அதிக கவனம் செலுத்தப்பட்டமையை இந்த வெளியீடுகள் கவனப்படுத்துவனவாக உள்ளன. ■

தருமராசா அஜந்தகுமார்

# பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்

**பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக இன்றைய வாழ்வைப் பார்ப்பது அக்கால இலக்கியங்களின் தீட் சண்ணியத்தின் சால்பினை உணர வைக்கும் ஒரு வழிமுறை ஆகும்.**



எமது வாழ்வைப் படம் பிடிப்பதும், கேள்விக்கு உட்படுத்துவதும் இலக்கியங்கள். பண்டைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் படிக்காமல், புதிய இலக்கியங்களிலும் கோட்பாடுகளிலும் ஆர்வம் செலுத்துவது பேதமையே. இன்றைய சமுதாயம் இலக்கியங்களையே கைவிட்டுவிட்டு தொலைக்காட்சிகளிடமும், சமூகவலைத்தளங்களிலும் சரண் அடைந்திருக்கும் முரணும் அவலமும், பேதைமையின் சான்றுகளாகிவிடுகின்றன. தீமையை வைத்துக் கொண்டு நன்மையைக் கைவிடுவதே பேதைமை என்று வள்ளுவர் கூறுகின்றார். யாதும் அறியாமை என்று பேதைமைக்கு விளக்கந்தருவார் பரிமேலழகர். இலக்கியங்கள் பொழுதுபோக்குச் சாதனங்கள் அல்ல. அவை வரலாற்றின் சாட்சியங்களாகவும் நிலைபெறக் கூடியவை. தமிழ் ஒரு செம்மொழி என்பதை நிறுவுதற்கு நாம் எமது பண்டைய இலக்கிய, இலக்கணங்களையே நாட வேண்டியிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வட நாட்டில் இருந்தே இலக்கிய வரலாறு தொடங்கப்பெற்றபோது, தென்னிந்தியாவின் வரலாற்றின் தொன்மத்தினை மீட்பதற்குப் பாடுபட்டவர் ஈழத்தைச் சேர்ந்த மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளையாவார்.

ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோரைப் போல் தமிழ்நாட்டில் போற்றப்பட்ட ஒரு அறிஞர் இவர். 1926 ஆம் ஆண்டு ஐங்குறுநூறு பதிப்பிக்கப்பட்ட பின்னரே சங்க இலக்கியங்கள் முழுமையான பதிப்பு நிலைக்கு வந்து சேர்ந்தன. அதற்கு முன்னரே ஏடுகளில் தேடி எடுத்து சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் என்பவற்றின் வாயிலாக தென்னிந்தியாவின் தொன்மையையும் வரலாற்றையும் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற நூலின் வாயிலாக ஆங்கிலமொழி மூலம் அவர் வெளிக்கொணர்ந்தார்(1903). அந்த வரலாற்று நிகழ்வை நிகழ்த்திய பெருமை ஈழத்தவர் ஒருவராலேயே சாத்தியமாயிற்று என்பது நாம் பெருமைப்படக் கூடிய ஒன்றாகும்.

இலக்கியங்கள், இலக்கணங்களைப் பதிப்பிப்பதற்காக அக்காலத்தவர்கள் அலைந்த அலைச்சலும், அவற்றை வெளியிடுவதற்கான பொருளுக்காக அலைந்ததும் பெரும் அவல நாடகங்களாகத் தோன்றின.

"சீமான்களே! இவ்வாறு இயந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கினும் மனந்தளம்புகின்றதே. தமிழ் மாதுநும் தாயல்லவா? இவன் அழிய நமக்கென்ன என்று வாளாவிருக்கின்றீர்களா? தேசாபிமானம், மனிதாபிமானம், பாஷாபிமானம் என்று இவையில்லாதார் பெருமையும் பெருமையா? இதைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களா?" என்று கலித்தொகையின் பதிப்புரையிலே கூறிய சி.வை.தாவின் குரல் இன்றும் கேட்டுக்கொண்டே இருக்கின்றது.

பதிப்பு முயற்சியிலே ஆறுமுகநாவலர், சி.வை.தா, வல்வை வயித்திலிங்கம்பிள்ளை என்று ஈழத்தவர்கள் முன்னோடியாக இருந்ததைப் போல, எண்ணிம நூலக ஆவணமாக்கலில் நூலகம் நிறுவனத்தின் (noolaham.org) பங்கு தலைசாய்த்தற்குரியது. வாய்மொழி வரலாறு என்று நீளும் ஆவணமாக்கல் பெருமை கொள்ளவைக்கின்றது.

இந்நிலையிலேதான் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக இன்றைய வாழ்வைப் பார்ப்பது அக்கால இலக்கியங்களின் தீட்சண்ணியத்தின் சால்பினை உணரவைக்கும் ஒரு வழிமுறை ஆகும். சங்கத்தொகை நூல்களுக்குள்ளே புறநானூறு தமிழர்களின் வாழ்வோடு மிகப்பின்னிப் பிணைந்த இலக்கியம். ஆயினும், ஆரம்பகாலத்தில் புறநானூறு ஈழத்தவர்களுக்குத் தொடர்பற்றதாகவும், பரிச்சயமற்றதாகவும் கொள்ளப்பட்டது. புறநானூற்றில் 'ஒரு பாட்டு' என்ற கட்டுரையில் பேராசிரியர் வி.செல்வநாயகம் பின்வருமாறு கூறுகின்றார்.

புறநானூற்றுச் செய்யுட்களைப் படித்து அனுபவிக்க முடியாமல் இருப்பதற்கு வேறு காரணம் இருத்தல் வேண்டும். அப்பாட்டுகளின் மொழிநடை, பொருள் மரபு, அவை குறிக்கும் வாழ்க்கை நிலை முதலியவை அக்காரணங்களுள் சிலவாகலாம். பண்டைக்காலத்து மொழிநடை வேறு. இக்காலத்தில் வழங்கும் மொழிநடை வேறு. பாட்டிலுள்ள சொற்கள் குறிக்கும் பொருளை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியாதவிடத்து அப்பாட்டைப் படித்து அனுபவிக்க முடியாது.

புறநானூற்றுச் செய்யுட்களுக்கு உரை உண்டு. ஆகவே அதன் உதவிகொண்டு பாட்டுகளின் பொருளை ஓரளவிற்காயினும் அறிந்துகொள்ளலாம். அப்படியிருந்தும் பாட்டைப் படித்து அனுபவிக்கமுடிவதில்லை. ஏனெனில் அக்காலத்து மக்கள் வாழ்க்கையையும் மக்களின் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய சிறப்பு வாய்ந்த ஒழுக்கம் முதலானவற்றையும் நாம் கற்பனை செய்து காணமுடிவதில்லை.

அதனாலேதான் புறநானூற்றுச் செய்யுட்களுள் பலவற்றை நாம் படித்து அனுபவிக்கமுடியாதிருக்கிறது. காலம் என்பது, கறங்கு போல வாய் மேலது கீழதுவாய் மாறும். கீழது மேலது வாய் மாறும் என்று வி.க கூறியதுபோல் "செல்வநாயகம் கூறிய காலம் இலங்கையில் மூண்ட போர் இங்கு ஒரு புறநானூற்றுக் காலத்தை உருவாக்கியது." புறநானூற்றை எங்கள் அனுபவத்துடன் அணுகும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. புறநானூற்றின் தொடர்ச்சியாய் ஈழத்துக் கவிதைகள் மாறத்தொடங்கின. எமது வாழ்வின் கணங்களை இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று அனுபவிப்பதும், உணர்வதும் விழிப்பதும் சாதாரணமான விடயங்களா என்ன?

புலம்பெயர் வாழ்வு தங்கத்தட்டில் தந்திட்ட சுதந்திரம் என்று பாடுகின்றார் ஒரு பெண் கவிஞர். புலம்பெயர் வாழ்வால் இங்குள்ளவர்கள் சிலர் தங்கத்தட்டில் சாப்பிடும் அளவுக்கு வளர்ந்தார்கள் என்பது இன்னொரு நிலை. போர் ஒருபக்கம் எம் வாழ்வை அழித்தது என்றால் பொருளாதாரத்தை சரியாகப் பயன்படுத்த தெரியாது இன்னொரு தலைமுறை அல்லாடுகின்றது. வெறும் கவர்ச்சிகளுக்குள் அகப்பட்டு உணவு, உடை என்று எமது வாழ்க்கைமுறைகளைக் காவு கொடுத்துவிட்டு, பண்பாட்டையும், சில வேளைகளில் உயிரையும் காவுகொடுப்பதைக் காண்கின்றோம். அரசாங்க வேலை இல்லை என்றால் மூக்கைப் பிடிக்க வாயைத் திறக்க முடியாத பட்டதாரிகள் ஒருபுறம். வெளிநாடுதான் எமக்கு ஒரே சரண் என்கின்ற இளைய தலைமுறை ஒரு புறம். வெளிநாட்டில் இருந்து வரும் பணத்தைச் சரியாகக் கையாளமுடியாத தலைமுறை ஒருபுறம் என்று கயிறிழுப்புகள். அந்தக் கயிறுகள் தூக்குக்கயிறுகளாகி எமது பொருளாதார பலத்தை மட்டுமல்ல, பல உயிர்களைக் கூட அழித்துவிடுகின்றன.

இராமாயணத்திலே இராவணன் சீதையைக் கடத்தி புட்பக விமானத்திலே கொண்டு சென்றுகொண்டிருக்கும்போது, சீதை தனது ஆபரணங்களைக் கழற்றி வீசினாளாம். இராமன், தான் சென்ற வழியை அறிந்துகொள்ளட்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தாள். அந்த நகைகள் வானத்திலே இருந்து தமக்குக் கிடைத்தன என்று குரங்குகள் மகிழ்ந்தனவாம். ஆனால் அந்தக் குரங்குகளுக்கு எந்த ஆபரணத்தை எங்கே அணியவேண்டும், அவற்றை என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லையாம். அவற்றை மாறி மாறி அணிந்துகொண்டிருந்தனவாம். புறநானூற்றிலே (378) ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் இளஞ்சேட் சென்னி என்ற அரசனிடம் பொருள் பெற்றுத் திரும்பினார். அவன் வழங்கியது சாதாரண பொருள்கள் அல்ல. அரசர்க்கே உரிய அணிகலன்கள் பலவற்றையும் வழங்கினான். அவற்றை எடுத்துச் சென்று சுற்றத்திடம் கொடுக்கின்றார். அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போன அவர்கள், விரலில் அணிபவற்றைச் செவியிலும் செவியில் அணிபவற்றை விரலிலும் அரைக்குரியவற்றை கழுத்திலும் கழுத்துக்குரியவற்றை இடையிலுமாக மாறி மாறி அணிந்தார்களாம். இதைக் கண்டவர்கள் கைகொட்டிச்சிரித்தார்களாம். இதற்கு அவர் உவமையாக சீதையின் நகைகளை எடுத்தணிந்த வானரங்களின் நிலையைச் சொல்கின்றார்.

**" நீள்நகர் நின்று, என்**
**அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி,**
**எஞ்சா மரபின் வஞ்சி பாட,**
**எமக்கென வகுத்த அல்ல, மிகப்பல,**

**மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை**
**தாங்காது பொழிதந்தோனே' அது கண்டு,**
**இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்,**
**விரல்செறி மரபின செவித்தொடக் குநரும்,**
**செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்,**
**அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்,**

**கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை**
**வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை,**
**நிலஞ்சேர் மதர் அணி கண்ட குரங்கின்**
**செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தா அங்கு,**
**அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே,**
**இருங்குளைத் தலைமை எய்தி,**
**அரும்படர் எவ்வம் உழந்ததன் தலையே."**

தம்மையும் குடும்பத்தையும் பாதுகாப்பதற்காக புலம்பெயர்ந்து சென்று தம்மவரின் மகிழ்ச்சிக்காக தமது வாழ்வை அங்கே அவர்கள் துறக்கும் பொழுது, பெரிய உந்துருளிகளில் சாகசம் காட்டிச் சாவையும் தழுவுகின்றார் இளைஞர் சிலர். பாதுகாக்கப்பட வேண்டியவற்றை அழித்துவிடுகின்றார்கள். பெற்றோர் முதியோர் இல்லங்களில் தனித்துவிடப்பட்டு விடுகின்றார்கள்.

"கண்டு அறியாதவன் பெண்டிலைக் கொண்டு காடு மேடெல்லாம் திரிஞ்சானாம்" என்ற கதையாக "அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்" என்ற நிலையாய் எமது பொருளாதாரம் பற்றிய பிரக்ஞை தொடர்ந்து கேள்விக்குறியாகின்றது. கொரோனா தன்னிறைவுப் பொருளாதாரத்தை மீண்டும் வலியுறுத்துகின்றது. நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் என்பதாய், நலியாத பொருளாதாரத்தை நோக்கி நகர்வோம். ■

22

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை

○ இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கடந்தவாரம் இப் பத்தியை வாசித்த ஆசிரிய நண்பர் ஒருவர் கட்டுரையாளரிடம் உளச்சார்பு பரீட்சைகள் தொடர்பாக தாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து கருத்துக்களை எழுதுவதாகத் கருத்து வெளியிட்டார்.


அவரது கருத்தின் பின்னணியில், பல்கலைக்கழக அனுமதிக்கான உளச்சார்பு பரீட்சைகள் குறித்து அதிக அக்கறை எடுக்க தேவையில்லை என்பது போன்ற ஓர் உணர்வு எதிரொலித்தது. அவரது உணர்வு மட்டுமல்ல நம் சமூகத்தில் உள்ள பலரது உணர்வும் இவ்வாறானதாகவேயுள்ளது. குறிப்பாக உயர்தரப் பரீட்சைக்கு நாம் வழங்கும் முக்கியத்துவத்தை அப் பரீட்சையின் இலக்கான பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக பூர்த்தி செய்யவேண்டிய இன்னொரு தடைதாண்டலாக இருக்கும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் உளச்சார்பு பரீட்சைகளுக்கு வழங்குவதில்லை. அவை குறித்து நாம் அதிக அக்கறையும் கொள்வதில்லை.

இதனை இன்னொரு கோணத்தில் நோக்குவதாயின், அரசாங்க வேலைவாய்ப்புக்களுக்கான போட்டிப் பரீட்சைகளுக்கான உளச்சார்பு பரீட்சைகளுக்கு பயிற்றுவிப்பதற்கான பல ஆசிரியர்களும் பல பயிற்சி மையங்களும் நம்மத்தியில் உள்ள நிலையிலும், பல்கலைக்கழக அனுமதிக்கான உளச்சார்பு பரீட்சைகளுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் மையங்களும் நமது சமூகத்தில் மிகவும் அரிதாகவேயுள்ளன.

இதற்கும் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக, பல்கலைக்கழகம் நடத்தும் உளச்சார்ப் பரீட்சைகள் குறித்த கற்கைநெறியுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டு இருப்பதுண்டு. அதேவேளை அவற்றுள் அனேகமானவை ஒரு பொதுமைபட்ட தன்மையைக் கொண்டிருப்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் ஆங்கிலத்திலேயே அநேகமாக நடைபெறும் இப் பரீட்சைகள் தொடர்பில் நம் மாணவர்களை பயிற்சி அளிப்பதற்கான புலமைத்துவமிக்க வளவாளர்களும் நம் மத்தியில் இல்லை என்பதும் கவலைக்குரியது. பல்கலைக்கழக அனுமதியில் இருபத்தைந்து சதவீதத்துக்கு அண்மித்த அனுமதிகளில் இப் பரீட்சைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதன் அடிப்படையில் உளச்சார்பு பரீட்சை குறித்து நாம் கவனயீனமாக இருக்க முடியாது என்பதே கட்டுரையாளரின் அடிப்படை வலியுறுத்தலாகும்.

எனவே பின்னணியிலிருந்து உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பங்களை சரியாக அனுப்பிய பின்னர் நமது பிள்ளைகள் எதிர்நோக்கும் இடர்கள் தொடர்பில் ஆராயலாம்.



### 1.போதிய தயார்ப்படுத்தல் இன்மை

குறிப்பிட்ட பரீட்சை தொடர்பான கடந்தகால வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்வதிலும் மாணவர்கள் மத்தியில் நெருக்கடிநிலை உண்டு. பல பல்கலைக்கழகங்கள் தாங்கள் நடத்தும் பரீட்சை வினாத்தாளை பரீட்சை மண்டபத்தை விட்டு மாணவர்கள் வெளியேற முன்னரே மீளப் பெற்றுக்கொள்கின்றன. இதன் காரணமாக கடந்த கால வினாத்தாள்கள் மாதிரிகளாகக் கூட மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் போதிய பயிற்சியை உரிய வகையில் எடுப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பும் இருப்பதில்லை.

### 2.ஆங்கில மொழியாற்றல் பலவீனம்

இவ் உளச்சார்புப் பரீட்சைகள் அனேகமானவை ஆங்கில மொழியில் மட்டுமே இடம்பெறுகின்றன. இதன்காரணமாகத் திறமைமிக்க பல மாணவர்களும் தமது ஆங்கில மொழியாற்றல் பின்னடைவு காரணமாக இப் பரீட்சைகளில் கோட்டை விட்டு விடுகின்றனர். இது அவர்களது எதிர்காலத்தைப் பாதிக்கும். கட்டுரையாளரின் தனிப்பட்ட தொழில்சார் அவதானிப்பின் அடிப்படையில் இப் பரீட்சைகளில் ஆங்கில மொழியறிவு கனதியான செல்வாக்கினைச் செலுத்துவதை உறுதியாகச் சொல்ல முடியும். உயர்தரப் பரீட்சைகளில் மிகக் குறைந்த பெறுபேறுகளைப் பெற்ற பல மாணவர்கள், உளச்சார்புப் பரீட்சைகளில் முன்னிலையில் இருப்பது தொடர்பில் ஆராய்ந்த போது அவர்கள் ஆங்கில மொழியில் சராசரிக்கு மேலான திறமையைக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது. இருந்தும் இப் பரீட்சைகளை எதிர்கொள்வதற்கு ஆங்கிலத்தில் அதிக புலமைத்துவம் தேவையில்லை என்பதையும் மாணவர்கள் கருத்தில் எடுத்து தன்னம்பிக்கையுடன் பரீட்சையை அணுக வேண்டும்.

### 3.பல்கலைக்கழகங்களுடனான தொடர்புகளைப் பின்பற்றல்

குறித்த உளச்சார்புப் பரீட்சைகளை நடத்தும் பல்கலைக்கழகத்தோடு பரீட்சைகள் நிறைவுபெறும் வரை தொடர்புகளைப் பேணுவது அவசியமானது. சில சந்தர்ப்பங்களில் பரீட்சையை நடத்த திட்டமிடப்பட்ட திகதிகள் மற்றும் இடங்களில் மாற்றம் ஏற்படுவதுண்டு. இதனை பல்கலைக் கழகங்கள் பத்திரிகைகள் வாயிலாகவும் தமது இணையத்தளம் மூலமாகவே அறிவிக்கின்றன. மாணவர்கள் சிலர் இத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதில்லை. இதனால் பரீட்சைக்கு தோற்ற முடியாத நெருக்கடிகளைச் சந்தித்த பின்னர், தமது சகாக்கள் பரீட்சையில் தோற்றிய பின்னரும் அவர்கள் அந்த பரீட்சையின் வாயிலாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான நிலைமையிலேயும் மாணவர்கள் விழிப்படைகின்றார்கள். இத்தகைய நிலைமையை எதிர்கொண்ட மாணவர்களை 2019ஆம் ஆண்டு பரீட்சையிலும் கட்டுரையாளர் அவதானித்ததுண்டு. சில மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டதும் தமது 'இசற்' புள்ளிகள் குறித்த வெட்டுப்புள்ளியைவிட அதிகமாக விருந்தும், தாம் குறித்த கற்கைக்கு விண்ணப்பித்திருந்தும் தமக்கு அனுமதி கிடைக்கவில்லை என முறைப்பாடுகளையும் மேன்முறையீடுகளையும் செய்கின்றார்கள். அவர்களுள் சிலர் உளச்சார்புப் பரீட்சைகள் குறித்தோ அப் பரீட்சைகளில் தாம் சித்தியடைந்தோமா, இல்லையா என்பது குறித்தோ எந்த தகவல்களையும் தம்வசம் வைத்திருப்பதில்லை. இது கண்டிக்கத்தக்க விடயம்.


### பரீட்சைகளின் தனித்துவத்தன்மை

சில குறிப்பான கற்கைநெறிகளுக்காக நடத்தப்படும் உளச்சார்பு பரீட்சைகள் அதற்கான தனித்துவங்களைக் கொண்டிருப்பது உண்டு. உதாரணமாக மொறட்டுவ பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் கட்டடக் கலைகள் என்கின்ற கற்கைநெறிக்கான பரீட்சை, மிகத் துல்லிய மாக அக் கற்கையோடு நெருக்கமான உறவைக் கொண்டது. அதாவது மாணவர்களின் முப்பரிமாண ஓவியம் வரையும் ஆற்றல் அப் பரீட்சையில் சோதிக்கப்படுவதுண்டு. அது தொடர்பாகவே பெரும்பாலான வினாக்கள் அமைவதுண்டு. இதனால் போதிய பயிற்சியற்ற மாணவர்கள் பரீட்சையில் தோற்றுவிடுகின்றார்கள். நமது பிரதேசத்தில் கட்டடக் கலையை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதும் ஒரு சமூகப் பின்னடைவாகும். காரணம், கட்டடக் கலை என்பது ஒரு பண்பாட்டோடு தொடர்புபட்ட ஒரு தொழில்துறையாகும். நமது சமூகத்தில் பொறியியலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள நிலைமையிலும் கட்டடக் கலைஞர்கள் எண்ணிக்கை மிகமிக குறைவாக இருப்பது ஆரோக்கியமானதல்ல.

ஒரு பண்பாட்டின் தடத்தில் பயணம் செய்யவிளையும் சமூகத்திற்கும் இது நன்றல்ல. இது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் கட்டடக்கலையை தனியார் நிறுவனங்களிலும் வாண்மைத்துவத்துடன் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் இலங்கையில் மிகக் குறைவாகவே உள்ளன. நிறைவாக இவ் வாரத்துடன் உளச்சார்புப் பரீட்சைகள் தொடரபான விடயத்தை நிறைவு றுத்திக்கொண்டு பல்கலைக் கழக கற்கைநெறிகளைத் தெரிவு செய்வதில் எவ்வெவ் விடயங்களைக் கருத்தில் எடுக்க வேண்டும் ஒரு கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவையென்பது தொடர்பிலும் இவை குறித்து நமது மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இழைக்கும் தவறுகள் குறித்தும் அடுத்த வாரம் முதல் ஆராயலாம்.

(தொடரும்)

**உளச்சார்புப் பரீட்சைகளை நடத்தும் பல்கலைக்கழகத்தோடு பரீட்சைகள் நிறைவுபெறும்வரை தொடர்புகளைப் பேணுவது அவசியமானது. சில சந்தர்ப்பங்களில் பரீட்சையை நடத்தத் திட்டமிடப்பட்ட திகதிகள் மற்றும் இடங்களில் மாற்றம் ஏற்படுவதுண்டு. இதனை பல்கலைக்கழகங்கள் பத்திரிகைகள் வாயிலாகவும் தமது இணையத்தளம் மூலமாகவும் அறிவிக்கின்றன.**



# இன்னும் எத்தனை நாட்கள்?

சி.கதிர்காமநாதன்
(தொல்புரம்)

சிறு கதை



இரவு 10 மணிக்கு மேல் வீட்டில் உள்ளவர்களால் தடை உத்தரவு எனக்குப் போடப்பட்டது. வழமைபோல எனது மனைவி அந்த உத்தரவை இடவில்லை. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹரிஷ் உத்தரவு போட்டதுபோல், எனது மகள்தான் அந்தத் தடை உத்தரவை சமர்ப்பித்தாள். இலங்கை அரசாங்கம் கொண்டுவரும் எல்லாப் பிரேரணைகளும் எவ்வித எதிர்ப்பின்றி நிறைவேறுவதுபோல், இந்த விடயமும் நிறைவேறிவிட்டது.

ஒற்றை ஆளாக நான் நின்று எதிர்ப்புக்காட்டி என்ன செய்வது?

மகள் கொண்டுவந்த பிரேரணை தான் என்ன?

“அப்பா! நீங்கள் வேலைக்குப் போகக்கூடாது” நான் அதிர்ச்சி அடைந்தேன்.

“ஏனம்மா.... போகக்கூடாது. நான் இதுவரை காலமும் வேலைக்குப் போறதைத் தவிர வேறு ஒரு குற்றமும் செய்யவில்லையே? ஏன் இந்தத் தண்டனை? நீதி பிழைத்துவிட்டது"

“சும்மா கத்தாதையுங்கோ. வேலைக்கு போகக் கூடாதெண்டா போகக்கூடாது.அவ்வளவுதான்”

ஒருவேளை மறுபடியும் இரண்டாவது கொரோனா அலை தொடங்கிவிட்டதால் இந்த முடிவுக்கு வந்து விட்டாளா?

முதலாவது அலை வந்தபோது ஊரடங்கால் நின்று, மறுபடி இயல்பு நிலை வந்தபோது வேலைக்குப் போய் வந்தது தானே?

இப்போது செய்திகள் அதிகமான உயிரிழப்புக்களை, பாதிப்புக்களைச் சொல்லுகின்றனவே...

மனைவியைக் கதை கொடுத்து இழுத்தேன்.

“அப்பா! அவள் பயப்படுகிறாள். வயசான ஆக்கள்தான் அதால பாதிப்படையிறது அதிகமெண்டதால அவள் யோசிக்கிறாள். நில்லுங்கோ”

என்ன செய்வது?

“என் பாட்டுக்கு பஸ்ஸில போய் வாறது தானே. நான் கண்டபடி சுற்றித் திரியிற ஆள் இல்லை. எந்த சபையிலையும் நான் தலைவருமில்லை. ஏன் பயப்பிடுவான்?”

“சொல்லுறதைக் கேளுங்கோ. அப்பாவுக்கு அறுபது கடந்திட்டுது. பென்சன் எடுத்தால் வீட்டை நிப்பம்தானே. அதான் நிக்கட்டாம்.”

என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வேலைக்கு போகாமல் நிற்பது எனக்கு கஷ்டமான காரியம். மனது கொரோனா பயமுறுத்தலை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

“அப்பா சொல்லுறதைக் கேளுங்கோ. அரசாங்கம் முதல் போட்ட மாதிரி ஊரடங்கு போடமாட்டுது. பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெண்டு சொல்லுது...”

மறுபடியும் காரசாரமான விவாதம்.

“அப்பா! இவ்வளவு காலமும் வேலைக்கு போனனீங்கள்தானே? அப்ப நாங்கள் மறிச்சனாங்களோ? இப்ப நிலமை இப்படிக் கிடக்கு... கொஞ்சக்காலத்துக்கு நில்லுங்கோ. பிறகு பாத்துப் போகலாம். உங்கட வேலைக்குப் பொறுப்பான ஆக்களிட்ட சொல்லுங்கோ.”

யார் அமெரிக்க ஜனாதிபதியானால் என்ன? நான் வேலைக்கு போவதை இப்போது எனது மகள் தான் முடிவு செய்ய வேணும்.

வேலைத்தலத்துக்கு விஷயத்தைச் சொன்னேன். அவர்கள் இலங்கையின் நேச நாடுகளைப் போல், எனக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள். பத்திரிகைச் செய்திகள் பயமுறுத்தின.

அங்கு இத்தனை பேர்..... இங்கு இத்தனை பேர். எனத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது......?

தனிமைப்படுத்தல் மையங்கள்... இனங்காணப்பட்ட இடங்கள்.... போக்குவரத்தின்றி முடக்கம்.... கூடுமானவரை தேவையற்ற பயணங்களைத் தவிருங்கள்...

பொதுப் போக்குவரத்து ஆபத்தானது. இங்கிருந்து சாவகச்சேரிக்கு இரண்டு பஸ்கள். யோசிக்க வேண்டிய விடயம் தான்... வெளிநாடுகளிலும் மறுபடி நோய் பரவத் தொடங்கிவிட்டது.

நான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டேன்.

“வயதானவர்களை உணவு கொடுத்து தனிமைப்படுத்தி வையுங்கள்.... அவர்களுடன் பழகுவதைத் தவிருங்கள்.... "செய்தி கூறியது.

“பார்த்தியளோ.... நாங்கள் உங்களோட கதைக்கிறம்.”

வாயை மூடிக்கொண்டேன்.

“பிள்ளை பழைய சாமான்கள் ஏத்துற வாகனம் வரும். சத்தம் கேட்டால் நிப்பாட்டு. இங்கே இருக்கிற பழசையெல்லாம் கொண்டுபோய்ப் போடவேணும்.”

நான் வாயை மூடி, தலையையும் துண்டால் மூடினேன். கொரோனா நோய்க்குரிய அறிகுறிகளை அறிந்ததிலிருந்து அச்சமடைந்தேன். பயணம் செய்யும்போது ஒருவருக்கு இந்த அறிகுறிகள் தென்பட்டால் நிலைமை என்ன?

வைத்தியசாலைக்குப் போய் வந்த மனைவி என்ன சொன்னாள்? "ஆஸ்பத்திரியில் எழுதிப் போட்டு இருக்கினம்.தும்மல், காய்ச்சல், தொண்டை நோ, சளி உள்ளவர்கள் இங்கு வரவேண்டாமெண்டு" என்ன செய்வது?

சில இடங்களில் சிறு வைத்தியர்கள் தங்கள் கடையைப் பூட்டி விட்டதாகத் தகவல்.

எனக்கு படிக்கும் காலத்தில் ஆஸ்துமா.

காலையில் பச்சைத்தண்ணி முகத்தில் பட்டால், சுமார் ஐந்து தடவைகள் தும்மல் வேட்டுக்கள் அதிகமான சத்தத்தில் முழங்கும். அப்படியான தொடர் தும்மல் எனக்கு.

சிலவேளை துவிச்சக்கர வண்டியில் போகும்போது தும்மல் வந்தால், வண்டியை ஓரங்கட்டி அமைதியாக தும்மல் வேட்டுகளைத் தீர்த்த பின்பு, மறுபடி பயணத்தைத் தொடருவேன். இப்போதைய நிலையில் வேலைத்தல நண்பர்கள் சுகம் விசாரித்தார்கள்.

“என்ன ஐயா, உமக்கு நல்ல மதியச்சாப்பாடு. சுடச்சுட சாப்பிட்டுப் போட்டு படுத்து கிடக்க வேண்டியதுதானே”

இடையில் ஒரு நாள் உடம்பு சுட்டது. முதுகு வலித்தது. தும்மலும் வந்தது..... பனடோலைப் போட்டு வந்தவற்றை அடக்கிக்கொண்டேன்.

அன்று பணத்தேவைக்கு வங்கிக்கு போய்வர வேண்டிய நிலை. மகள் வாகனத்தில் அழைத்துக்கொண்டு போனாள். முகக்கவசத்தை அணிந்துகொண்டேன். தேர்தல் முடிந்து இப்போதுதான் தனது தொகுதியைப் பார்க்கும் மந்திரி போல் நான் வெளியே சென்றேன்.

எமது மக்கள் எவ்வளவு உஷாராக இருப்பார்கள் என நினைத்தேன். எத்தனை செய்திகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள்

பிரதான வீதியை நோட்டமிட்டேன்.

முகக்கவசத்தோடு சிலர்... கவசம் இல்லாமல் இன்னும் சிலர்.. கவசத்தை நாடிக்குக் கீழே விட்டவர்கள்... கவசத்தால் வாயை மூடியவர்கள்.. பயணிகள் வண்டி என்னைக் கடந்து போனது. உள்ளே நெருக்கியபடி பயணிகள்..

சமூக இடைவெளி?

கொரோனாவுக்கு கூட இதைப் பார்த்துக் கோபம் வந்திருக்கும்.

மனிதர்கள் இயங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். இயங்கிக் கொண்டிருப்பதுதானே வாழ்க்கை. மதுபானக் கடையிலும் கூட்டத்துக்கு குறைவில்லை. உணவுத் தேவையை விட, இது அவர்களுக்கு முக்கியமாகப்படுகிறது. யாரிடமும் பயத்தைக் காணவில்லை.

“ மனிதர்கள் இயங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். இயங்கிக் கொண்டிருப்பதுதானே வாழ்க்கை. மதுபானக் கடையிலும் கூட்டத்துக்கு குறைவில்லை. உணவுத் தேவையை விட, இது அவர்களுக்கு முக்கியமாகப்படுகிறது. யாரிடமும் பயத்தைக் காணவில்லை. ”

“பார்த்தியளே.... சனங்கள் என்ன மாதிரி போய்க்கொண்டு இருக்குதுகள்.... எனக்குத்தான் கொரோனா மாதிரிக் கிடக்கு” நான் சொன்னேன். மகள் வாயைத் திறக்கவில்லை.

எங்கள் குடும்பம் இப்பிடிக் கட்டுப்பாடாக இருப்பதை கேள்விப்பட்ட உறவுகள் வீட்டுக்கு வருவதைத் தவிர்த்து விட்டார்கள்.

"உள்ளே வரலாமோ?"

மனைவியின் உறவுக்காரப் பெண் படலையைத் தள்ளியபடி கேட்டாள்

“ஏன் வாறதுக்கென்ன?”

“இல்ல நீங்கள் கொரோனாவுக்காக வெளியால வெளிக்கிடாம இருக்கிறதாய் கேள்விப்பட்டன். அதான் கேட்டுப்போட்டு வருவமெண்டு...... உள்ள வாறது பிரச்சினை இல்லைத்தானே?”

“அடக்கடவுளே! ஊர் பஞ்சாயத்து கூடி கடைசியில எங்கள் குடும்பத்தை ஒதுக்கி வைச்சிட்டாங்களே.....” கொரோனாவே, பாத்தியே எங்கட நிலைமையை?

(யாவும் சிந்தனை)

**கொலையுண்டவர்**
**சின்னவன் செல்வம் ( வயது - 56)**

சுழிபுரம், குடாக்கனையிலேயே பிறந்து வளர்ந்த செல்வம், கட்டட ஒப்பந்தகாரராக இருந்தவர். இரு ஆண்களும், இரு பெண்களுமாக செல்வத்துக்கு நான்கு பிள்ளைகள். எந்தக் குறையுமில்லாமல் போய்க்கொண்டிருந்த செல்வத்தின் வாழ்க்கையில் பிரச்சினை மகளின் காதல் ரூபத்தில் குறுக்கிட்டது.

.........

**கொலையுண்டவர் -**
**இராசன் தேவராசா ( வயது 31)**

குடாக்கனையில் பிறந்தாலும், இப்போது இணுவிலில் குடும்பத்தோடு வசித்து வந்தவர். எந்தவொரு கெட்டபழக்கமும் இல்லாமல், தானுண்டு , தன் வேலையுண்டு, தன் குடும்பம் உண்டு என வாழ்ந்துவந்தவர். 'சட்டறிங்' வேலையோடு விவசாயமும் செய்து வந்தார். 5 மற்றும் 3 வயதேயான இரு பிள்ளைகளுக்கு தந்தை. செல்வத்துக்கு மைத்துனன் முறையானவர்.

**தலைமறைவான சந்தேகநபர்**
**வசீகரன் (வயது 31)**

வசீகரனும் குடாக்கனையைச் சேர்ந்தவர். ஆடு, மாடு வளர்ப்பதுதான் பகுதி நேரத் தொழில். மிகுதி நேரங்களில் ஊர் மைனராக சகபாடிகளோடு கசிப்புக் காய்ச்சுவதே வசீகரனின் முழுநேர வேலை. கசிப்புக் காய்ச்சுவது தொடர்பில் வசீகரன் மீது பொலிஸில் பல முறைப்பாடுகளும் உண்டு. இந்த நிலையில் செல்வத்தின் மூத்த மகளுக்கு காதல் வலை வீசினான் வசீகரன். வலையில் அந்தப் பெண் சிக்கினாள். வீட்டாருக்குத் தெரியாமல் இரகசியமாகக் கதைப்பது, சந்திப்பது என காதல் வளர்ந்தது.

**துரோகம் தந்த பரிசு**

ஒருநாள் வெளியே போன செல்வத்தின் மூத்த மகள் இரவாகியும் வீடு வரவில்லை. எங்கு தேடியும் ஆளைக் காணோம். அப்படித் தேடியலைந்த போதுதான், வசீகரனை செல்வத்தின் மூத்த பெண் காதலிக்கும் விடயம் வீட்டாருக்குத் தெரிய வந்தது. உடனே வசீகரன் வீட்டுக்குப் போனார்கள். ஆனால் அங்கு அவனையும் காணோம். ஆக,வசீகரனோடு தன் மகள் சென்றுவிட்டாள் என்பது செல்வத்துக்குப் புரிந்தது.

காலம் செல்வத்தின் மனதை மாற்றியது. ஒரு வருடத்தின் பின்னர் தன் மருமகனாக வசீகரனை ஏற்றுக்கொண்டு, மகளையும் அவனையும் தன் வீட்டுக்கே அழைத்து வந்தார். செல்வத்தின் மூத்த பெண்ணுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. 5 வருடங்களில் மீண்டும் அவள் கர்ப்பமானாள். பிரசவத்துக்கு நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

திடீரென ஒருநாள் செல்வத்தின் இளைய மகளைக் காணோம். கூடவே மருமகன் வசீகரனும் மாயம். வீட்டில் இருந்தபடியே தன் மனைவியின் தங்கையையும் வசீகரித்து, அவளையும் இரகசியமாக வசீகரன் கொண்டு சென்றுவிட்ட விடயம் பின்னர் தான் அவர்களுக்குத் தெரியவந்தது. ஆனால் இந்தமுறை செல்வம் அவ்வளவு லேசில் விடுவதாக இல்லை. மிகத் தீவிரமாக மகளையும், வசீகரனையும் அவர் தேடத் தொடங்கினார். தேடலின் விளைவாக இளவாலையில் அவர்கள் இருவரும் கண்டுபிடிக்கப்பட்டார்கள். உடனேயே வசீகரனும், செல்வத்தின் இளைய மகளும் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டபோதும் " நாங்கள் ஒண்டாச் சேர்ந்து வாழப்போறம். பிரிக்கிறதெண்டா வழக்குப் போடுங்கோ" என்று அவர்கள் இருவரும் ஒரே குரலில் கூறியதால் விடுவிக்கப்பட்டார்கள்.

அப்படியிருந்தும் ஒருவாறு செல்வத்தின் பிடியில் இருந்து இளைய மகளைப் பிரித்து, மல்லாவியில் உள்ள உறவினர் வீடொன்றில் கொண்டு சென்று தங்கவைத்தார் செல்வம். 'அப்பாடா, இனிப் பிரச்சினை யில்லை' என்று அவர் ஆசுவாசப் பெருமூச்சை விடமுன்னரே, அங்கிருந்தும் அவளைக் கிளப்பிக் கொண்டு சென்றான் வசீகரன். அப்போதும் பிடிக்கப்பட்டு , மகளைச் செல்வம் மீட்டபோதும், வசீகரன் அவளை மூன்றாவது தடவையாகவும் தன்னோடு அழைத்துச் சென்றுவிட்டான். ஆனால் அவர்கள் இன்னமும் தலைமறைவாகவே இருக்கிறார்கள். தன் இரு மகள்களின் வாழ்வையும் வசீகரன் நாசாமாக்கி விட்ட கோபம் தலைக்கேற, தீராப்பகை யோடு இருந்தார் செல்வம். இரகசியமாக தன் வீட்டுக்கும், கசிப்புக் காய்ச்சும் இடத்துக்கும் வசீகரன் வந்து போகையில் செல்வத்தின் உறவினர்களோடு வசீகரனின் அவனது கும்பல் வலிந்து முரண்படத் தொடங்கினர். இந்த முரண் பாடு பல தடவைகள் கைகலப்பிலும் முடிந்தது.

**குடாக்கனை: கலவரபூமியா?**
**கசிப்புக் கோட்டையா?**

சுழிபுரம், குடாக்கனை என்றாலே "ஓ , கசிப்புக் காய்ச்சும் ஏரியாவா?" என்று அனைவரும் கேட்குமளவுக்கு அது கசிப்புக் கோட்டையாகவே மாறிவிட்டது. இங்குள்ள எல்லோருமே அப்படியல்ல.



ஒரு சிலர் தான் இந்தக் கசிப்புக் காய்ச்சும் கைங்கரியத்தைச் செய்கிறார்கள். ஆனால் அப்படி ஒரு சிலரின் கசிப்புக் காய்ச்சும் தொழிலும், போதைப்பாவனையும் இந்தப் பகுதியை ஒரு குற்றக் கிராமம் என்ற மாயைக்குள் தள்ளிவிட்டது. இந்தப் பகுதி கசிப்புக்கோட்டையாக இருப்பதால் சூழவுள்ளவர்கள் கசிப்புக்கு அடிமையாகி , குற்றச் செயல்களையும் கை கூசாமல் செய்கின்றனர். 2018 ஆம் ஆண்டு குடாக்கனைக்கு அருகில் உள்ள பாண்டாவெட்டையைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமியான ரெஜினா பாலியல் துன்புறுத்தலின் பின்னர் கொல்லப்பட்ட நெஞ்சைப் பதறவைக்கும் சம்பவமும் நிகழ்ந்திருந்தது. அதைவிட, களவு, குழு மோதல்கள், வாள்வெட்டு என குடாக்கனையை எப்போதும் ஒரு கலவர பூமியாக மாற்றியதற்கு இங்கு காய்ச்சப்படும் கசிப்பே காரணம்.

**தனிப்பட்ட கவனிப்பும்**
**கண்டுகொள்ளாத பொலிஸாரும்**

இப்படிப் பகிரங்கமாக குடாக்கனையில் கசிப்புக் காய்ச்சப்படுவது எல்லோருக்கும் தெரிந்தும் பொலிஸார் பெரிதாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என அந்தப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக இந்த இரட்டைக் கொலை வழக்கில் இன்னமும்( இந்தப்பகுதி எழுதப்படும் வரை) தலைமறைவாக பொலிஸாருக்கு டிமிக்கு கொடுத்து மறைந்திருக்கும் வசீகரன் குடாக்கனையில் கசிப்புக் காய்ச்சுபவர்களில் முதன்மையானவர். பலமுறை இவர் கசிப்போடு பிடிபட்டபோதும், பொலிஸார் அவர் மீது சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஊரவர்கள் சொல்கிறார்கள். பொலிஸாரை தனிப்பட்ட வகையில் வசீகரன் போன்ற கசிப்புக்காரர்கள் 'கவனிப்பதாலேயே' அவர்கள் முறைப்பாடுகளைக் கண்டும் காணாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதைவிட இன்னொரு காரியத்திலும் இந்தக் கசிப்புக் கும்பலும், பொலிஸாரும் கூட்டணியாக இறங்கியுள்ளார்களாம். இப்படிச் கசிப்புக் காய்ச்சுபவர்கள் பற்றி யாரும் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தால், அடுத்த நாளே அப்படித் தகவல் கொடுத்தவர்களின் வீட்டுக் காணிக்குள்ளும் இரகசியமாக இந்தக் கும்பலால் கசிப்புப் போத்தல்கள் கொண்டு வந்து வைக்கப்படுமாம். அடுத்தநாள் கசிப்புக்காரர்களைப் பிடிப்பது போல பாசாங்கு பண்ணும் பொலிஸார், முறைப்பாடு செய்தவர்களின் வீட்டில் திட்டமிட்டு வைக்கப்பட்ட கசிப்பை மட்டும் 'லபக்' செய்து அவர்களைக் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்தவர்களின் விபரம் கசிப்புக்காரர்களுக்கு எப்படித் தெரியவந்தது? கசிப்புக்காய்ச்சுபவர்களை விட்டு விட்டு தகவல் தந்தவர்களை மட்டும் ஏன் பொலிஸ் பிடிக்கிறது? என்ற கேள்விகளுக்கெல்லாம் ஒரே விடை, 'தனிப்பட்ட கவனிப்பே' என்கிறார்கள் மக்கள்.

இப்படிக் கசிப்புக் காய்ச்சுதல், விநியோகித்தல் என்பவற்றுக்காக ஒரு குழுவாக செயற்படுகிறார்கள். அப்படி வசீகரனும் ஒரு குழுவை வைத்திருக்கிறான். அதேபோல ரசியன் என்பவன் தலைமையிலான இன்னொரு கசிப்புக் கும்பலுக்கும், வசீகரன் கும்பலுக்கும் இடையே கசிப்புத் தொழில் போட்டியால் உள்ளூர நீண்ட நாட்களாக பகை இருந்து வந்தது.

## சாவுக்கு யார் காரணம்?

வசீகரன் செல்வத்தின் இளைய மகளைக் கொண்டு தலைமறைவான பின்னர் அடிக்கடி இரு தரப்பினருக்கும், இடையே கண்ட கண்ட இடங்களில் எல்லாம் மோதல்கள் வெடித்தன.

21.09.2020 அன்றும் அப்படியொரு முரண்பாடு.

முரண்பாட்டின் உச்சமாக வசீகரனது தம்பி, செல்வத்தின் தம்பியை அடிக்கப் பாய்ந்தார். ஆனால் அந்தச் சண்டையை நிறுத்த, வசீகரனின் சித்தப்பாவான கற்கண்டு ( காந்தி இந்திர காந்தன் வயது 47) என்பவர் அடிக்கச் சென்றவனை அப்படியே இறுகக் கட்டிப் பிடித்தார். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் கோபாவேசத்தோடு திமிறிய வசீகரனின் தம்பி, அவரது பிடியை விடுவிக்கும் நோக்கில் கற்கண்டை உதறித் தள்ளினான். அந்த உதறலால் தூரப் போய் விழுந்த கற்கண்டு, அடுத்த கணமே நெஞ்சைப் பொத்திக் கொண்டு விழுந்தார். விழுந்தவர் எழுந்திருக்கவில்லை. அப்படியே அவரைத் தூக்கிக் கொண்டு சங்கானை மருத்துவனைக்கு கொண்டு போயும் பயனில்லை. அடித்தே அவரைக் கொன்றார்கள் என ஊரில் வசீகரன் குழு கதை பரப்பிய போதும், அவர் மாரடைப்பு ஏற்பட்டே இறந்தார் என்பதை பிரேதபரி சோதனை அறிக்கை உறுதிப்படுத்தியது. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸுக்கு எந்தவொரு தரப்பும் முறைப்பாடு செய்யவேயில்லை. ஆனாலும் கற்கண்டின் சாவு குறித்து மருத்துவமனை அறிவித்து, பொலிஸார் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

**சதித்திட்டம்**

" சித்தப்பா, நீங்கள் இப்ப தனியப் போங்கோ, செல்வத்தின்ர வீட்டில இருந்து ரெண்டு பேரை உங்களுக்கு துணையா கெதியில அனுப்புறம் " என கற்கண்டின் செத்தவீட்டுல் வசீகரன் குடும்பத்தினர் சொல்லி அழுதுள்ளனர். இந்தச் செத்த வீட்டோடு இதுவரை கீரியும் பாம்புமாகத் திரிந்த, கசிப்புக்கு முக்களான ரசியன், வசீகரன் கும்பல் ஒன்றாக இணைந்து செல்வம் வீட்டுக்காரரை 'போட்டுத்தள்ள' உறுதியெடுத்துக் கொண்டார்கள். சதித்திட்டம் தீட்டப்பட்டு, நாளும் குறிக்கப்பட்டது. அந்த நாள், 13.11.2020.

**பொறி தயார்**

செல்வத்தின் உறவினர் ஒருவரை முதலில் தாக்கினால், அதைத் தட்டிக் கேட்க செல்வம் வருவார். அப்போது செல்வத்தையும், அவரது வீட்டில் உள்ள இன்னொருவரையும் போட்டுத்தள்ளுவது தான் வசீகரன், ரசியன் குழுவின் சதித்திட்டம். அப்படி அவர்கள் செல்வத்துக்கு வைத்த பொறி தான், தேவராசாவின் அண்ணனான சிவகுமார். ஏற்கனவே ஒரு முரண்பாட்டில் ரசியன் தரப்பைச் சேர்ந்த ஒருவருக்கு சிவகுமார் கத்தியாக் வெட்டியிருந்தார். இதனால் சிறைக்குச் சென்று சில நாட்களுக்கு முன்னரே விடுதலையாகியிருந்தார். எனவே அந்தச் சண்டையை மீண்டும் தோண்டியெ

(மறுபக்கம் பார்க்க)

டுத்து வலிந்து சண்டையை உருவாக்குவது சுலபம் என்பதாலேயே சிவகுமார் பொறியாகப் பயன்படுத்தப்பட்டார்.

### பிசகிய திட்டம், பிசகாத கொலை

13.11.2020 மாலை சுமார் 6 மணி.

சிவகுமாரின் வீட்டு வாசலுக்குப் போன ரசியன் தரப்பினர், சிவகுமாரைக் கடுமையாகத் தாக்கினர். மரக்கட்டையால் ஓங்கி ஒரு அடி. தலை பிளந்தது. குருதி பெருக்கெடுக்க, சிவகுமார் காயங்களோடு கிடக்க, வந்தவர்கள் வெளியேறினர். பின்னர் சிவகுமார் சங்கானை மருத்துவமனைக்கு படுகாயங்களோடு கொண்டு செல்லப்பட்டார். அதேவேளை ஊரவர்கள் பக்கத்தில் உள்ள இராணுவ முகாமுக்கும், பொலிசாருக்கும் பெரும் கலவரமொன்று நடப்பதாக அறிவித்தனர். ஆனால் உடனடியாக பொலிஸோ, இராணுவமோ அங்கு வரவில்லை என்று மக்கள் சொல்கிறார்கள்.

அதன் பின்னர் 8.30 மணியளவில் பொலிஸ் குழுவொன்று குடாக்கனைக்குள் நுழைந்தது. சண்டையில் ஈடுபட்ட இரு தரப்பையும் , எச்சரிக்கை செய்த பொலிஸார் அமைதியாக இருக்கும்படி அறிவுறுத்திவிட்டு நகர்ந்தனர். சிவகுமாரைத் தாக்கியபோதோ, அதன் பின்னரோ ரசியன் தரப்பு எதிர்பார்த்தது போல செல்வம் சண்டைக்குப் போகவில்லை. அதன் பின்னரே செல்வத்தை வீடுபுகுந்து கொல்வது என முடிவெடுத்து, வசீகரன் தரப்பும், ரசியன் தரப்பும் ஒன்றாக இரவு 10.30 ஐ தாண்டிய பொழுதில் கொலைவெறியோடு பாய்ந்தார்கள். செல்வத்தை மட்டுமல்லாது தன் அண்ணன் சிவகுமாருக்கு அடி விழுந்ததைப் பார்க்க வந்த தேவராசாவையும் சேர்த்து வெட்டிக் கொன்றார்கள்.

### கூண்டோடு தலைமறைவு

மாலை அடிதடி நடந்தபோதும், பின்னர் இரவு இருவர் வெட்டிக் கொல்லப்பட்டபோதும் பொலிஸார் வரவில்லை என்று குடாக்கனை மக்களில் ஒரு சாரார் சொன்னபோதும், அன்றிரவு 8.30 மணியளவில் பொலிஸாரின் ரோந்து அணி அங்கு வந்தது என இன்னொரு தரப்பு உறுதிப்படுகின்றது.

அதேவேளை, இருவரின் உடல்களையும் அதிரடிப்படை வந்தே தூக்கிச் சென்றதாக சொல்லப்பட்டபோதும், உண்மையில் பொலிஸார் வந்து உடல்களை மீட்டு இறந்தவரின் உடலை தமது வாகனத்தில் சங்கானை மருத்துவமனைக்கும், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவரை அம்புலன்ஸில் யாழ்.போதனா மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்துள்ளனர். சந்தேகநபர்கள் தலைமறைவான போதும், 12 பேரை பொலிஸார் அதிரடிப்படையினரின் துணையோடு கைது செய்துவிட்டனர். ஆனால் வசீகரனும் அவனது குடும்பத்தினரும் கூண்டோடு இன்னும் தலைமறைவாகவே உள்ளனர்.

### எங்களுக்குச் சம்பந்தமில்லை

"இந்த கொலைக்கும் எங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. மாலைவேளை ஒருவருக்கு அடித்த சம்பவத்தில் மட்டுமே எனது கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகள் தொடர்புபட்டிருந்தனர். எங்களது மகன் ஒருவர் தண்ணீர் எடுக்க செல்லும் போது அப்பகுதியை சேர்ந்தவர் அடித்தார். அதனைத் தட்டிக் கேட்க என் கணவரும் இரண்டு பிள்ளைகளும் சென்ற போதே அது அடிதடியில் முடிந்தது. ஆனால் செல்வம், தேவராசா ஆகியோரின் கொலையில் எந்தச் சம்பந்தமும் இல்லாத மகனையும், அவனது மனைவியையும் பொலிஸார் கைது செய்து வைத்திருக்கின்றனர்"என்கிறார் ரசியனின் தாயார்.

### கடமையில் தவறவில்லை!
### சொல்கிறது பொலிஸ்

"மாலை 6.30 க்கு ஒருவர் தாக்கப்பட்டதான செய்தி 119 ஊடாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்தது. அவ்விடத்துக்கு சென்ற மொபைல் பொலிஸ் அணி குடாக்கனையின் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது. அதன்போது இரவு 10.15 மணியளவில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரை கைது செய்துகொண்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் வந்து சேர்ந்தது. மீண்டும் 10 .30 மணியளவில் 119 ஊடாக அவ்விடத்தில் சண்டை நடப்பதாக தகவல் வர அங்கே பொலிஸார் சென்றனர். இருவர் காயங்களோடு இருக்க ஒருவரை அம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு செல்ல பொலிஸ் வாகனத்தில் ஒருவரை ஏற்றி சங்கானை வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர். பின்னர் இரவோடு இரவாக 12 சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்தனர். வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு ஆதரவாக விசேட அதிரடிப்படையினரும் செயற்பட்டனர்.

சமாதானம் ,பாதுகாப்பு சுகாதாரம், பிரமுகர் பாதுகாப்பு, கொரோனா தடுப்பு நடவடிக்கை என பொலிஸாரின் பணி அதிகமாக உள்ள போதும் சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனை மற்றும் நுகர்வு போன்றவற்றை கட்டுப்படுத்த வேண்டிய முழுமையான பொறுப்பு மதுவரித்திணைக்களத்துக்கே உண்டு. அவர்களுக்கு இதுதான் பிரதான வேலையே. சட்டவிரோத மதுபாவனையை கட்டுப்படுத்த வேண்டிய மதுவரி திணைக்கள அலுவலர்களை விட்டுவிட்டு பொலிஸாரை மட்டும் குற்றம் சாட்டுவது வழக்கமாகியுள்ளது. " என்று பொலிஸ் தரப்பு ஆதங்கப்படுகின்றது. பொலிஸாரின் இந்தக் குற்றச்சாட் டுக்கு மதுவரித்திணைக்களம் என்ன சொல்லப்போகின்றது?

### கொலை மிரட்டல்

இரட்டைக் கொலை புரிந்த பின்னும் வசீகரனின் இரத்தவெறி அடங்கவில்லை என செல்வம் வீட்டுக்காரர்கள் சொல்கிறார்கள். கொலை நடந்த சில தினங்களுக்குப் பின்னர் ( 17.11.2020 காலை 10.27 க்கு )நெருங்கிய உறவினர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் நிற்கும் போது , அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. மறுமுனையில் பேசியது வேறு யாருமல்லர், தலைமறைவாகியுள்ள சந்தேகநபரான வசீகரன் தான்.கடும் தூஷண வார்த்தகளோடு பேசத் தொடங்கிய வசீகரன், " அடுத்த கட்டம் உனக்கு இருக்கு. உன்னையும் , குஞ்சனையும் (செல்வத்தின் தம்பி) தான் அடுத்ததாப் போடுறது. உங்கள் ரண்டு பேரையும் கொண்டிட்டுதான் நாங்கள் சரணடைவம்" என்று கொலை மிரட்டல் விடுத்துவிட்டு, தொடர்பைத் துண்டித்துள்ளார்.

### வெட்டியவர்களைப் பார்த்தோம்

" இமையகாந்தன் என்பவர் ரோர்ச் அடித்து அடையாளம் காட்ட, ரசியன், கஜன், அப்பாவன் ஆகியோரே தேவராசாவையும், செல்வத்தையும் வெட்டினார்கள். இதை நாங்கள் எங்கள் கண்களால் பார்த்தோம். ரசியனின் ஆட்களே தூளையும் எறிந்தார்கள். இந்தக் கொலையை எல்லோரும் செய்துவிட்டு இப்போது அப்பாவன் ( ஆறுமுகம் சண்முகரத்தினம்) என்பவர் மட்டுமே கொலை செய்ததாகக் கதையை மாற்றுகின்றார்கள். அப்படி நடந்தால் உண்மையான , முக்கியமான குற்றவாளிகள் தப்பித்து விடுவார்கள்" என்று செல்வத்தின் உறவினர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

### கருகிப் போன தீபாவளி

அண்டைக்கு அவர்( தேவராசா) கூலி வேலைக்கு போட்டு பின்னேரம் தான் வீட்டை வந்தவர். வரேக்கையே தீபாவளிக்காக பிள்ளையளுக்கும் எனக்கும் உடுப்பு, வெடி, பட்டாசு எல்லாம் வேண்டிக் கொண்டு வந்தார். இரவு பிள்ளையள் பட்டாசு கொளுத்தி விளையாடிக் கொண்டிருந்ததை பக்கத்தில இருந்து அவர் பார்த்துக் கொண்டிருக்கேக்கதான் ஒரு போன் வந்தது. அப்ப அவர் " அண்ணைக்கு அடிச்சுப் போட்டாங்களாம். பாத்திட்டு வாறன்" எண்டு இஞ்சையிருந்து வெளிக்கிட்டுப் போனார். அதுக்குப் பிறகு அவரை வெட்டிட்டாங்கள் எண்ட தகவல்தான் எங்களுக்கு வந்தது. எங்கடை கலியாண நாளில அவரை எரிக்க வேண்டிய கொடுமை எங்களுக்கு" என்று சொல்லி அழுகின்றார் கொலையுண்டவர்களில் ஒருவரான தேவராசாவின் மனைவி.

#### சந்தேகம் 1

வசீகரன் என்ற பிரதான சந்தேகநபர் குடும்பத்தோடு தலைமறைவானதால் இன்னும் கைதாகவில்லை. அவர் இருக்குமிடம் தெரியவில்லை என்கின்றனர் பொலிஸார். ஆனால் 0760906971 என்ற இலக்கத்தில் இருந்து செல்வத்தின் உறவினர்களுக்கு ( அதுவும் பொலிஸ் நிலையத்தில் நிற்கும் போது) வசீகரன் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். அப்படியானால் குறித்த தொலைபேசி இலக்கம் எங்கிருந்து செயற்படுகின்றது என்பதை இப்போதுள்ள தொழினுட்பத்தின் மூலம் சுலபமாகக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்திருக்கலாமே? இப்போதுள்ள கொரோனாச் சூழ்நிலையில் குடும்பத்தோடு ஒருவர் தலைமறைவாக இத்தனை நாட்கள் ஒளிந்திருப்பதென்பதும், அவரைப் பொலிஸால் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதென்பதும் நம்பக்கூடியதா?

#### சந்தேகம் 2

இந்த இரட்டைக் கொலைகளையும் பகிரங்கமாகவே சிலர் செய்திருப்பது அங்குள்ள மக்களின் வாக்குமூலங்கள் மூலம் உறுதியாகின்றது. ஆனால் அதில் ஒரு தரப்பினர் தமக்கும் கொலைக்கும் சம்பந்தமில்லை என மறுப்பதும், தனி ஒருவரே இருவரையும் வெட்டினார் என பழியை அவர் மீது போடுவதும் ஏன்?

அப்பாவன் எனப்படும் நபரை குற்றத்தை தனியே ஒப்புக்கொள்ள வைத்து, பின்னர் அவரை எவ்வளவு செலவானாலும் வெளியே எடுக்கிறோம் என வசீகரன் தரப்பு உறுதியளித்துள்ளதாகச் சொல்லப்படுவது உண்மையா?

#### சந்தேகம் 3

இதுவரை தமக்குள் முறுகிக் கொண்டு திரிந்த ரசியன் கும்பலும், வசீகரன் கும்பலும் என்ன 'டீலிங்கின்' அடிப்படையில் ஒன்று சேர்ந்தார்கள்? தனியே செல்வம் குடும்பத்தைப் பழிதீர்க்கத்தானா? அல்லது வேறு காரணங்களும் உண்டா?

#### சந்தேகம் 4

ஏற்கனவே கசிப்பு வழக்குகளில் 'வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு' அவர்களைச் சுதந்திரமாக கசிப்பு விற்க அனுமதிக்கும் பொலிஸார், இந்த வழக்கில் நடுநிலையாகச் செயற்படுவார்களாக என்ற சந்தேகம் மக்களுக்கு உண்டு. ஏனெனில் அவர்களைப் பிடித்து தண்டனை வாங்கிக் கொடுத்தால் வருமானம் இல்லாமல் போய்விடுமே!

#### சந்தேகம் 5

இது ஆத்திரத்தில் தற்செயலாக நிகழ்ந்த கொலைகள் என்று சந்தேகநபர்களின் தரப்பில் சொல்கிறார்கள்."கொலை செய்ய வேண்டுமென்று போகவில்லை. கற்கண்டின் மரணத்துக்கு காரணம் செல்வம் குடும்பமே காரணம். அந்த ஆத்திரத்தில் நியாயம் கேட்கப் போகையில் , தற்காப்புக்காக நடந்த சண்டையில் எதிர்பாராத விதமாக கோபத்தில் வெட்டிவிட்டார்கள் என்று வசீகரனின் உறவினர் ஒருவர் ஊரவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். ஆனால் இது மிகத் திட்டமிடப்பட்ட கொலையே. தூள் பைக்கற்றுகள், ஆடு வெட்டும் கத்தி, வாள்கள், பொல்லுகள் என்பவற்றோடு சென்றா நியாயம் கேட்பார்கள்? அத்தோடு வெட்டப்படுபவர்களின் முகத்துக்கு ரோர்ச் லைட் அடித்து அடையாளம் காட்டப்பட்டே கொல்லப்பட்டுள்ளார்கள். கொலை செய்யச் சென்று ஒளிந்திருந்தமை, செல்வத்தை வெளியே வரவழைக்க தேவராசாவை வெட்டியமை என்று எல்லாமே திட்டமிட்ட படுகொலைக்கான அடையாளங்கள் தானே?

மதிப்புக்குரிய

# கல்வி அமைச்சர் மாண்புமிகு

## ஜீ.எல்.பீரிஸ் மாத்தையாவுக்கு.....




ஆயுபோவன் ஐயா!

நான் நல்ல சுகம். நீங்கள் உங்களிலை வலு அக்கறை யான ஆள் எண்டு கேள்வி. அதாலை நல்ல சுகமாக இருப்பியள் எண்டு எனக்குத் தெரியும். இருந்தாலும் கவனம். மீற்றிங் அது இது எண்டு கூப்பிடுவங்கள். போகேக்கை முகக்கவசத்தைக் கொழுவ மறக்க வேண் டாம். நல்லா எட்டத்திலை இருந்து ஆக்க ளோடை கதையுங்கோ.

போன ஒக்ரோபர் மாசம் எண்டு நினைக்கி றன், நீங்கள் சொன்னனியள் “குழந்தைகளின் நல் வாழ்வு மற்றும் ஆரோக்கியத்துக்கு முன் னுரிமை வழங்கித்தான் அரசாங்கம் எல்லாக் காரியங்களையும் செய்யும்” எண்டு.

பிறகு அப்பிடியே குத்துக்கரணம் அடிச்சு, " சுகாதார அதிகாரிகளிட்டைக் கேட்டனாங் கள். அவை ஸ்கொலசிப்பையும், ஏ.எல் சோதினை யையும் வைக்கச் சொல்லீனம்" எண்டு அவை யின்ரை தலையிலை பந்தைப்போட்டிட்டுச் சோதினையளை வைச்சு முடிச்சியள். இப்ப ஸ்கொலசிப் மறுமொழியும் வந்திட்டுது. அது போக, போன 3 ஆம் திகதியளவிலை பாட சாலை மாணவர்களுக்குப் புதுசா தொலைக் காட்சிக் சேவை ஒண்டைத் துவங்கிப் படிப் பிக்கப்போறதாச் சொன்னியள்.இப்பிடி நீங் கள் சொன்ன யோசினைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது எண்டும் செய்தி வந்ததைப் பாத்தனான்.

ஆனால் இப்ப இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கு. கொரோனாத் தொத்துக் காலத்திலை இணை யத்தாலை பிள்ளையளைப் படிப்பிப்பம் எண்டு எடுத்த முயற்சி தோல்வி எண்டது தான் அந்த வெடிகுண்டுச் செய்தி. இணையத்திலை படிப்பிக்கிற முயற்சியாலை சமூகத்திலை பல குழப்பங்கள் வரப் பாக்குதாம். சனத்துக்குப் பொருளாதாரப் பிரச் சினையும் கனக்க வரப்பாக்குதாம் எண்டு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின்ரை பொதுச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க ஊடகங்களைக் கூப்பிட்டு வைச்சுச் சொல் லியிருக்கிறார். அது மட்டுமில்லை, ஆசிரியர், பெற்றோர் எண்டு கன பேரிட்டை அதுக்குரிய வசதி வாய்ப்பும் இல்லை எண்டும் அவர் சொல்லியிருக்கிறதைப் பாத்தால் முன்னம் நீங்கள் சொல்லியிருக்கிற தொலைக்காட்சிக்குள்ளாலை படிப்பிக்கிற தெண்ட முயற்சியும், கிட்டத்தட்டத் தோல்வி எண்ட மாதிரித்தானே வரும். எனக்குத் தெரிஞ்ச மட்டிலை இப்ப கன வீடுகளிலை ரீவி யும் இல்லை. இந்த நிலையில் நீங்கள் புதுசா தொலைக்காட்சிக் கல்விச் சேவை ஒண்டைத் துவங்கி எத்தினை பேற்றை தாலியை அடைவு கடைக்கு அனுப்பப் போறியளோ தெரியாது.

ஏனெண்டால் படிக்கப்போற குழந்தைகளுக்கு குடும்பக் கஷ்டம் விளங்காது. படிக் கப்போறம், ரீவி வாங்கித் தாருங்கோ எண்டு ஒற்றைக் காலில நிக்குங்கள். உதாலை கன தாய் தகப்பன்மாருக்கு இனி கழுத்திலை கயிறுதான். உதைக் கொஞ்சம் மாத்தி யோசியுங்கோவன். நான் இப்பிடிச் சொல்லுறதுக்கு மன்னிக்க வேணும். ஒரு திட்டத் தைக் கொண்டு வரேக்கை, வடிவா யோசிச்சு தீர்ககமா முடிவெடுத்து எங்கடை நாட்டு மக்களுக்குத் தோதுப்படுகிறமாதிரிக் கொண்டு வாருங்கோ. ரீவியிலை படிப் பிக்கிற திட்டத்தைப் பற்றிச் சொல்லிறதெண்டால் தமிழ்ச் சனத்தைவிடச் சிங்களச் சனம்தான் சரியாக் கஷ்டப்படுவினம். தமிழ்க் கிராமங்களைக் காட்டிலும் சிங்களக் கிராமங்கள்தான் அதிகம் வசதி இல்லாமல் இருக்கு. அப்ப அங்கை உள்ள பிள்ளை யள் எப்பிடி ரீவியாலை படிப்பினம்?

பீரிஸ் மாத்தையா! நீங்கள் ஒரு வசதி வாய்ப்புள்ள வீட்டுப் பிள்ளை எண்டு எல்லா ருக்கும் தெரியும். நீங்கள் கொழும்பிலை படிக்கிற காலத்திலை காலமை உங்களைக் கொண்டு போய் பள்ளிக் கூடத்திலை விடுகிற கார் பள்ளிக்கூடம் விடும்வரை காத் துக் கொண்டு நிண்டுதான் உங்களைத் திருப்பிக் கூட்டிக் கொண்டு வருமாம். அது மட்டுமில்லை, இடைவேளைக்கு நீங்கள் வகுப்பிலை இருக்காமல் ஓடி வந்து காருக்கை ஏறி ஏசி போட்டிட்டு இருந்து படிப்பீங்கள் எண்டு அங்கை படிப்பிச்ச வாத்திமார் சொல்லக்கேள்வி.அப்பிடிப் படிப்பின்ரை அருமையை விளங்கின உங்க ளுக்கு நாட்டிலை கஷ்டப்படுகிற ஏழை எளிய சனத்தின்ரை வசதிவாய்ப்பைப் பற்றித் தெரிய வாய்ப்பிருந்திருக்காது எண்டு நினைக்கிறன். வெளிக்கிட்டால் பள்ளிக்கூடம், ,வந்தால் வீடு எண்டு இருந்த ஆளுக்கு, இதெல்லாம் விளங்கும் எண்டு சொல்லேலாது.

அது போக, கொரோனா எண்டும் பாராமல் பள்ளிக்கூடங்களைத் திறந்து வைச்சிருக் கிறியள். திறந்த மற்ற நாளே ஒயில் விக்கிற ஆளுக்குக் கொரோன வந்திட்டுதெண்டு கிளிநொச்சியிலை உள்ள பள்ளிக் கூடங்களை எல்லாம் மூடிப்போட்டியள்.நாட் டிலை ஒரு பகுதியிலை பாடம் நடக்குது.சில பகுதிகளிலை சமூகமுடக்கம். பிள்ளை யள் பள்ளிக்கூடம் போகேல்லை. என்னெண்டு நாட்டிலை கல்விச் சமநிலையைப் பேணப்போறியள்?

கொரோனாவுக்கை எலக்சன் நடத்தினியள். சோதினையளை நடத்தினியள். நாட் டைத் திறந்துவிட்டியள். கட்டுநாயக்காவிலை கொரோன கொத்தணியாப் பரவின தாலை நாட்டுக்குப் பொருளாதாரத்தைக் கொண்டு வாற பல கொம்பனியள் பூட்டு. இப்ப பள்ளிக்கூடங்களையும் திறந்து வைச்சிருக்கிறியள். உதாலை என்ன நடக்கப் போகுதோ எண்டு நினைக்க எனக்குப் பயமாய்க்கிடக்கு.

**தாங்கள் மேல் அதியட்சமுள்ள**
**அப்பாவி அன்னமுத்து.**

விளையாட்டு

ஆர்.லயனல்



### ஆர்ஜென்ரீனாவின்

# அற்புதன்

கால்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் தலைவரான ரியாகோ மரடோனா தனது 60ஆவது வயதில் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது இறப்பு உலகெங்கும் உள்ள கால்பந்தாட்ட ரசிகர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. மீளா அதிர்ச்சியில் அவர்கள் உறைந்துள்ளனர்.

ஐரோப்பியர்கள் அதிகம் உரிமைகொண்டாட எத்தனித்த கால்பந்தாட் டத்தை தென்னமரிக்கா நோக்கி நகர்த்திச் சென்றவர்களில் இருவர் மிகமிக முக்கியமானவர்கள். ஒருவர் பிரேசிலின் கால்பந்து மேதை பீலே. இன்னொருவர் மரடோனா. இதனால்தான் மரடோனா அதிக மாகக் கொண்டாடப்படுகின்றார். ஆர்ஜென்ரீனா, பிரேசில், சிலி, பெரு, மெக்சிக்கோ ஆகிய தென்னமெரிக்கத் தேசங்களில் கால்பந்தாட் டம் உச்சம் தொடுவதற்கு மரடோனாவின் பங்கு தவிர்க்க முடியாதது. 1986ஆம் ஆண்டு மரடோனாவின் தலைமையில் ஆர்ஜென்ரீனா உல கக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதன் பின்னர் நடைபெற்ற கோப்பா அமெரிக்கத் தொடர்களிலும் சாதித்தது. 2000ஆம் ஆண்டில் நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரரான மரடோனாவை பிபா அங்கீகரித்தது.

மரடோனா களத்தில் எவ்வளவு பலமானவரோ அந்த அளவுக்குக் களத் துக்கு வெளியில் அவர் பலவீனமானவர். மைதானத்தில் இருக்கும் மர டோனாவின் பிம்பம் மைதானத்துக்கு வெளியில் அதற்கு நேரெதிரா னது. அதாவது ஒரு கால்பந்தாட்ட மேதையாக மரடோனா வாழ்ந்து காட்டவில்லை என்பதே நிதர்சனம். மரடோனாவின் கோல்களைப் போன்று அவரின் பெண் நண்பிகளின் பட்டியலும் நீளமானது. வாரத் துக்கு ஒருத்தி என்பதுதான் அவரின் 'பொலிஸி'. மது, மாது, சூது மூன் றிலும் மரடோனா கொடிகட்டிப் பறந்தார். அளவுக்கு அதிகமாக மதுப் பழக்கமும் மரடோனாவை ஆட்கொண்டிருந்தது. தென்னமரிக்கக் கண்டத்துக்கே உரித்தான கொக்கெய்ன் போதைக்கு மரடோனா அடிமை. தெளிந்த நிலையில் இருப்பதை விடவும் அவர் போதையில் இருப்பதுதான் அதிகம் என்று சர்வதேச ஊடகங்கள் பலவும் காட்ட மாகக் கருத்துத் தெரிவித்திருந்தன. எது எப்படியோ, அவர் கொண்டா டப்பட வேண்டியவர்தான். தற்போது கலங்கிநிற்கும் கால்பந்தாட்ட உலகமே அதைப் பறைசாற்றும்.

**'கடவுளின் கரத்தாலேயே கோல் அடித்தவன் அல்லவா?'**

## கோலி என்றால் பயம்



இந்திய அணிக்கு எதிராக வார்த்தை மோதலில் ஈடுபடப்போவதில்லை. கோலி இருக்கும் வரை யில் அதைச் செய்ய நாம் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் வீரரான வோர்ணர். 'கோலியை வார்த்தைகளால் சீண்டி அவரை உசுப்பேற்றி தன் தலையில் மண்போடும் வேலையை ஆஸ்திரேலிய அணி செய்யக்கூடாது' என்று அந்த அணியின் முன் னாள் தலைவர் இயன் சப்பல் தெரிவித்திருந்த நிலையில் அதே கருத்தை தாமும் தெரிவித்துள் ளார் வோர்ணர். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்துடன் கோலி நாடு திரும்புகின்றார். தனது முதலாவது குழந்தையைக் காண்பதற்காகவே அவர் நாடு திரும்புகின்றார். கோலி நாடு திரும்பிய பின்னர் வேண்டுமானால் இந்திய அணியுடன் வார்த்தை மோதலில் ஈடுபடுவதுபற்றிச் சிந்திக்கலாம் என் றும் வோர்ணர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

**'கோலியோடு கோழிச்சண்டை போடமுடியாதோ?.'**